வெளியீடு 10-6-2002 Issued 10-6-2002

507/2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஆகஸ்ட் 23, 2001 – தொகுதி 5 – எண் 2

**Thursday the 23rd August, 2001 – Volume 5 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

5807
2002

## 23-8-2001

### உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 103 - 129 |
| **2. தகவல் கோரல்–** | |
| (அ) தண்ணீரின்றி வேலூர் மக்கள் பாதிப்பு | 129 |
| (ஆ) காட்பாடி வெடி மருந்துத் தொழிற்சாலை வெடி விபத்து | 129 - 133, 134 - 135 |
| (இ) திருவாரூர், நாகை மாவட்டங்களில் குடிசைகள் தீப்பற்றி எரிதல் | 133 - 134 |
| (ஈ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளை விரைந்து எடுத்துக்கொள்ளுதல் | 134 |
| **3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்**–தொடர்ச்சி | 135 - 213, 232 - 270 |
| டாக்டர் க. பொன்முடி | 135 - 143, 145 - 146, 148 - 156 |
| திரு. போளூர் வரதன் | 157, 159 - 162, 164 - 168 |
| திரு. பி.எம். நரசிம்மன் | 169 - 176 |
| திரு. சி. ஞானசேகரன் | 177 - 194 |
| திரு. ஜி. கணேசன் | 195 - 204, 206 - 208, 210 - 213 |
| திரு. இரா. திருமாவளவன் | 232 - 244 |

223439




பக்கங்கள்

3. திரு[illegible]வுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்-தொடர்ச்சி

* திரு. ப. நீலகண்டன் 244 - 251

* திரு. கே.சி. கருணாகரன் 251 - 257

திரு. எம். சக்திவேல் முருகன் 257 - 264

திரு. கே.ஆர். இராமசாமி 264 - 269

4. அறிவிப்பு-

உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் 213 - 214

5. சிறப்புக் கவன ஈர்ப்பு-

காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலை வெடி விபத்து 214 - 228

* திரு. துரைமுருகன் 214 - 216

திரு. சி. ஞானசேகரன் 216 - 218

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 218 - 219

திரு. ஆஸ்டின் 220

திரு. ஜி.கே. மணி 221 - 222

* திரு. லா. சந்தானம் 222

திரு. வை. சிவபுண்ணியம் 223 - 224

* மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 224 - 228

பக்கங்கள்

6. விதி 110-ன்கீழ் அறிக்கை-

நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் நெல், அரிசி இருப்பு குறித்து 'தினமலர்' நாளிதழ் செய்திகளை மறுத்து, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சரின் அறிக்கை 228 - 232

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 270

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 7, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 ஆகஸ்ட் 23, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்."

நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றுபவர், மக்களுக்குத் தலைவர் என்று தனியே கருதி மதிக்கப்படுவார்.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 3, திரு. சி. சண்முகம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

3 -

### மகளிர் மேல்நிலைப் பள்ளி

***395-திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) பூந்தமல்லி தொகுதியில் மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2001-2001 ஆம் கல்வியாண்டில் பூந்தமல்லி தொகுதி, ஆவடி, காமராஜ் நகரிலுள்ள அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பூந்தமல்லி தொகுதியில் தனியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் மேல்மணல்மேடு, காமராஜ் நகர் ஆகிய இரண்டு இடங்களில் இருக்கின்றன. இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியில் Plus One, Plus Two வகுப்புகளில் மாணவர்களைச் சேர்க்கின்றார்கள். பூந்தமல்லி பகுதியில், சென்ற ஆண்டு அண்ணா மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு அனுமதி வழங்கியும், இதுவரைக்கும் செயல்படாமல் இருக்கிறது. மக்களிடமிருந்து வாங்கியது 5 இலட்சம் ரூபாய்; இரு மடங்காக அரசாங்கம் கொடுத்த 10 இலட்சம் ரூபாய், இவை வழங்கப்பட்டும், அந்தப் பள்ளி தொடங்கப்படுவது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே நிலுவையில் இருக்கிறது. அதை உடனடியாக அரசு கவனத்தில் கொண்டு, அம்மையார் அவர்கள் இக்கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தக் கோரிக்கையினைக் கருத்திற்கொண்டு, ஆவன செய்ய பரிசீலிக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன். இது பூந்தமல்லி குறித்த கேள்வி, வேலூர் அல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றும் செய்வதற்கு 2 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்கிற ஒரு நியதியை இப்போது அரசாங்கம் வைத்திருக்கிறது. பல கிராமங்களில் இருக்கக்கூடிய பள்ளிகள், குறிப்பாக மலைப் பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகள், குக்கிராமங்களில் இருக்கக்கூடிய அந்த உயர்நிலைப் பள்ளிகள், அந்த 2 இலட்சம் ரூபாயைக் கட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிற ஒரு நிலையை இந்த அரசு பரிசீலித்து, அத்தகைய சில பள்ளிகள் — குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கொணவட்டம் போன்ற பகுதிகளில்



இருக்கக்கூடிய பள்ளிகளில் பணம் கட்ட முடியாமல் ஊர்க்காரர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அதுபோன்ற பள்ளிகள் — 2 இலட்சம் ரூபாயைக் கட்டத் தேவையில்லை என்கிற ஒரு விதிவிலக்கை அரசு அளித்து, இந்தப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ இப்போதுதான் இத்தகைய ஒரு விதிமுறை வந்ததாகச் சொல்லியிருக்கிறார்; கிடையாது. இது பல ஆண்டுகளாக இருக்கிற ஒரு விதிமுறையாகும். அவர் கேட்டுக் கொண்டதைப் போல, பணம் கட்ட முடியாத சில பள்ளிகள் இருக்கலாம், இல்லை என்று சொல்லவில்லை. அதைத் தளர்த்துவது குறித்து நாங்கள் பரிசீலனை செய்கிறோம். ஆனால், அதில் ஓர் இடர்ப்பாடு இருக்கிறது. ஒருவருக்குத் தளர்த்த ஆரம்பித்தால் பல பேர், கட்டுவதற்கு வாய்ப்பு இருப்பவர்களும் கட்டாத நிலை ஏற்படும். இப்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில் அதனை உடனடியாகத் தளர்த்திவிட முடியாது. இரண்டாவதாக, மலைப் பகுதிகளிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு சில சலுகைகளைக் கேட்டு இருக்கிறார்கள். அது Tribal பள்ளியாக இருந்தால் அதற்கு விதிவிலக்கு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டிலே புதிதாக எத்தனை மேல்நிலைப் பள்ளிகளை அனுமதிக்கலாம் என்று அரசு ஏதாவது முடிவு செய்திருக்கிறதா? அப்படியென்றால், எத்தனை பள்ளிகள் புதிதாக அனுமதிக்கப்படும்? இப்போது கன்னியாகுமரி மாவட்டத்திலே பல மேல்நிலைப் பள்ளிகளைப் புதிதாக அமைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இது வந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பதவி ஏற்றவுடனேயே பல்வேறு மாறுதல்களைப் புரட்சிகரமாகச் செய்துள்ளது. அதிலும் குறிப்பாக, கிராமப்புறப் பெண்கள், வசதியற்றோர் அனைவரும் மேல்நிலைக் கல்வியைத் தொட வேண்டுமென்பதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்ததன்படி, படிப்படியாக அனைத்து உயர்நிலைப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கும் திட்டம் உள்ளது. அதன்படி இந்த ஆண்டு மட்டும் 125 உயர்நிலைப்

பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக புரட்சித் தலைவி அவர்கள் அனுமதியுடன் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்தும் சில கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அவற்றை அரசு பரிசீலனை செய்யும்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளைத் தாம் உயர்த்துவது குறித்து கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, அரசு விதிமுறைகளைத் தளர்த்தினால் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது என்ற கருத்தைச் சொன்னார்கள். பெண்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அரசு, அரசாங்கத்தின் சார்பில் வருகின்ற பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் பணம் கட்டத் தேவையில்லை என்ற ஓர் உத்தரவை வழங்கினால் நன்றாக இருக்கும். பெண்கள் கல்வி கற்பதற்கும், கிராமப்புறங்களிலே உள்ள வசதியற்ற விவசாயிகள் குடும்பத்திலே இருக்கின்ற பெண்கள் பள்ளிக்கு வருவற்கும் இது உதவியாக இருக்கும். Fees கட்ட வேண்டும், புத்தகம் வாங்க வேண்டும், துணி வாங்க வேண்டும் என்ற இப்படிப்பட்ட பிரச்சினைகளை முன்வைத்து அவர்கள் பெண்களை மேல் படிப்பிற்கு அனுப்புவதற்கு யோசிக்கிறார்கள். அவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற விதத்தில் அரசாங்கம் பெண்களுக்காகத் தொடங்குகின்ற மேல்நிலைப் பள்ளிகளில், அவர்கள் பணம் கட்டவேண்டும் என்கிற விதியைத் தளர்த்தி, மேல்நிலைப் பள்ளிகள் தொடங்க அந்தப் பணத்தை அரசே செலுத்தி, அந்தப் பெண்களுடைய படிப்பை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெண்கள் கல்வியைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். எங்களுடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள், பெண்கள் கல்வியைப் பெறுவதற்காக பல்வேறு சலுகைகளை, அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, ஆதிதிராவிடப் பெண்களுக்கெல்லாம், Plus One, Plus Two படிப்பவர்களுக்கு, 80 ஆயிரம் மிதிவண்டிகளைத் தருவதற்கு அறிவிப்பு செய்திருக்கிறார்கள். அதுபோல, பெண்கள் கல்வியில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டுக்





கொண்டுதான் இருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் பெறுவதற்கு, பெண்கள் பள்ளிகள்கூட பல கிராமங்களில் அரசு நிர்ணயித்த 2 இலட்சம் ரூபாயைக் கட்டுவதற்கு முன்வருகின்றன. அப்படி முன்வந்தும் அவர்களுக்கு இப்போது கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, இத்தகைய ஒரு கடினச் சூழ்நிலையை இதுவரை யாரும் குறிப்பிடவில்லை. அப்படி வந்தால் அதுபற்றிப் பரிசீலனை செய்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலத்தில் தனியார்களுக்கு நேரடியாக மேல்நிலைப் பள்ளிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி ஒதுக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று இருப்பதாகச் செய்திகள் வாயிலாக அறிந்திருக்கிறேன். அதன்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு, நேரடியாக தனியார்களுக்கு மேல்நிலைப் பள்ளிகள் வழங்குவதற்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன தவறு நடந்திருந்தாலும் அதுபற்றித் தீவிர ஆராய்ச்சிகள் செய்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு இந்த அரசு தயங்காது. தனியாருக்கு மேல்நிலைப் பள்ளிகள் கொடுக்கப்படுமா என்று உறுப்பினரவர்கள் இப்போது கேட்கிறார்கள். இப்போது நடந்து கொண்டிருக்கும் உயர்நிலைப் பள்ளிகள் அல்லது நடுநிலைப் பள்ளிகள் பல இருக்கின்றன. அத்தகைய பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால் சிலர் truncated scheme என்று சொல்வதுபோல, Plus 1, Plus 2 மட்டும் நடத்துவதற்காக வேண்டுகோள் வைக்கின்றார்கள். அதை இந்த அரசு இப்போது தருகிற நிலையில் இல்லை. இதைப் பற்றி ஆராய்ந்து, பிறகு சொல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில்கூட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு புளியங்குடி நகராட்சியில் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு 1 இலட்சம் ரூபாய் கொடுத்தோம். இப்போது இரண்டு பள்ளிகள் மேல்நிலைப்

பள்ளிகளாக வழங்கப்பட்டிருக்கின்றன. கிராமப்புறமாக இருந்தாலும் 2 இலட்சம் ரூபாய் கட்டித்தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறத்திலே இருக்கிற மேல்நிலைப் பள்ளிகள் மூலம் டாக்டர்கள், பொறியாளர்கள் வருவதற்கு கிராமப்புற மாணவர்களுக்கு சலுகை அறிவித்ததால் ஏழை எளிய மாணவர்கள் படிப்பதற்கு ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி, தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும்கூட இப்போது நல்ல முடிவு எடுத்திருக்கிறீர்கள். அதில் 40 இடங்கள் என்பதில், 30 இடங்களை அரசு எடுத்துக்கொண்டு, மீதம் 10 இடங்களை மேனேஜ்மெண்டுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும். பெரிய வியாபாரம் பண்ணுகிறார்கள். 2 இலட்சம், 3 இலட்சம் என்று...

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஈஸ்வரன், மேல்நிலைப் பள்ளி விவகாரம் இதோடு முடியட்டும்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இந்த அரசு தைரியமாக ஒரு நல்ல முடிவு எடுத்திருக்கிறது. அதை மீண்டும் ஒரு இலட்சம் ரூபாயாக ஆக்குவதற்கு மறுபரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசின் நிதிநிலைமை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். இந்த நிலையில் பணம் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் என்பதும் பெரிதல்ல; அதையும் உணர்ந்திருக்கிறது இந்த அரசு. ஆனால், மக்கள் அத்தகைய கல்வி நிறுவனங்களில் எந்த அளவிற்கு ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதற்காகத்தான் அது வைக்கப்பட்டிருக்கிறதேயொழிய வேறல்ல. அந்தப் பணத்தால் மட்டும் கல்வி நிலையத்தை நடத்திவிட முடியாது. ஆகவே, கல்வி நிலையத்தை நிறுவுவதற்காக பல இலட்சக்கணக்கான பணம் தேவைப்படுகிறது. அதற்கு எல்லாச் செலவையும் செய்வதற்கு அரசு முன்வருகிறது. மக்களுடைய உணர்வை அதில் காண்பிப்பதற்காகத்தான் ஒரு model-ஆக, ஒரு example-ஆக, ஒரு token-ஆக அதனை வைத்திருக்கிறோமேயொழிய, இதை ஒரு பெரிய பணச்சுமையாகக் கருதவில்லை. மேலும் உறுப்பினர்களுக்கு இப்போதெல்லாம் M.L.A. Fund இருக்கிறது. அதிலேகூட நீங்கள் நிதி ஒதுக்கித் தரலாம். ஆகவே, அத்தகைய நிலைமை அந்தப் பகுதியில் இருந்தால் உங்களுடைய நிதியிலே தந்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளாக 100, 105 பள்ளிக்கூடங்களுக்கு மேல் உயர்த்தப்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சர் அறிவித்தார்கள், மகிழ்ச்சி. கோவை மாநகராட்சிக்குட்பட்ட இடத்திலேகூட சமீப உத்தரவின் பேரிலே ஐந்து பள்ளிக்கூடங்கள் மேல்நிலைப் பள்ளிக்கூடங்களாக உயர்த்தப்பட்டன. ஆனால், இப்போது வரைக்கும் அதிலே உரிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை என்ற புகார் இருக்கிறது. அதனாலே பிள்ளைகள் உரிய வகையிலே படிக்க முடியவில்லை என்ற நிலையிருக்கிறது. தவிர, தேர்தல் அறிக்கையிலேகூட மாணவர்களுடைய எண்ணிக்கையும், ஆசிரியர்களுடைய எண்ணிக்கையும் திருத்தி அமைக்கப்படும் என்றெல்லாம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆகவே, இது சம்பந்தமாகவும், மேல்நிலைப் பள்ளிகளுக்கு உரிய ஆசிரியர்கள் நியமனம் செய்வது சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசானது, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, பல பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதை உணர்ந்துதான் இந்த ஆண்டிலே முதல் தவணையாக, இன்னும் ஒரு வாரத்துக்குள்ளாக சுமார் 4,000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். அதற்கான நேர்முகத் தேர்வு எல்லாம் முடிந்துவிட்டது. நீங்கள் சொல்வது, மேல்நிலைப் பள்ளிகளுக்கு வேண்டிய B.T. Assistants - அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் Teachers Recruitment Board விரைவாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் நூற்றுக்கு மேற்பட்ட அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தி வருகின்றது இந்த அரசு. ஆனால் சில பகுதிகளில் தனியார்கள் மிக அதிகமாக உயர்நிலை, நடுநிலைப் பள்ளிகளை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கிறார்களே, அவ்வாறு தனியார்கள் நிதியுதவியுடன் நடத்துகிற பள்ளிகளையும் ஆண்டுதோறும் தரம் உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்வதோடு...

[2001 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனை, அறிந்துகொள்வதோடு நிறுத்துங்கள்.

**திரு. மு. அப்பாவு:** கடந்த 1991-க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை. இந்த அரசு கருணையோடு அந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதல் கேள்வியாக வைத்திருப்பது, தனியார் உதவி பெறும் பள்ளிகளும் தரம் உயர்த்தப்படுமா என்பது. தேவையான சில இடங்களில் அது பரிசீலனை செய்யப்படும். அதோடு self-finance என்ற scheme-ல் தாங்களே சுயநிதிப் பணத்தைப் பெருக்கி, அதன்மூலமாக நடத்துவதாகச் சில வேண்டுகோள்கள் வந்திருக்கின்றன. அப்படி வரும்போது அதில் அரசுக்கு எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது. உடனடியாகத் தந்துவிடுகிறோம். ஆனால், பண உதவி நாடும் சில பள்ளிகளுக்கு case by case என்ற அதே மெரிட்டிலே எடுத்துத்தான் தரப்படுகிறது. இரண்டாவது கேள்வியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது, ஆசிரியர்களுக்குப் பல மாதங்களாக சம்பளம் தரப்படாமல் இருக்கிறது என்பதாகும். அதைத் தருவதற்கு அனைத்து நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கும். ஆனால், சில கல்வி நிலையங்களில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களுக்குள்ளே டிரஸ்ட்டிகளுக்குள்ளே சில போட்டிகளும், சில வழக்குகளும் போட்டுக்கொண்டு தொல்லைபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய சில பள்ளிகள் அதன் காரணமாகத்தான் சில ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்காமல் இருக்கின்றன. வேண்டுமென்றே அரசின்பால் எதுவும் தவறு இருப்பதாகக் கருதவில்லை.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் ஒரே ஒரு மகளிர் மேல்நிலைப் பள்ளி மட்டும்தான் இருக்கிறது. அதில் 25 வகுப்புகள் இருக்கின்றன. ஆனால் அங்கு 10 வகுப்புகளுக்கான அறைகள்தான் இருக்கின்றனவே தவிர, மீதமுள்ள



2001 ஆகஸ்ட் 23]

வகுப்புகள் மைதானத்திலும், பள்ளியில் இருக்கக்கூடிய மரங்களுக்குக் கீழேயும் நடந்து கொண்டிருக்கின்றன. நான் சட்டமன்ற உறுப்பினர் ஆனதற்குப் பிறகு அந்தப் பள்ளிக்கு நேரடியாகச் சென்று பார்த்து வந்திருக்கிறேன். ஆகவே, அந்த மாணவிகளினுடைய பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, திண்டுக்கல் என்பது மாவட்டத்தினுடைய மிகப் பெரிய தலைநகர். மாணவிகளுக்காவது ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. மாணவர்களுக்கு ஒரு மேல்நிலைப் பள்ளிகூட திண்டுக்கல்லிலே இல்லை. மாணவர்களுக்கான உயர்நிலைப் பள்ளி அங்கே நல்ல இட வசதியோடும், கட்டட வசதியோடும் இருக்கிறது. ஆகவே, மாணவர்களுடைய நிலையையும் கருதி, திண்டுக்கல்லில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பல இடங்களில், பல பள்ளிகளில் போதிய கட்டட வசதி இல்லாமல் மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் அவதியுறுவதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். அது உண்மைதான். ஆனால், அக்குறையை நீக்குவதற்காகப் பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. அதில் அரசின் மூலமாக எந்த அளவு பணம் ஒதுக்கீடு செய்ய முடியுமோ, அந்த அளவு ஒதுக்கத் தயாராக இருக்கிறோம். அதுமட்டுமல்ல, NABARD போன்ற வங்கி ஸ்கீமின் மூலமாகவும் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறது. அதைவிட அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் ஒரு வேண்டுகோள் வைத்துக்கொள்கிறேன். உங்கள் உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நீங்கள் கல்வி நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்குப் பணம் ஒதுக்கித் தந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் அடுத்த கேள்விக்குப் போய்விடுவோம். மாண்புமிகு கல்வி அமைச்சர் ஆபத்தான யோசனையைச் சொல்கிறார். (சிரிப்பு)

வினா எண் 4, திரு. சி. ஞானசேகரன், திரு. ஐ. கணேசன், திரு. ஆஸ்டின், திரு. நா. சந்திரமோகன், டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி மற்றும் திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

4–

## ஆசிரியர் பயிற்சி

***1104–திரு. சி. ஞானசேகரன்:**
**திரு. ஐ. கணேசன்:**
**திரு. ஆஸ்டின்:**
**திரு. நா. சந்திரமோகன்:**
**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**
**திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் அரசுத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்களா?

(ஆ) தற்போதுள்ள அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மூன்று மாத காலம் தனிப் பயிற்சி அளித்து அவர்களுக்குச் சான்றிதழ் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகளின்படி, இத்தகைய பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 3 மாத காலம் தனிப் பயிற்சி அளித்து தேர்வு எழுத அனுமதித்து, அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சுமார் 12,000 மாணவர்கள் ஏற்கெனவே தேர்வு எழுதி, அவர்கள் இன்னும் சான்றுகளைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். இன்னும் ஒரு 12,000 பேர் தேர்வே எழுத முடியாமல் இருக்கிறார்கள். இப்படி ஆசிரியர் பயிற்சி பெற்று, இப்போது நட்டாற்றில் விட்டதுபோல தவித்துக்கொண்டிருக்கிற பாதிக்கப்பட்ட, 25,000 மாணவர்களின் நிலையைப் பார்த்து, இந்த அவையிலே பல முறை நாங்கள் குரல் எழுப்பிவிட்டோம். சென்ற ஆட்சியிலே இதுகுறித்து அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு உறுப்பினர்





திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவைக்கூடப் போட்டார்கள். அந்தக் குழு ஒரு பரிந்துரையைச் செய்தது. ஏற்கெனவே உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருக்கக்கூடியவர், முன்பு அரசு வழக்கறிஞராக இருந்தபோது அவர் என்ன opinion கொடுத்தாரோ, அந்த opinion-னுடைய அடிப்படையிலேயும் மற்றும் உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுடைய கருத்துகளை ஆய்ந்தும், எப்படியாவது அவர்களைக் கரையேற்றிவிட வேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொல்லி, திரு. பாலகிருஷ்ணன் கமிட்டி recommendation-ஐக் கொடுத்தது. ஆனால், அப்போது இருந்த அரசு அந்தக் கமிட்டியிலே கல்வித் துறையினுடைய செயலாளரையும் உறுப்பினராகச் சேர்த்து, செயலாளருடைய கருத்து மட்டும் அதிலே ஏற்கப்பட்டு, தலைவருடைய கருத்து ஓரம் கட்டப்பட்டுவிட்ட காரணத்தினாலே அந்தக் கமிட்டி எந்த வகையிலேயும் பயன் இல்லாமல் போய்விட்டது. ஆகவே, இப்போது நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், உச்ச நீதிமன்றத்தில் இருந்த நீதிபதிகூட, ஏற்கெனவே இந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் படித்த பள்ளிகளிலே, infrastructure– அடிப்படை வசதிகளே இல்லாமல் இருந்த காரணத்தினாலே, அப்படிப்பட்ட பள்ளிகளிலிருந்து வந்த மாணவர்களை அரசுத் தேர்வு எழுதவிட முடியாது என்றுதான் அறிவுறுத்தினார்களேயொழிய, இப்போது நீங்கள் அந்தக் கட்டமைப்புகளையெல்லாம் அதுபோன்ற பள்ளிகளிலே ஏற்படுத்தி, அந்த மாணவர்களை, ஓராண்டு என்றால் – இப்போது 35 வயதுக்கு மேலே யாரையும் வேலையிலே சேர்க்க முடியாது என்று ஒரு ஆணை, சுற்றறிக்கை வேறு விட்டிருக்கிறீர்கள்...

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** வந்துவிட்டேன். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், எப்படியாவது பாதிக்கப்பட்ட அந்த 25 ஆயிரம் மாணவர்களுக்கு, இந்த ஆண்டே ஏதாவது ஒரு பயிற்சியைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், ஏற்கெனவே Correspondence Course-ல் அவர்கள் B.Ed. தேர்வைக்கூட எழுதி சான்றிதழ்களைப் பெற முடியும் என்று இருக்கிறபோது, Secondary Grade அளவில் இருக்கக்கூடிய இந்தப் படிப்புக்கு எப்படியாவது நீங்கள் போஸ்டலிலேயாவது ஒரு Crash Course கொடுங்கள். இல்லையென்று சொன்னால், கல்வி நிலையங்களிலே எப்படியாவது சேர்ப்பதற்கு ஒரு ஆய்வை நடத்துங்கள். இந்த ஆண்டே இவர்களையெல்லாம் கரை

சேர்ப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்மையிலேயே ஆசிரியர் பயிற்சி பெற்று தேர்வு பெற முடியாமல் அவதியுறும் மாணவர்களுக்காகவும், அந்தக் குடும்பங்களுக்காகவும் இங்கே வாதாடிப் பேசுவது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இந்த அரசு, புரட்சித் தலைவி அரசு, அதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்கும் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, சுமார் 28,366 பேர் இதனால் அவதிப்படுகிறார்கள். இத்தகைய பள்ளிகள், Training School எல்லாம் வேண்டாம் என்று சொன்னதால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நீக்குவதற்குப் பல்வேறு முயற்சிகளை அரசுகள் எடுத்து வந்திருக்கின்றன. இந்த அரசு, 1993-ல் பல உத்தரவுகளைப் போட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் வைத்ததுபோல, அவர்களுக்கெல்லாம் இருக்கும் வசதிகளை வைத்து பயிற்சிகளைத் தந்து அவர்களைக் கரையேற்றிவிடலாம் என்று எல்லா நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. ஆனால், அதையெல்லாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலே அணுகி, அவர்களுக்கு ஏற்றாற்போல் யாரையும் கரையேற்றவிடாமல் அவர்கள் இழுத்துத் தள்ளிவிட்டதன் காரணமாகத்தான் இந்த நிலைமையில் இப்போதும் அத்தகைய நண்பர்கள் எல்லாம் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். காரணம், ஓர் அரசு சில திட்டங்களை வகுத்தால், அதைச் செயல்படுத்துவதற்கு முற்படும்போது ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி, நிர்வாகமோ, மற்றவர்களோ, கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். பிறகு என்ன ஆகிறது என்றால், அந்த நேரத்திலே எந்த முடிவும் எடுக்க முடியாமல் ஒரு இக்கட்டான நிலை ஏற்படுகிறது. கோர்ட் எதிலும் ஒரு எதிரான தீர்ப்பைத்தான் தந்துகொண்டிருக்கிறது. இந்த மாணவர்கள் பெற்ற கல்வி எல்லாம் தரம் தாழ்ந்தவை என்று உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அவர்கள் பெற்ற பயிற்சியை எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறது. அடுத்தபடியாக, அதற்கு மாற்றாக, உயர்நிலைப் பள்ளிகளிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே வசதியுள்ள பள்ளிகளிலே இத்தகைய பயிற்சியைச் செயல்படுத்துவதற்கு 1993-லே அரசு முற்பட்டது. அதையும் உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. இப்படிப் பல்வேறு கட்டங்களில் உச்ச நீதிமன்றம் தலையிட்டதன் காரணமாக, உயர் நீதிமன்றம் தலையிட்டதன் காரணமாக, செயல்படுத்த முடியாத நிலையிலே, மாண்புமிகு உறுப்பினர்



சொன்னதுபோல, மாண்புமிகு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் தலைமையிலே குழு அமைக்கப்பட்டு, பல்வேறு கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நல்ல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கருத்துகளும், உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றத்திற்கு ஏற்புடையதாக இல்லை. இந்தச் சூழ்நிலையில் இப்போது, இன்றைய அரசு, புரட்சித் தலைவியினுடைய அரசு, நீங்கள் சொன்னது போன்று அந்தப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு எப்படியேனும் நல்வழி காட்ட வேண்டும் என்பதற்காக அரசினுடைய பயிற்சிப் பள்ளிகளிலும், மற்ற மாவட்ட பயிற்சி நிலையங்களிலும் Shift System மூலம் இந்த ஆண்டே அவர்களைக் கரையேற்ற வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்தது. அதன்படி, முன்பு பயிற்சி பெற்ற அனைவரும் மீண்டும் இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பெற வேண்டும். அதில் ஒன்றும் exemption கிடையாது. அதுதான் உண்மை. ஆகவே, நீங்கள் சொன்னதுபோல, இந்த ஆண்டு அந்த அளவிற்கு அவர்கள் எல்லோருக்கும் சேர்க்கை தந்து, அவர்களுக்கெல்லாம் முறையாக மீண்டும் இரண்டு ஆண்டு பயிற்சி தந்து, அவர்களெல்லாம் சான்றிதழ் பெறுவதற்காக அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. அதோடு, இதற்காக மத்தியிலுள்ள என்.சி.ஈ.ஆர்.டி. மூலம் நாங்கள் கேட்டிருக்கிறோம். அதற்கான எல்லா முயற்சிகளிலும் இந்த அரசு இறங்கியிருக்கிறது. நாங்கள் சொன்னதுபோல, இதனையொட்டி தேசிய ஆசிரியர் குழுமத்தின் அனுமதியும் கோரப்பட்டுள்ளது. அந்த உத்தரவு கிடைத்தவுடனேயே பாதிக்கப்பட்ட அனைவருக்கும் பயிற்சி அளிப்பதற்கு இந்த அரசு முனைப்புடன் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28,360 குடும்பங்களுக்கு விளக்கேற்றி வைக்கக்கூடிய அளவிற்கு கல்வி அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு பயிற்சிப் பள்ளியிலே மீண்டும் 2 ஆண்டு காலம் பயிற்சி அளிக்கப்படும் என்று சொன்னார்கள். அதிலும் குறிப்பாக இவர்கள் எல்லாம் பயிற்சி முடித்து 10 ஆண்டு காலத்திற்கு மேலாகிறது. முந்தைய அரசு காலத்திலும் இந்தப் பயிற்சி கொடுக்கப்பட்டது. அவர்களுடைய வயது வரம்பைத் தளர்த்தினால்தான் இப்போது நீங்கள் சொன்ன அந்தத் திட்டத்தைச் சிறப்பான முறையிலே செயல்படுத்த முடியும். ஆகவே படித்த ஏழை கிராமக் குழந்தைகளுக்கு

அந்தப் பயிற்சியை மீண்டும் கொடுத்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க இந்த அரசு உத்தரவாதம் கொடுக்குமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் வைத்ததற்கிணங்க புரட்சித் தலைவியின் இந்த அரசானது அத்தகைய மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று கருதியுள்ளது. பயிற்சியை மீண்டும் அளித்து நீங்கள் சொன்ன வயது வரம்பைப் பற்றியும் இந்த அரசு ஆலோசனை செய்யும். இரண்டாவதாக, அனைவருக்கும் வேலை தரப்படுமா என்ற உத்தரவாதம் கொடுக்க முடியாது. அந்தந்த நிலையிலேயிருக்கும் காலியாக உள்ள இடங்களுக்கு ஏற்றாற்போல வேலைவாய்ப்பு தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே சேர்ந்து படித்த இந்த மாணவ மாணவியர்கள் உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்படி இப்போது நட்டாற்றிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். 6-7-2000 தேதியிட்டு அன்றைக்குப் போடப்பட்ட அரசாணை 183-ன்படி ஓர் ஆண்டு மற்றும் இரண்டு ஆண்டுகள் அந்தப் பள்ளிகளிலே படித்துவிட்டு, தேர்வு எழுதி, சான்றிதழ் கிடைக்கப்பெறாதவர்களுக்கு அரசு பயிற்சிப் பள்ளியிலே 40 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர்களை சென்னைக்கு அழைத்து, கவுன்சிலிங் நடத்தி, அவர்களுக்கு வேலைவாய்ப்பில் 40 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்து கொடுத்தார்கள். ஆனால், முதல் ஆண்டு படித்துவிட்டு தேர்வு எழுதாத கிட்டத்தட்ட 12,000, 13,000 மாணவ, மாணவியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இதைப்போன்று 40 சதவிகித இட ஒதுக்கீட்டிலே தேர்வு எழுதி, சான்றிதழ் கிடைக்காதவர்களுடன் முதல் ஆண்டிலே தேர்வு எழுத முடியாதவர்களையும் சேர்த்து, அந்தப் பயிற்சியை அளிப்பதற்கு அரசு முன்வருமா ? ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் சொன்னதுபோல, 1992-1993-லே இந்தப் பயிற்சிப் பள்ளியிலே சேர்க்கப்பட்டவர்கள் இன்றைக்கு 9 ஆண்டுகாலம் முடிந்துவிட்டது. பலர் 30 வயதைத் தாண்டிவிட்டார்கள் அரசு வயது வரம்பை 30 என்று நிர்ணயித்திருக்கிறது. எனவே, அவர்களுக்கு மட்டும் விதிவிலக்கு வழங்கி, இந்த வயது வரம்பைத் தளர்த்துவார்களா என்பதைக் கேட்டுக்கொள்வதுடன், தனியார் நிறுவனங்கள், அரசை ஏமாற்றி





இதுபோன்ற பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கி, மாணவ, மாணவியர்கள் அங்கே பணம் கொடுத்துச் சேர்ந்ததால் இப்போது அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இப்படி மோசடி செய்த தனியார் நிறுவனங்கள்மீது அரசு நடவடிக்கை எடுத்து, அவர்களிடம் நஷ்டஈட்டைப் பெற்று, அந்தப் பணத்தை அங்கே சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு உதவித் தொகையாக வழங்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பயிற்சி தந்த நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று உறுப்பினர் கேட்கின்றார். அதற்காக கோர்ட்டுக்குப் பல பேர் சென்று, தீர்ப்புகளை வாங்கியிருப்பதன் மூலமாக இப்போது அதில் நடவடிக்கை எடுப்பதில் எந்தப் பலனும் இருப்பதாக அரசு கருதவில்லை. ஆனால், இப்போது மாணவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையைத்தான் முக்கியமான ஒன்றாக இந்த அரசு கருதுகிறது. அதற்காக அவர்களுக்கு ஏற்ற பயிற்சியினை, அவர்கள் முதல் ஆண்டு படித்திருந்தாலும் சரி, இரண்டாம் ஆண்டு படித்திருந்தாலும் சரி, பரிட்சை எழுதி சான்றிதழ் பெறாதவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வயதை நிர்ணயிக்காமல், அவர்கள் அனைவருக்கும் இந்தப் புதிய திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்ய இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் படித்த மாணவர்கள் 40 சதவிகிதம் பேர் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டும், அந்தத் தேர்வின் முடிவுகள் இதுநாள்வரையில் வெளியிடப்படவில்லை. அதுமட்டுமல்ல, 60 சதவிகிதம் மாணவர்கள் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படவில்லை. அப்படியிருக்கின்றபோது, அவர்கள் 30 வயதைத் தாண்டிவிட்டதால் அவர்கள் மீண்டும் அதே இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. அவர்களுடைய எதிர்காலம் மிகவும் பாழ்பட்டுள்ளது. அதனால், அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு அனுமதி அளிக்க அரசால் இயலுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2001 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இறுதியில் இன்னலுக்கு ஆளான மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் தரமுடியுமா என்று குறிப்பாகக் கேட்கிறார்கள். நான் முன்பே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். வேலைவாய்ப்புக்கு யாரும் உத்தரவாதம் தர முடியாது. ஆனால், அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் தர முடியுமோ அதை அரசு பரிசீலனை செய்து தர முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளத்தூர் தொகுதியில் கீரனூரில் மகளிருக்காக 1989–ல் தொடங்கப்பட்ட புனித அன்னாள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியினுடைய அங்கீகாரம் 1993–ல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இப்பள்ளியில் பயின்று தேர்வு எழுதிய 46 மாணவிகளில் இரண்டு மாணவிகள் தேர்ச்சி பெறவில்லை. தேர்ச்சி பெற்ற 44 மாணவிகளில் 23 மாணவிகளுக்குச் சான்றிதழ் கிடைக்கப்பெற்று, வேலைக்குச் சென்றுவிட்டனர். எஞ்சியுள்ள 21 மாணவிகளுக்குச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. இதில் இரண்டு மாணவிகள் திருமணம் செய்துகொடுக்கப்பட்டு, சான்றிதழ் கிடைக்காத காரணத்தால் கணவனால் திருப்பியனுப்பப்பட்டு, வாழாவெட்டிகளாக, துயரத்தின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, பாதிக்கப்பட்ட 21 மாணவிகளுக்கும் சான்றிதழ் வழங்கி, அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், சில பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற மாணவிகள் சிலர் வழக்குமன்றத்திற்குச் சென்று, அந்தச் சான்றிதழைப் பெற்றிருக்கிறார்கள். பல பேருக்குக் கிடைக்காமல் போயிருக்கிறது. அப்படிக் கிடைக்காமல் அவதியுறும் நபர்களுக்கு எல்லாம், மாணவர்களாக இருந்தாலும், மாணவிகளாக இருந்தாலும், இந்த அரசு உடனடியாக மீண்டும் அவர்களுக்குச் சான்றிதழை வாங்கித் தர முடியாத நிலையில் இருக்கிறது. ஆனால், அவர்களுக்காகத்தான் அமைக்கப்பட்டது இந்தப் புதிய திட்டம்; மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் புதிய திட்டத்தை



2001 ஆகஸ்ட் 23]

வகுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் அவர்கள் மீண்டும் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றால்தான், அவர்களுக்கு அந்தச் சான்றிதழைத் தருகின்ற நிலை ஏற்படும். ஆகவே அவர்களுக்கு வாழ்வு அளிப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த அரசு தயாராக இருக்கிறது. அதுபோல பெண்களுக்கு மீண்டும் பயிற்சி தந்து, அவர்களுக்கு தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கு. அண்ணாமலை.

**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் பிரச்சினை சம்பந்தமான கேள்விகளுக்கு விளக்கம் அளித்து, மீண்டும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்று கூறிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கோ.சி. மணி.

*முற்பகல் 10–35*

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனோடு தொடர்புடைய ஒரு கேள்வியில், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கிற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பள்ளிக் கட்டடம் கட்ட முடியுமா என்று உறுப்பினர்களெல்லாம் இப்போது கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற G.O.விலே இருக்கிற Norms–படி பார்த்தால் நிச்சயமாகப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கும், பள்ளிகளிலே கணினிமயம் செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களே, இது ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் பற்றிய கேள்வி.

**திரு. கோ.சி. மணி:** இல்லை, இல்லை, அமைச்சர் அவர்கள் சொன்னதற்காகக் கேட்கிறேன். அவர் ஏற்கெனவே பதிலாகச் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பழைய கேள்வி.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த G.O.–வை திருத்தியிருக்கிறார்களா? அல்லது ஏற்கெனவே உள்ள G.O.

அப்படியே இருக்கிறதா? அப்படியிருந்தால் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறதே. அதைப்பற்றி விளக்கமாக அறிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எம்.எல்.ஏ.-க்களுடைய தொகுதி நிதி பற்றி நான் முழு விளக்கமும் தர முடியாது. ஆனால், நான் மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னிலையில் வேண்டுகோள் வைக்கிறேன், அந்தத் திட்டத்தின்கீழ் கல்வித் தரம் உயர்வதற்காகவும், மாணவ, மாணவியர்கள் நன்றாகக் கல்வி பயில்வதற்கு நல்ல கல்விக் கூடம் அமைப்பதற்காக நீங்கள் முன்வந்தால் அரசு அதை ஏற்றுக்கொள்ளும் என்று நான் சொல்லியிருக்கின்றேன். அதற்கு வழிமுறைகள் இருக்கின்றன. நீங்கள் செயல்படுத்தலாம். G.O.-விலே இடம் இருக்கின்றது. வேறு ஒன்றும் இல்லை. G.O.-விலே இடம் இருக்கிறது. G.O.-விலே இடம் இருப்பதாலேதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் பயிற்சி என்பது முற்றுப்பெறாத நிலையிலே, கடந்த ஆட்சியிலே 5 ஆண்டுகாலம் இந்த மாமன்றத்திலே நாங்களெல்லாம் தொடர்ந்து குரல் கொடுத்தோம். அதன்படி ஐவர் குழு என்று ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழுவிலே நானும் இடம்பெற்ற நேரத்திலே, இந்தக் கோரிக்கைகளைப் பல்வேறு கோணங்களிலே அலசி, ஆராய்ந்து அரசுக்கு எடுத்துச் சொல்லியும்கூட, இடையில் கிடைத்த நிவாரணம் என்பது 20 விழுக்காடு, 40 விழுக்காடு என்று உயர்த்தப்பட்டதே தவிர முழுமையான பலன் கிடைக்கவில்லை. இங்கே அமைச்சர் அவர்கள்கூட இதிலே பல்வேறு குறைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதாவது, முதலாமாண்டு பயிற்சி பெற்றுத் தேர்வெழுதினார்கள்; அவர்கள் இரண்டாமாண்டுக்குச் செல்ல முடியவில்லை. சிலர் முதலாமாண்டு தேர்வெழுதவே முடியவில்லை. இரண்டாம் ஆண்டுக்குச் சென்றவர்கள் இரண்டாம் ஆண்டு தேர்வு எழுதினார்கள்; தேர்ச்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் கிடைக்கப்பெறவில்லை. சிலருக்கு, தேர்வெழுதி தேர்ச்சி அறிவிக்கப்படாத நிலை. இப்படி தொடர்ச்சியாகப் பல்வேறு குறைகள் இருக்கின்றன. ஆகவே, ஏறக்குறைய 10 ஆண்டுகாலம் ஆனதற்குப் பிறகு, அவர்களுக்கு வயது வரம்பும் கடந்துவிட்ட இந்தச் சூழ்நிலையிலே அவர்கள் பயின்றது தனியார் கல்வி நிறுவனம் என்ற காரணத்தினாலே இரண்டு இலட்சம்.





இரண்டரை இலட்சம் ரூபாய் கொடுத்து, இத்தனை ஆண்டுகள் வீணாகி, மீண்டும் அவர்களுக்கு வாய்ப்பு என்று வருகின்ற நேரத்திலே, மீண்டும் 2 ஆண்டுகள் படிப்பது என்பது, குழந்தைகளை எல்லாம் வைத்துக்கொண்டு குடும்பத்தைப் பராமரிக்க முடியாத சூழ்நிலையிலே மிகவும் கடினமாக இருக்கும். ஆகவே, இதை உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு என்று சொல்லியோ அல்லது இதற்கு டில்லியிலே இருக்கக்கூடிய தேசிய ஆசிரியர்கள் குழுமத்தினுடைய அனுமதியில்லை என்று சொல்லியோ, நிராகரித்துவிடாமல் 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு' என்ற அந்த அடிப்படையிலே, நம்முடைய தமிழக அரசு எப்பாடுபட்டாவது முயற்சி செய்து இதைப் பரிசீலனை செய்ய வேண்டும். காரணம், இவர்களோடு படித்தவர்களில் சிலர் சான்றிதழ்களைப் பெற்று வேலைக்கும் சென்றுவிட்டார்கள். ஆகவே, அவர்களுக்கு ஒரு நியதி, மற்றவர்களுக்கு ஒரு நியதி என்று இல்லாமல், எப்பாடுபட்டாவது, முதலாமாண்டு பயிற்சி முடித்தவர்கள் இரண்டாம் ஆண்டு பயிற்சியிலே சேருவதற்கும், இரண்டாம் ஆண்டு பயிற்சி முடித்தவர்கள், சான்றிதழ் கிடைத்து வேலைக்குச் செல்வதற்கும் வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதை ஆவலோடு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, எங்களுக்கும், அதுவும் குறிப்பாக, புரட்சித் தலைவி அவர்களுக்கும் இதைச் செய்வதற்கு மனம் இருக்கிறது; ஆனால் மார்க்கம்தான் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்த மார்க்கத்திற்கு அவர்கள் வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். அதற்கு ஒரேயொரு வழி, அவர்கள் இரண்டு ஆண்டுகள் மீண்டும் பயிற்சி பெற வேண்டும். அதுதான் வழியே தவிர வேறு வழியில்லை. அதுதான் சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பு. அதற்காக, நீங்கள் சொன்னதுபோல Short term course எல்லாம் நடத்திப் பார்த்தாயிற்று. 3 மாத course எல்லாம் நடத்தியிருக்கிறார்கள். அதையெல்லாம் உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. மீண்டும் மீண்டும் தொடர்ந்து அந்த வழியிலே சென்று கொண்டிருந்தால் மார்க்கமே இல்லாமல் போய்விடும். ஆகவே, புரட்சித் தலைவி அவர்கள் ஒரு மார்க்கத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதற்கேற்றாற்போல், அனைவருக்கும் மீண்டும் பயிற்சி கொடுத்து, அது 25,000 பேர் என்றாலும் சரி, 15,000 பேர் என்றாலும் சரி, யார் யார் இந்தப் பயிற்சி பெறுவதற்கு முன்வருகிறார்களோ, அனைவருக்கும் வயது வரம்பின்றி பயிற்சி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

5–

## மரபு சாரா எரிசக்தி

***392–திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மரபுசாரா எரிசக்தி மூலம் மின்சாரம் கிடைக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் அளவு என்ன?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் மூலம் மின்சாரம் கிடைக்கிறது. காற்றாலைகள் மூலம் வருடத்திற்கு 1,234 மில்லியன் யூனிட்டுகளும், சர்க்கரை ஆலைகளின் கரும்புச் சக்கை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் வருடத்திற்கு 372 மில்லியன் யூனிட்டுகளும் கிடைக்கப்பெறுகிறது.

*முற்பகல் 10-40*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மரபுசாரா எரிசக்தி மூலம் மின்சாரம் கிடைக்கிறது என்று சொன்னார்கள். ஒரு வாரத்திற்கு முன்னால் டி.வி. பார்க்கும்போது, ஆகாயவிமானமே சூரிய ஒளி மூலம் 30 ஆயிரம் அடி உயரத்திலே பறக்கும் அளவிற்கு மேலைநாடுகளிலே சோதனை முறையிலே வெற்றி கண்டிருக்கிறார்கள். அதுபோல நம்முடைய அமெரிக்காவில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய அமெரிக்காவிலா! (சிரிப்பு)



2001 ஆகஸ்ட் 23]

**திரு. ஐ. கணேசன்:** அதுபோல நம்முடைய நாட்டிலும், குறிப்பாக இந்தியாவிலே முதல் மாநிலமாக இருக்கக்கூடிய தமிழகத்திலும் இதுபோன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? நகர்ப்புறங்களில் எங்கு பார்த்தாலும் ஒரே குப்பையும் கூளமுமாக அசிங்கமாக இருக்கிறது. அந்தக் குப்பைகள் மூலமாக மின்சாரம் தயாரிக்கலாம் என்று நான் சொல்லவில்லை; விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். ஆகையினாலே, அதையும் பரிசீலனை செய்து இந்த அரசு சிறப்பான முறையிலே குப்பைகள் மூலம் மின்சாரம் தயார் செய்தால் நகரமும் சுத்தமாக இருக்கும் என்பதனைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மரபுசாரா எரிசக்தி தயாரிப்பதற்கு மத்திய அரசு எவ்வளவு மானியம் வழங்குகிறது என்பதையும் அறிவிக்க வேண்டும். இதிலே அரசு தனிக் கவனம் செலுத்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகாயவிமானம் சூரிய ஒளியிலே இயங்குகின்ற அந்தக் கருத்தினை இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். நம்முடைய மரபுசாரா எரிசக்தித் துறை மூலம் அதுகுறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்கின்ற தகவலோடு, சூரிய ஒளி மின் சாதனத்தைப் பொறுத்தவரையிலே, மரபுசாரா எரிசக்தியை அதிகமான அளவில் பயன்படுத்திக்கொண்டுவருகின்ற நிலைமை நம்முடைய தமிழ்நாட்டிலேதான் இருந்துகொண்டிருக்கிறது என்ற தகவலையும் தருகிறேன். சூரிய ஒளி லாந்தர்கள் 7 ஆயிரம் எண்ணிக்கைகள், சூரிய ஒளி வீட்டு உபயோக விளக்குகள் 250 எண்ணிக்கைகள், சூரிய ஒளி தெருவிளக்குகள் 250 எண்ணிக்கைகள், சூரிய ஒளி மின் நிலையங்கள் மொத்தத் திறன் 30 கிலோ வாட் கெபாசிட்டிக்கு 2002–ஆம் ஆண்டிற்கான கருத்துரு, மத்திய அரசினுடைய ஒப்புதலை எதிர்நோக்கியிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், நகராட்சியில் வரும் கழிவுகளைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்கின்ற கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னது Bio-mass Plant. நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 1994 ஆம் ஆண்டே அதற்கொரு கருத்துருவிற்கு ஏற்பாடு செய்தார்கள். இடையிலே ஏற்பட்ட ஆட்சி செயல்படாத காரணத்தினால், சென்னை மாநகராட்சி ஆஸ்திரேலிய நிறுவனத்தின் துணையுடன் 15 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் திட்டம், இப்போதும் - 5 ஆண்டுகளாக, சென்னை மாநகராட்சியால் நிறைவேற்றப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதையும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆய்வு

செய்திருக்கிறார்கள். உடனடியாகத் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஏறக்குறைய ஒவ்வொரு மாநகராட்சியிலும் ஒவ்வொரு விதமான கழிவுகள் வருகின்றன. சென்னையைப் பொறுத்தவரையிலே, பேப்பர், பிளாஸ்டிக் மற்றும் இதுபோன்ற கழிவுகள். வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, கழிவுப் பொருட்கள் என்று சொன்னால், லெதர் கழிவுப் பொருட்கள் அதிகமாக இருக்கின்ற சூழ்நிலை உள்ளது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, பயிர்கள் சம்பந்தப்பட்ட கழிவுகள் இருக்கிற நிலைமை உள்ளது. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் எப்படிப்பட்ட கழிவுகள் வருகின்றன, அந்தக் கழிவுகளிலிருந்து எவ்வளவு கிலோ வாட் உற்பத்தி செய்யலாம் என்கின்ற ஒரு ஆய்வும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்பைகள், கழிவுகள் மற்றும் அந்தக் கழிவு சார்ந்த பொருட்களிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்காகத் தனியார் முன்வந்தால், அதற்கு அரசு அனுமதி வழங்குமா? அப்படி வழங்குவதாக இருந்தால் என்னென்ன நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினைப் பொறுத்தமட்டில், உச்சகட்ட மின் சக்தியைப் பெறுகின்ற அளவிற்கு இப்போது அதன் நிதி நிலைமை இல்லை. மாதந்தோறும் ஏறக்குறைய 900 கோடி ரூபாய் அளவிற்கு நிதி இருந்தால்தான் மின்சார வாரியத்தை நடத்த முடியும் என்கின்ற சூழ்நிலை. மாதந்தோறும் 250 கோடி ரூபாய்க்கு மேலே ரொக்கப் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே, உச்சகட்ட மின் சக்தி என்று சொன்னால், ஏறக்குறைய 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரை அந்த சக்தியைக் கணக்கிடுகிறார்கள். எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு, நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கைகளின் காரணமாக 6,451 மெகா வாட்டுக்கு மேலே அந்த உச்சகட்ட மின் சக்தியை நாம் பெற்றிருக்கிறோம்.





எனவே, மின்சாரத்தை வாங்குவதிலே எங்களுக்கு எந்தச் சிரமமும் இருக்காது. ஆனால் பணம் கொடுப்பதிலேதான் சிரமம் இருக்கிறது. மின்சார பவர் டிரேடிங் கார்ப்பரேஷன் டெல்லியிலே இருக்கிறது. மின்சார உற்பத்தியாளர்கள், அந்த டிரேடிங் கார்ப்பரேஷனைத் தொடர்பு கொண்டு, கிரிட் மூலமாக–மின் கடத்தி மூலமாக–மற்ற மாநிலங்களுக்கு மின்சாரத்தை விநியோகம் செய்கின்ற உத்தரவைப் பெற்று வந்துவிட்டால், மற்ற நடவடிக்கைகளுக்கு நிச்சயமாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் முழு ஆதரவு கொடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுசாரா மின்திட்டத்தின்கீழ் காற்றாலைகள் மூலமாக மின்சாரம் தயார் செய்வது முக்கியப் பங்கு வகிக்கிறது. தற்போது, புதிதாகக் காற்றாலைகள் அமைப்பதிலே ஒரு மந்த நிலை தென்படுகிறது. அந்த மந்த நிலையைப் போக்க, போதிய ஊக்குவிப்பும், சலுகைகளும் தர அரசாங்கம் முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில், நம்முடைய மாநிலத்தில் உள்ள காற்றாலைகளின் எண்ணிக்கையை மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, ஏறக்குறைய 4,000 காற்றாலைகள் தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன. இதன் ஒட்டுமொத்த சதவிகிதம் என்று சொன்னால், ஏறக்குறைய 61 சதவிகிதம் நம்முடைய தமிழகத்திலே மட்டும் இப்போது இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் காற்றாலைகளை அமைப்பதற்கு, எங்கெங்கெல்லாம் காற்று வருகிறது என்பது குறித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதேநேரத்தில், அதனுடைய type–ஐ approval செய்ய வேண்டும். Certificate கொடுக்க வேண்டும்; Training கொடுக்க வேண்டும்; மற்ற Industrial Development–க்குத் தேவையான advice, விஷயங்களுக்கெல்லாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காக சென்னையிலே Centre for Wind Energy Technology என்கின்ற ஒரு நிறுவனம் இருக்கின்றது. அந்த நிறுவனத்தினுடைய உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, அந்த 5 ஆண்டு காலத்திலே உற்பத்தியான மொத்தம் 793 மெகா வாட்டிலே – நம்முடைய புரட்சித் தலைவி அவர்களது ஆட்சியில் மட்டும் 535 மெகா வாட் மின் உற்பத்தி காற்றாலைகள் மூலமாகக்

கிடைத்தது. முந்தைய ஆட்சியில், 256 மெகா வாட்தான் 5 ஆண்டு காலத்திலே கிடைத்தது. ஏகப்பட்ட பின்னடைவு கடந்த 5 ஆண்டு காலத்திலே. நம்முடைய ஆட்சியிலே காற்றாலைகள் அமைப்பதற்கு 15 இலட்சம் ரூபாய் மானியம் கொடுத்தோம். அந்த மானியத்தையெல்லாம் 1997-லே கடந்த கால ஆட்சியிலே நிறுத்திவிட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகளை ஏற்று, காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கின்ற தொழில் நசிந்துவிடாமல் இருக்கின்ற அளவிற்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. லா. சந்தானம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**6–**

## அசுவம நதித் திட்டம்

***679–திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

உசிலம்பட்டி ஒன்றியம் மேற்கு பகுதிக்கு அசுவம நதித் திட்டத்தைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்திட்டம் திருச்சி வட்ட, திட்ட உருவாக்கக் கண்காணிப்புப் பொறியாளர் மட்டத்தில் ஆய்வில் உள்ளது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உசிலம்பட்டி பகுதி மிகுந்த வறட்சிக்கு உட்பட்ட பகுதி என்கிற காரணத்தால், இப்போதுகூட குடிநீர் போன்றவைகளுக்கெல்லாம் மக்கள் மிகுந்த சிரமத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி பத்திரிகைகளிலேயெல்லாம் வந்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதன்மூலம், மிகக் குறைந்த செலவிலே, ஏறக்குறைய



3-1/2 கோடி ரூபாய் செலவிலே, 400 ஏக்கருக்கும் மேலான நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும், அங்கு இருக்கின்ற விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தைக் கிணற்றுப் பாசனத்தின் மூலமாக, மின் மோட்டார்களை வைத்துக்கொண்டு செய்கிற நிலையில், இந்த அணை வருவதன் காரணமாக, அங்கு நிலத்தடி நீர் அபிவிருத்தி அடைவதன்மூலம், 400 ஏக்கருக்கு மேலாக நிலங்கள் பாசன வசதி பெறுவதோடு, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய நிலை இருக்கிறது. அதோடுகூட, நிலத்தடி நீர் உயரக்கூடிய காரணத்தால், அங்கு இருக்கின்ற குடிநீர்த் தட்டுப்பாடும் நீங்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே இதனைச் செய்ய வேண்டும். சென்ற அரசில் இத்திட்டம் பகுதி–2 திட்டத்தின்கீழ் ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டது என்கின்ற தகவலை எனக்கு அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அது இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்கின்ற செய்தியை நான் அறிகிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், புரட்சித் தலைவி அவர்களுடைய அரசும், எங்களுடைய பிற்படுத்தப்பட்ட பகுதி மக்களுக்கு உதவி செய்கின்ற அளவிலே இந்தத் திட்டத்தினை இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் சம்பந்தமாக 3–10–1996 அன்று ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வின்போது, அங்கேயுள்ள மக்கள் எல்லாம் இந்த இடத்திலே இந்தக் கண்மாய் வரக்கூடாது என்று ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். அதன் பிறகு அந்த இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டருக்குக் கீழே இப்போது இடத்தை மீண்டும் ஆய்வு செய்திருக்கிறார்கள். அங்கே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஒரு அறிக்கையை அனுப்பி இருக்கிறார்கள். அதற்கும் மேலாக, இப்போதும் அங்கேயுள்ள மக்கள் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பிக்கிறார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தங்களுக்கு உட்பட்ட சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி செலுத்தும்வகையிலே, அந்த வாக்காளர்களிடம் இந்த ஆர்ப்பாட்டத்தைக் கைவிட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்க வேண்டும். அப்படி,

இந்த ஆர்ப்பாட்டத்தை உடனடியாக மக்கள் நிறுத்துவார்களானால் இந்தத் திட்டம் உடனடியாக மீண்டும் ஆய்வுக்கு அனுப்பப்படும்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்தத் திட்டம் வரவேண்டும் என்பதற்காகத்தான் ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தினார்களே தவிர, வரக்கூடாது என்பதற்காக அல்ல. எனக்குத் தெரிந்த அளவிலே, நிச்சயமாக அந்தத் திட்டம் வேண்டும், மக்களுக்குப் பயன்படுகிற திட்டம் என்று அந்தக் கிராம மக்கள் எல்லாம் சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் மனு கொடுத்ததன்பேரிலேதான், அதை பகுதி-2 திட்டத்திலே சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதத்தைக்கூட என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதை நான் அமைச்சரிடத்திலேயும் கொடுத்திருக்கிறேன். இது சாத்தியமான திட்டம்தான். இது எவ்வளவு ரூபாய் செலவிலே செய்யப்பட வேண்டிய திட்டம், இதனால் எவ்வளவு ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கிறது, இதன்மூலம் நிலத்தடி நீர் அபிவிருத்தியாகி, அந்தப் பகுதியிலே இருக்கிற கிணற்றுப் பாசன விவசாயம் எல்லாம் எந்த அளவிற்குச் செழுமையாக இருக்கும்; குடிநீர்ப் பிரச்சினையும் எந்த அளவுக்குப் போகும் என்பதை எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மிகத் தெளிவாக ஒரு கடிதத்தின்மூலம் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை நான் அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி எந்தவிதமான ஐயப்பாடும் கொள்ள வேண்டாம். அங்கே இருக்கின்ற விவசாயிகள் எந்தப் பிரச்சினையை ஏற்படுத்தினாலும் ஆர்ப்பாட்டம் நடத்தினாலும், அதைச் சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையிலே, அது மக்களுக்குப் பயன்படுகின்ற திட்டம் என்பதால், நானே அதை ஏற்றுக்கொண்டு, எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் பார்த்துக்கொள்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டிலேயே அதை எடுத்துக்கொள்வதற்கு முன்வருவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20-4-1998 அன்று Commissioner of Land Administration அவர்கள் ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். மக்களில் ஒருசாரார் கண்டிப்பாக அந்தத் திட்டம் வர வேண்டுமென்றும், மற்றொருசாரார் வர வேண்டாம் என்றும் சொல்வதால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை





வந்துவிடும் என்று ஒரு கடிதத்தை பொதுப் பணித் துறைச் செயலாளருக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் நான் சட்டமன்ற உறுப்பினரைக் கேட்டுக்கொள்வது, அங்கே சட்டம் ஒழுங்கு கெடாமல் இருந்தால் கண்டிப்பாக இந்த வருடத்திலேயே அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) தண்ணீரின்றி வேலூர் மக்கள் பாதிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் வருவதால் தண்ணீர் இல்லாமல் எங்களுடைய ஊர் மக்கள் அவதிப்படுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பா? அமைச்சர் அவர்கள் தயாராக இருந்தால் எடுத்துக்கொள்ளலாம்.

### (ஆ) காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலை வெடிவிபத்து

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே ஏற்பட்ட.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெடிகுண்டு பிரச்சினைதானே? நாளைக்கு வருகிறது.

**திரு. துரைமுருகன்:** என்னுடைய தொகுதி, காட்பாடியில் வெடிவிபத்து ஏற்பட்டு ஒரு வார காலம் ஆகிறது. 24 உயிர்கள் போய்விட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும்.

[2001 ஆகஸ்ட் 23

**திரு. துரைமுருகன்:** அதை எடுத்துக்கொள்வதிலே என்ன இருக்கிறது. ஒவ்வொரு நாளும் நான் சொல்லும்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் தயாராக இருந்தால் எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. துரைமுருகன்:** 24 பேர் இறந்துபோய் இருக்கிறார்கள். 3 பேரின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. நானும் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். நீங்கள் நாளைக்கு, நாளைக்கு என்று சொன்னால் என்ன அர்த்தம்? என்னால் முடியாது; இதை இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் உரிய குறிப்புகளோடு நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில குறிப்புகள் வரவேண்டியிருக்கின்றன. கண்டிப்பாக நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த மன்றத்தின் நீண்டநாள் உறுப்பினர். ஒரு தொகுதியிலே ஒரு விபத்து ஏற்பட்டால், இன்னும் சொல்லப்போனால் Adjournment Motion கொடுக்காமலேயேகூட Special Mention என்று சொன்னால், அந்தச் செய்தி வந்த உடனே அமைச்சர்கள் பத்திரிகையில் பார்த்துவிட்டு, அவை நடைபெறுகிறபோது கேட்பார்களே என்று இங்கே வந்து பதில் சொல்ல வேண்டும். ஆனால், ஒரு வார காலம் ஆகியிருக்கிறது. 24 பேர் செத்து இருக்கிறார்கள். 3 பேரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு அறிக்கை படிக்கவில்லையென்றால் என்ன அர்த்தம்?

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் நடவடிக்கை எடுத்து, அதற்குப் பிறகு என்னென்ன safety measures எடுக்கப்பட்டன, என்ன நடந்தது என்று இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டாமா? நான் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டாமா?



2001 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். என்ன நடந்தது என்பதை எல்லோரும் பத்திரிகைகளிலே படித்திருப்பார்கள்.

**திரு. துரைமுருகன்:** அதைப்படி பத்திரிகையிலே படித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அரசு அது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் நாளைக்கு சொல்லவிருக்கிறார்.

**திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும், சபாநாயகர் அவர்களே, உங்களுடைய கருத்துக்கு நான் கட்டுப்படுகிறேன். நானும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஒரு வார காலமாகவா ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் வரும். 24 ஆம்....

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்கிறார். (குறுக்கீடு) துரைமுருகன் அவர்களே, நீங்கள் ஏன் என்னிடம் இவ்வளவு ஆத்திரப்படுகிறீர்கள்?

**திரு. துரைமுருகன்:** நேற்றைக்கு விடுமுறைதானே? இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டாமா? நேற்று leave இல்லையா? இது குறித்துக் கேட்டிருக்க வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று விடுமுறையாக இருந்ததால்தான் அவரால் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தொல்லையில்லாமல், இந்த அவைக்குக் குந்தகம் இல்லாமல், (குறுக்கீடு) என்னுடைய தொகுதியிலே 24 பேர் செத்து இருக்கிறார்கள். 3 பேர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய விபத்து. இதற்கு நானும் ஒரு வாரகாலமாகக் கேட்டும், இந்த அரசிடமிருந்து எனக்கு ஒரு நேரிடையான பதில் வராத காரணத்தினால், பாராளுமன்ற முறை என்று சொல்வீர்களே, அந்தப் பாராளுமன்ற முறைப்படி நான் இங்கே உட்கார்ந்து விடுகிறேன். எனக்கு நீதி கிடைக்கும் வரையில் நான் இங்கே உட்கார்ந்திருப்பேன்.

*(உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்புறம் கீழே அமர்ந்து கொண்டார்.)*

[2001 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களே, நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். (சிரிப்பு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. துரைமுருகன் அவர்கள் இந்த விபத்து ஏற்பட்ட அந்த நாளிலிருந்து, எப்பொழுது பார்த்தாலும், அந்த விபத்திலே பாதிக்கப்பட்டவர்களுடைய கொடுமையான துன்பத்தைப் பற்றியும், உடனடியாக அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும்தான் எங்களிடத்திலும், கட்சித் தலைவரிடத்திலும், தோழர்களிடத்திலும் ஓயாமல் வாதாடிக்கொண்டிருக்கிறார். அரசு செய்ய வேண்டிய பல கடமைகள் தவறிப் போய்விடும், அதனுடைய விளைவாக அதிகம் பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தால் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர் வலியுறுத்திக் கேட்டும், இன்றுவரையில் அது எடுத்துக்கொள்ளப்படாத நிலை காரணமாக, அந்த வருத்தத்தைத் தெரிவிக்கத்தான் அவர் அந்த முடிவை எடுத்திருக்கிறார். இன்றைக்கே இன்னும் ஒரு மணி நேரம் கழித்துக்கூட, அந்தப் பிரச்சினைக்கு ஒரு விதாயகம் காண்பதற்காகத்தான் வலியுறுத்துகிறார். ஏனென்றால் பிரச்சினை அரசாங்கத்தைக் கடந்து, கட்சிகளைக் கடந்து ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிட்ட காரணத்தினால், இதனை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறார். எனவே, இது குறித்த விளக்கங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு பாதுகாப்பை, நன்மையைச் செய்யப் பயன்படும் என்ற அடிப்படையில் தாங்கள் எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுடைய ஆதங்கத்தை அரசு புரிந்துகொள்கிறது. ஆனால், Explosives Limited–ல் இருந்து அந்த M.D. மூலம் சில தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும் ஏற்று, மாண்புமிகு பேராசிரியர் அவர்களுடைய கருத்தையும் ஏற்று, பிற்பகல் இதை எடுத்துக்கொள்ளலாம். We can take it. (குறுக்கீடுகள்).



2001 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பகல் இதை எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, எழுந்து இருக்கையில் உட்காருங்கள். (சிரிப்பு)

## (இ) திருவாரூர், நாகை மாவட்டங்களில் குடிசைகள் தீப்பற்றி எரிதல்

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர், நாகை மாவட்டங்களிலே கடந்த 15 தினங்களாக நூறுக்கும் மேற்பட்ட குடிசைகள் திடீர் திடீரென்று எரிந்துகொண்டிருக்கின்றன; மர்மமான முறையிலே எரிந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி அவர்களே, நீங்களும் உட்கார்ந்து விடாதீர்கள். (சிரிப்பு) எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஒரு நிமிடம் ஐயா, தகவலைக் கேட்டு வாங்கி, நாளைக்கு பதில் சொல்லுங்கள். ஏனென்றால், நூற்றுக்கணக்கான குடிசைகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அமைதி சீர்குலைந்த நிலையிலே அந்த மக்கள் இரவு பகல் பூராவும், தூக்கமில்லாமல் பலர் சோதனையில் இருக்கிறார்கள். அதனைக் கேட்டு, ஏதாவது ஒரு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் அல்லது அமைதியை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் எங்களையெல்லாம் தொலைபேசி மூலமாகவும், தந்தி மூலமாகவும் தொடர்பு கொண்டு, ஏன் சட்டமன்றத்திலே உட்கார்ந்திருக்கிறீர்கள், இதைக்கூட அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு போகாத ஒரு சட்டப்பேரவை உறுப்பினராக ஏன் இருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். இதற்கு உரிய நடவடிக்கையை காவல் துறை மூலமாக எடுத்து, பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக நான் ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்கெனவே இது குறித்து அவையிலே

பேசியிருக்கிறார்கள். இது குறித்த அனைத்து விவரங்களையும் உடனடியாக அரசுக்குத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணிக்கப்பட்டு இருக்கிறார்கள். தகவல் வந்தவுடன் கட்டாயமாக அது குறித்த நிலை தெரிவிக்கப்படும்.

*முற்பகல் 11-00*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சொந்த ஊரிலேயே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

### (ஈ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளை விரைந்து எடுத்துக்கொள்ளுதல்

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்களும், கவன ஈர்ப்புகளும் கடந்த ஒரு வார காலமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுத்த நாளிலேயே எடுக்கப்படாவிட்டாலும்கூட, குறைந்தபட்சம் அடுத்த நாளிலாவது எடுத்துக்கொள்ள வேண்டும். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொன்றையும் ஒத்திவைப்புத் தீர்மானமாகவே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நிச்சயமாக நாங்கள் கேட்கவில்லை. ஏனென்றால் தொகுதி மக்களுக்கு இங்கு இருக்கின்ற உறுப்பினர்கள் பதில் சொல்லியாக வேண்டும். ஆகவே, குறைந்தபட்சம் அன்று இல்லாவிட்டாலும், அடுத்த நாளாவது துங்களுக்குக் கிடைத்த தகவல்களை, அமைச்சர் அவர்கள் இந்த அவையின் முன்னாலே வைத்து, அந்த உறுப்பினரை, அந்தப் பிரச்சினையை எழுப்பவிட்டீர்களானால் போதுமானதாக இருக்கும். அமைச்சர் எப்போது தயாராகிறாரோ அப்போதுதான் எடுக்கப்படும் என்கிற முறை சரியாக இருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே கவனப்படுத்த விரும்புகிறேன்.

### (ஆ) காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலை வெடி விபத்து–தொடர்ச்சி

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி விபத்து சம்பந்தமாக 16 ஆம் தேதி நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு



விவரம் வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், இன்றைக்கு தினத்தந்தி பத்திரிகையிலே அந்த ஆலையினுடைய நிர்வாக இயக்குநர் வெளியிட்டதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அதாவது, இது சம்பந்தமாக ஒரு enquiry நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த enquiry report பெற்றதற்குப் பிறகு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப் படும். யார் யாருக்கு என்னென்ன நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டுமோ, அது கொடுக்கப்படும் என்று செய்தி வந்திருக்கிறது. அவையிலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிற நேரத்திலே, அது அவை வழியாக அறிவிக்கப்படாமல், ஒரு நிர்வாக இயக்குநர் இப்படிப் பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்து, போகிற போக்கு சரிதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது குறித்து பிற்பகலில் எடுத்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு வந்தார்கள். இன்றைக்குக் கீழேயே உட்கார்ந்தார்கள். உட்கார்ந்தவுடனேயே பலன் கிடைத்துவிட்டது. அரசு எதிர்க்கட்சியை எவ்வளவு மதிக்கிறது என்பதற்கு இதையும் ஓர் எடுத்துக்காட்டாக வைத்துக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) பிற்பகலில் அமைச்சர் எடுத்துக்கொள்வார்.

## 3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துகளை வழங்க அனுமதி அளித்தமைக்காக முதலில் துங்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஆளுநர் உரைக்குப் பிறகு படிக்கப்படுகிற நிதிநிலை அறிக்கையில் சொல்லப்படுகிற திட்டங்கள் யாவும் உறுதி செய்யப்பட்ட திட்டங்களாகத்தான் அறிவிக்கப்படுவது வழக்கம். ஆளுநர் உரையிலே அரசாங்கம் செய்ய இருக்கிற கொள்கைகளைச் சுட்டிக்காட்டுவதும், அப்படிச் சுட்டிக்காட்டப்பட்ட கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்காக நிதி ஒதுக்கி, அதை நிதிநிலை அறிக்கையிலே சொல்வதும்

தான் மரபு. அதுதான் இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாடு. ஆனால், நான் ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டியதைப் போலவே, நிதிநிலை அறிக்கையிலேகூட, பல இடங்களில் அரசு, 'உத்தேசிக்கப்பட்டுள்ளது', 'கருதப்பட்டுள்ளது', 'கருதியுள்ளது', என்ற வார்த்தைகள்தான், கிட்டத்தட்ட 53 இடங்களிலே காணப்படுகிறது. இது ஆளுநர் உரையிலே இருக்குமானால் சரி. நிதிநிலை அறிக்கையில் எடுக்கப்பட்ட முடிவுகள்கூட இந்த வார்த்தைகளோடு இருக்கின்றன. 'உத்தேசிக்கப்பட்டுள்ளது' என்பதற்கும் 'கருதப்பட்டிருக்கிறது' என்பதற்கும் நிதிநிலை அறிக்கையிலே 'செய்யப்படும்' என்று சொல்வதற்கும் உள்ள பொருள் இங்கேயிருக்கின்ற மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு நன்கு விளங்கியிருக்கும். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், நீங்கள் பல இடங்களிலே சுட்டிக்காட்டியிருக்கிற அந்த 'உத்தேசிக்கப்பட்டுள்ளது', 'கருதப்பட்டுள்ளது' என்பதெல்லாம் செயல் திட்டத்திற்கு வருமா என்ற சந்தேகத்தையே கிளப்புகிற அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், நான் ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டியதைப்போல, Omar Khayyam-னுடைய phraseology-யிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால்–Old wine in new bottle. – "புதிய மொந்தையில் பழைய கள்" என்று அதைத் தமிழாக்கம் செய்வார்கள். அதுபோல், கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற திட்டங்களெல்லாம் சற்று மெருகூட்டப்பட்டு, இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, இதிலே புதிய திட்டங்கள் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஏதோ, நான் இதை ஒரு sweeping generalisation–ஆக, பொதுவான ஒரு குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. இந்த நிதிநிலை அறிக்கையிலே காணப்படுகின்ற பல்வேறு திட்டங்கள் கடந்த கால ஆட்சியிலே தொடங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிற திட்டங்கள்தான்.

குறிப்பாக, இதிலே பக்கம் 8–லே அறிவிக்கப்பட்டிருக்கிற புதிய வேளாண்மைக் கொள்கைத் திட்டம், கடந்தகால ஆட்சியிலே 2000–2001 நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டதுதான். அதேபோல், மீனவர்களுக்கான வீடு கட்டுகிற திட்டம், 1996–லேயே அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்து, 5 ஆண்டுகளில் 20 ஆயிரம் வீடுகள் கட்டித்தரப்படும் என்று சொல்லி, ஆண்டிற்கு 4 ஆயிரம் வீடுகளாகக் கட்டி முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட கருத்தைத்தான் இந்த ஆண்டிலேயும் 4 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று



அறிவித்திருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, உள்நாட்டு மீனவர்களுக்கென்று ஆயிரம் வீடுகள் தனியாக ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. இங்கே இருக்கிற உள்நாட்டு மீனவர்களுக்கும் அந்தக் குறை இருக்கின்ற காரணத்தினால், நீங்கள் ஒதுக்கி இருக்கிற வீடுகளிலோ அல்லது தனியாகவோ உள்நாட்டு மீனவர்களுக்கும் ஆயிரம் வீடுகளையாவது ஒதுக்கித்தர வேண்டுமென்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-05*

அதுபோல தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அதுவும்...

***மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஆண்டில் கட்டப்படும் 4,000 வீடுகள் என்பது, உள்நாட்டு மீனவர்களுக்கும் சேர்த்துத்தான் அறிவிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் உள்நாட்டு மீனவர்கள் சங்கங்களுடைய கோரிக்கையே பெரும்பாலும் கடல் மீனவர்களுக்காக வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன, உள்நாட்டு மீனவர்களுக்கு அது கிடைப்பதில்லை என்பதுதான். ஆகவே, அவர்கள் தங்களுக்குத் தனி ஒதுக்கீடு வேண்டுமென்று முந்தைய ஆட்சியிலேயே சொல்லியிருந்தார்கள். அதையொட்டித்தான் அவர்களுக்கு கடந்த கால ஆட்சியிலே ஆயிரம் வீடுகள் கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதையே நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று, கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, இது முன்பு அறிவிக்கப்பட்டது. அப்போது 25 இலட்சம் ஏக்கர் என்று கலைஞர் அறிவித்திருந்ததை, இப்பொழுது 2.5 இலட்சம் ஹெக்டேர் என்று அறிவித்திருக்கிறீர்கள்; எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. கொள்கை அதுதான் என்பதையும் முதல்வர் அவர்களே நேற்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, காடு வளர்ப்புத் திட்டம்; 1997–98–லே முந்தைய அரசினால் தொடங்கப்பட்டு 2000–2001–லே ஜப்பான் உதவியோடு அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத்தையே இன்று நீங்கள் பக்கம் 16–ல் காடு வளர்ப்புத் திட்டமாக–

*மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'TAP' என்ற காடு வளர்ப்புத் திட்டம், ஜப்பான் உதவியோடு நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டம் முதன்முதலாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 1991–96-ல் ஆட்சியில் இருந்த காலத்திலேதான் உருவானது. அப்பொழுதே, அந்தத் திட்டத்திற்குண்டான பணத்தை அவர்கள் ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், நடைமுறைப் படுத்தும்போது, வேறு ஒரு அரசு வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–லே அறிவித்துவிட்டு, நாங்கள் 1997–98-ல் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறோம் என்று சொன்னேன். 5 ஆண்டு காலம் ஆட்சியிலே இருந்தவர்களால் செயல்படுத்த முடியவில்லை. 1997–98-ல் ஜப்பான் திட்டமாக அதை அறிவித்துவிட்டு, 2000–2001-ல் அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. நான் இவற்றைச் சொல்வது ஏதோ குறை சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995–96 ஆம் ஆண்டிலேதான் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. வேறொரு அரசு மாறியதால் அந்தத் திட்டத்தை அவர்கள் செயல்படுத்தினார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் அவர் எதிர்க்கட்சி பாணியிலே சொல்கிறார். நீங்கள் சொல்வதைத்தான் அவர் சொல்கிறார்.

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அதைப் போல கால்நடை வளர்ப்புத் திட்டம்; 49 ஊராட்சிகளுக்கு என்பதை 336–க்கு உயர்த்தி இருக்கிறீர்கள். 49 ஊராட்சிகளுக்கு என்று அறிவிக்கப்பட்டதும் 1997–98 நிதிநிலை அறிக்கையிலேதான்.

அதைப்போல பொது விநியோக முறைக்காக, சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து, ஒரு குழுவை அனுப்புவோம் என்ற ஒரு யோசனையும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் முதல்வர் கலைஞருடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 1996–லே முதன்முதலாக இதுபோன்ற ஒரு குழு அனுப்பி வைக்கப்பட்டு, அதனுடைய முடிவுகளின் காரணமாக, அவர்களுடைய ஆலோசனைகளின் காரணமாக, சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அதே முறையை இன்று நீங்கள் பின்பற்றி சட்டமன்ற உறுப்பினர்களுடைய குழுக்களையும் அனுப்ப வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதை நாங்கள்



வரவேற்கிறோம். மேலும், அதிலே பல முயற்சிகளை மேற்கொண்டு அதிலே திருத்தங்கள் ஏற்படுமானால், உங்களோடு ஒத்துழைக்க நாங்களும் தயாராக இருக்கிறோம்.

அதுபோல பத்திரிகையாளர்களுக்கு நிதி உதவி என்பது, 1997–98–லே கலைஞருடைய ஆட்சியிலே 25 ஆயிரம் ரூபாயாக வழங்கப்பட்டு, அது பிறகு 50 ஆயிரம் ரூபாயாக கலைஞருடைய ஆட்சியிலே உயர்த்தப்பட்டு, இப்போது இரண்டு இலட்சம் ரூபாயாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உங்களுடைய திட்டங்களிலே நிதி உயர்ந்திருக்கிறது; பரப்பு – area – உயர்ந்திருக்கிறதே தவிர, புதிய திட்டங்கள் என்று சொல்வதற்கு இதிலே எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

டாக்டர் க. பொன்முடி: Controversial–ஆக நான் எதுவும் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்டதற்குத்தான் அவர் விளக்கம் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது முந்தைய ஆட்சியிலே 50 ஆயிரம் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே அதை இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அரசைப் பொறுத்தவரையில் வாரிக் கொடுக்கும் வள்ளல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு. ஆகையினால் நாங்கள் இதைத் தாராளமாகக் கொடுக்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொன்முடி பேசுகின்றார், திரு. வைதியலிங்கம் உட்காருங்கள். (குறுக்கீடு) பொன்முடி ரொம்ப தெளிவானவர். அவர் எல்லா விளக்கமும் சொல்வார். நீங்கள் உட்காருங்கள். அவருக்கு பக்கபலமாகப் போக வேண்டாம். பொன்முடி, நீங்கள் பேசுங்கள்.

*முற்பகல் 11-10*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரிக்கு வரி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் சொன்ன கருத்துக்கு பதில் சொல்ல அவர்களுக்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது; சொல்லலாம். எனக்கு நேரத்தை நீங்கள் கூட்டிக் கொடுக்க வேண்டும் அவ்வளவுதான். நான் விவாதத்திற்குத் தயாராக இருக்கிறேன். எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். இதிலேகூட, 25 ஆயிரம் ரூபாயை 2 இலட்சமாகக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருக்கிறது. நான் அதைத்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன். 'உத்தேசிக்கப்பட்டுள்ளது', 'கருதப்பட்டுள்ளது' என்று சொல்லி இருக்கிறார்களே தவிர 'கொடுக்கப்படும்' என்ற வார்த்தைகள் பட்ஜெட்டிலே வரவில்லை. அவ்வாறு சொல்லப்படும் என்று சொன்னால் அது வரவேற்கத்தக்கதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல மகளிருக்காகச் சொல்லியிருக்கிற திட்டம், கலைஞருடைய ஆட்சியிலே 2 பெண்கள் இருந்தால், 1,500 ரூபாய், 1,500 ரூபாய் என்று சொல்லி, 20 ஆண்டுகளுக்குப் பிறகு சுமார் 29 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. இப்போது 1,500, 1,500 என்பதை 14 ஆயிரம், 14 ஆயிரமாக உயர்த்தி இருக்கிறீர்கள். 3 ஆயிரம் என்பதை 20,650 ஆக உயர்த்தி இருக்கிறீர்கள். அதிலே எனக்கு ஒரு clarification வேண்டும். இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டி அப்பெண் குழந்தை பள்ளிக் கல்வி முடிப்பது வரையில், திங்களொன்றுக்கு குறைந்தது ரூ.150 வழங்க போதுமானதாக இருக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதற்கு என்ன அர்த்தம்? கொடுக்கப்போகிறீர்களா அல்லது வழங்கப் போதுமானதாக இருக்கும் என்று பொருளா? மாதம் 150 ரூபாய் கொடுக்கப்போகிறீர்களா? பின்னால் சொல்லியிருக்கிறீர்கள். 140 ரூபாய் கொடுக்கும்போது, 150 ரூபாய் கொடுப்போம் என்கிறீர்களா? தெளிவாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சொல்லி இருக்கிறார்கள்; வைப்பு நிதிக்கு எந்த அளவிற்கு காலமெல்லாமறை



கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதற்குப் பிறகு மொத்தப் பணம் சேரும் என்று சொன்னால் அது வைப்பு நிதியிலே வைக்கப்பட்டு, அந்தத் தொகைக்கு வரக்கூடிய வட்டி, அந்தக் குழந்தைக்குப் போகிறது என்றுதான் பொருள். அதற்குத் தனியாக விளக்கம் தேவை இல்லை. இரண்டாவதாக இன்னொன்றைச் சொன்னார். எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சியிலே போடப்பட்ட திட்டத்திற்கு புத்துயிர் கொடுத்து இருப்பதாகச் சொன்னார். அவர்களுடைய தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, மகளிருக்காகப் போடப்பட்ட அத்தனை திட்டங்களுமே நிறுத்தப்பட்டு இருந்தன என்பதுதான் உண்மையே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை. இப்போது புரட்சித் தலைவி அவர்கள் புத்துயிர் கொடுத்து இருக்கிறார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, கலைஞருடைய திட்டத்திற்குப் புத்துயிர் கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக நான் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலும் நான் கேட்பது, மாதத்திற்கு 150 ரூபாய் வட்டியிலே கொடுப்போம் என்று சொல்லி இருக்கிறீர்கள். கடைசியிலே 80 ஆயிரம் ரூபாய் கொடுக்கப் போவதாகவும் சொல்லி இருக்கிறீர்கள். அது எந்தப் பணத்தில்? ஆக, நீங்கள் பெறுகிற வட்டி மாதம் ரூ.150 கொடுப்பதற்கும் சேர்த்து 20 ஆண்டுகளுக்குப் பிறகு 80 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கும் சேர்த்தா என்ற சந்தேகம் வருகிறது. ஏனென்றால், நாம் fixed deposit போடுகிறோம்; recurring deposit போடுகிறோம். மாதம் மாதம் கட்டிவிட்டோம் என்றால்—recurring deposit போடும்போது – மாதா மாதம் கொடுக்கமாட்டார்கள். மொத்தமாகத்தான் கடைசியில் கொடுப்பார்கள். இப்போது recurring deposit மாதிரி இந்தப் பணத்தை நீங்கள், 20 ஆயிரத்து சொச்சம் ரூபாயை வைத்துக்கொண்டால் அதிலே மாதம் எத்தனை per cent உங்களுக்கு வட்டி வரும்? அந்த வட்டியில், மாதா மாதம் ரூ.150 கொடுத்துவிட்டால், 20 ஆண்டுகளுக்குப் பிறகு யார் கொடுப்பது? 20 வருடங்களுக்குப் பிறகு அப்போது இருக்கிற Government-ஆ? யார் கொடுப்பது? அதை நீங்கள் கணக்கு பண்ணி இருக்கிறீர்களா என்ற வினாவைத்தான் எழுப்புகிறேனே தவிர, எனக்கும் புரிகிறது. ஆகவே, நீங்கள் கொடுக்க இருப்பது – இப்போது நீங்கள் சொல்லி இருப்பது – மாதம் ரூ.150. 20 வருடத்திற்குப் பிறகு 80 ஆயிரம் கொடுக்கப்படும். அது தானே? மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்த பதிலைத்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் பதிலுரையில் விளக்கம் சொல்வார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நன்றி, நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல உங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிற பல்வேறு விஷயங்கள், இதிலே நடைமுறைப் படுத்தப்படாமலேயே இருக்கின்றன. குறிப்பாக தேர்தல் அறிக்கையிலே, 'நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, கல்லூரி மாணவர்களுக்கும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் கொடுக்கப்படும்' என்று சொல்லி இருக்கிறீர்கள். அதைப்பற்றி இதிலே ஒரு குறிப்பும் இல்லை. சொன்ன வாக்குறுதியை எப்படியும் 5 ஆண்டுகளுக்குள்ளாகவாவது நிறைவேற்றிவிடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏனென்றால், சொல்வீர்கள், இப்போதுதானே சொன்னோம் என்று. முதலிலே நாங்கள் ஆளுநர் உரையிலே சொல்கிறபோது, 5 நாட்களிலேயே கேட்கிறீர்களே, நீங்கள் அடுத்த நிதிநிலை அறிக்கையைப் பாருங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள்கூட ஏதோ வரப்போகிறது, வரப்போகிறது என்றுதான் நினைத்தோம். அதுவும் குறிப்பாக விவசாயிகளுக்கு வரப்போகிறது என்று நினைத்தோம். நாங்கள் ஆட்சியில் இருக்கிறபோது, 540 ரூபாய் கரும்புக்கு டன்னுக்கு இருக்கிற நிலையை 840 ரூபாய் வரை உயர்த்தி வைத்துவிட்டுப் போனோம். இன்றைக்கு கரும்பு விலைபற்றி வாயே திறக்காமல், நான் கவர்னர் உரையில் பேசும்போது, அடுத்து நிதிநிலை அறிக்கையில் பாருங்கள், உங்களுக்குக் கிடைக்கும் என்று சொன்னார்கள். இப்பொழுதுதானே வந்திருக்கிறோம், இன்னும் 5 வருடம் சென்று பாருங்கள் என்று சொல்கிற நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே, நீங்களும் விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாயைக் கொடுப்பீர்களா என்பதில் சந்தேகமாக இருக்கிற சூழ்நிலையைத்தான் உங்கள் நிதிநிலை அறிக்கை உருவாக்கியிருக்கிறது.

*முற்பகல் 11-15*

அதுமட்டுமல்ல, அரசு அலுவலர்களுக்கெல்லாம் 20 ஆண்டுகளுக்குப் பிறகு Selection Grade வழங்கப்படும் என்று உங்கள் தேர்தல் வாக்குறுதியிலே குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தேர்தல் வாக்குறுதியிலே, 20 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கு நாங்கள் அதையெல்லாம் செய்வோம் என்று சொல்லிவிட்டு, இப்போது 94 சதவிகிதம் அவர்களுக்கே செல்கிறது, 6 சதவிகிதம்தான் திட்டங்களுக்குச் செல்கிறது என்று சொல்லுகிற நீங்கள் அந்த உறுதிமொழியை எப்படிக்



காப்பாற்றப் போகிறீர்கள் என்பது தெரியவில்லை. ஆகவே, தேர்தல் வாக்குறுதியிலே நீங்கள் சொல்லியிருக்கிற பல செய்திகளெல்லாம் தேர்தலுக்காகவே சொன்ன வாக்குறுதிகளாகத்தான் இருக்கின்றனவே தவிர, நிறைவேற்றக்கூடிய திட்டங்களாக இல்லை என்பதை இந்த நிதிநிலையைப் பார்க்கிறபோது தோன்றுகிறது.

அதுமட்டுமல்ல, 100 ஆண்டு கால சாதனை, சாதனை என்றெல்லாம் பலவற்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். 100 நாட்கள், 100 நாட்கள்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சி 100 ஆண்டுகள் வாழும் என்ற அந்தக் கருத்தைச் சொன்னதற்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி).

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, 100 ஆண்டுகள் ஒரு ஆட்சி இருக்க முடியுமானால், ஜனநாயகம் 200 ஆண்டுகளுக்குத்தான் இந்த நாட்டிலே வரும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் தும்மினால் 100 ஆண்டுகள் என்பார்கள். அது சும்மா, 100 ஆண்டா இருக்கிறது, செத்துவிடுகிறது இல்லையா, அதுமாதிரிதான். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேளாண்மைத் துறை அமைச்சர் உட்காருங்கள். பொதுவாக, வாழ்த்துவது நல்ல மரபுதான். அதைக் கடைபிடிப்பதிலே ஒன்றும் தவறு இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** 100 ஆண்டுகள் இருக்கட்டும்...

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஆண்டு காலம் செய்யக்கூடிய சாதனையை 100 நாட்களில் இந்த ஆட்சி செய்திருக்கிறது என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஆண்டு காலம் வேண்டாம். ** 100 ஆண்டுகள் என்று நான் சொன்னதற்கு, அதற்கு மட்டும் பேசினால்...(கூச்சல் குழப்பம்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, இவ்வளவு தூரம் நீங்கள் ஆத்திரப்பட வேண்டிய அவசியம் இல்லை. அமைச்சர் அவர்கள், 100 ஆண்டுகளில் செய்ய வேண்டிய சாதனையை, 100 நாட்களில் செய்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு நீங்கள் இவ்வளவு ஆத்திரப்பட வேண்டிய அவசியம் இல்லை. வாழ்த்துவது நல்ல மரபுதான். பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) ஆகவே, நீங்கள் வரவு-செலவுத் திட்டத்திற்குப் போங்கள். வரவு-செலவுத் திட்டத்திற்குப் போங்கள். (குறுக்கீடு) எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நீங்கள் பேசுகிற அன்றைக்குப் பேசுங்கள். சும்மா உட்கார்ந்து கலாட்டா பண்ணாதீர்கள். (குறுக்கீடுகள்) பொன்முடி அவர்களே, நிதிநிலை அறிக்கைக்குப் போங்கள். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள். ஆளும் கட்சித் தரப்பிலே இருக்கிற உறுப்பினர்கள் அமைதியாக அமர வேண்டுகிறேன். நிதியமைச்சர் அவர்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பேராசிரியர் பேசட்டும்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இடையிலே குறுக்கிட்டபோதுகூட ஜனநாயக முறைப்படி ஆட்சிகள் மாறும் என்ற அடிப்படையில் பொதுவான ஒரு கருத்தைத்தான் சொன்னேன். இப்பொழுதும் நான் சொல்கிறேன். யாராக இருந்தாலும், ஆட்சி நடத்தக்கூடிய காலம் வரையில் நடத்தி, மக்களுக்குத் தொண்டு செய்ய முடியுமானால் தொண்டு செய்து, அதனுடைய விளைவை மக்கள் புரிந்துகொண்டு, ஜனநாயக முறைப்படி மக்கள் முடிவெடுப்பதைத்தான் நாங்கள் விரும்புகிறோமே தவிர, இடையில் இந்த ஆட்சி கைவிடப்பட வேண்டும் அல்லது மாற்றப்பட வேண்டும் என்ற கருத்தை, திராவிட முன்னேற்றக் கழகம் கூறவில்லை. நான்கூட ஒரு நேரத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வந்த தீர்மானத்தில் இந்த ஆட்சியின்மீது கடுமையான கருத்தைத் தெரிவித்திருந்தாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்பது, எந்த ஆட்சியும் அதனுடைய உரிய காலம் வரையில் நடைபெற்று, அதனுடைய விளைவுகளை மக்கள் புரிந்துகொண்டு, முடிவு எடுப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்பதுதான். ஆகவே, பொன்முடி அவர்கள், பதிலுக்கு பதில் என்ற முறையிலே சொன்னார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுகுறித்து யாரும் ஆத்திரப்படுவதிலே அர்த்தம் இல்லை.



*முற்பகல் 11-20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபோது, ** அவர் பேசிய பேச்சு உண்மையிலேயே எல்லோரையும் புண்படுத்தக்கூடிய ஒன்றாக இருக்கிறது. நான் ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்) அமைதியாக இருங்கள். நீங்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள். தமிழகத்தினுடைய விடிவெள்ளியாக அனைத்து மக்களின் ஆதரவைப் பெற்று விளங்குகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி எத்தகைய வன்முறைகளைத் தமிழகத்தில் எதிர்க்கட்சிகள் தவழவிட்டாலும்கூட, கட்டாயம் இந்த 5 ஆண்டு காலம் நீடித்து நிற்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி உட்காருங்கள். அதாவது பேராசிரியர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்து ஏற்புடைய கருத்து. அதைப்போல, உங்கள் கட்சியினுடைய தலைவர் அவர்கள்கூட 356-ஆவது ஷரத்தை பயன்படுத்துவதை நாங்கள் விரும்புவதில்லை, ஐந்தாண்டு காலம் ஆட்சி நீடிக்க வேண்டும் என்ற கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கே மாறாக ** என்று சொல்வது மரபுக்கு விரோதமானது. வார்த்தைக்கு வார்த்தை பரிமாறிக்கொண்டாலும்கூட அது முறையற்றது. ஆகவே, அந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நிதிநிலை அறிக்கைமீது பேசுங்கள் (கூச்சல்-குழப்பம்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஆண்டு ஒரு ஆட்சி இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறபோது நீங்கள் அதை நீக்கியிருந்தால் சரி. ஒரு tongue slip-ஆக 100 ஆண்டு இருக்க வேண்டுமென்று சொன்னவர்கள்–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 100 ஆண்டுகள் என்பதற்கு பேராசிரியர் அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். அந்த விளக்கம் இருக்கிறது. 100 ஆண்டுகள் என்பதற்கு பேராசிரியர் அவர்கள் என்ன விளக்கம் என்பதைச் சொன்னார்கள். அது ஜனநாயகத்திற்கு ஏற்புடையதா என்று கேட்டார்கள். அந்த விளக்கம் இருக்கிறது. ** என்று பேசுவது முறையற்றது. அப்படியெல்லாம் பேசுவது மரபுக்கு விரோதமானது. அந்த வாக்கியம் நீக்கப்படுகிறது. (கூச்சல்-குழப்பம்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**டாக்டர் க. பொன்முடி:** 100 ஆண்டுகள் என்று நீங்கள் சொல்லும் போது எங்களுக்குச் சொல்ல வாராதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வார்த்தைக்கு வார்த்தை என்றாலும்கூட அது நல்ல மரபுக்கு விரோதமானது. அப்படிப் பேசுவது சரியல்ல. ** என்று சொல்வது முறையற்றது. அந்த வாக்கியம் நீக்கப்படுகிறது. நான் அதற்குச் சொன்ன விளக்கம் உட்பட அவ்வளவும் நீக்கப்படுகிறது. நீங்கள் நிதிநிலை அறிக்கை மீது பேசுங்கள். முறையாக நீங்கள் பேசிக்கொண்டு இருந்தீர்கள். இடையிலே ஏன் நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு, ஆத்திரப்பட்டுப் பேச வேண்டும்? தேவையே இல்லை அது. (கூச்சல்-குழப்பம்)

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீக்குகிற அதிகாரமும், இருக்கிற அதிகாரமும் உங்களுக்கு உண்டு. அதில் நான் குறுக்கிடவில்லை. ஆனால், எதிர்க் கட்சியில் இருக்கிறவர்களுக்கு ஆளும் கட்சியை challenge பண்ணிப் பேசுகிற உரிமை உண்டு. இல்லை, எங்கள் ஆட்சிதான் நிற்கும் என்று பேசுவதற்கு அவர்களுக்கும் உரிமை உண்டு. அதிலே மாறுபட்ட கருத்து அல்ல. (குறுக்கீடுகள்) Please. ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்களைக்கூட இங்கே இருந்த எதிர்க் கட்சியினர் சொன்னார்கள், Your days are numbered – உங்கள் நாட்கள் எண்ணப்படுகின்றன என்று சொன்னார்கள். ஆனால் அண்ணா அவர்கள் My steps are measured என்று அதற்கு பதில் சொன்னார்கள். இதெல்லாம் தெரிந்ததுதான். எனவே, பொன்முடி அவர்கள், ஒரு எதிர்க் கட்சி உறுப்பினர் என்கின்ற அந்த அந்தஸ்திலேயிருந்து ** என்று சொன்னார். அவருக்குச் சொல்வதற்கு உரிமை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, அண்ணா வழியில் வந்தவர்கள் என்று நாம் சொல்லிக்கொள்வதற்கு முழு உரிமை உண்டு என்றால் இப்படிப்பட்ட வார்த்தைகளை நாம் தவிர்க்க வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** அதனால் நான் என்ன சொல்கிறேன் என்றால் பொன்முடி பேசிய வார்த்தை இருந்தால்தான் பேராசிரியர் அவர்கள் அதில் வைத்த சிகரம் இருக்கிறது, நீங்கள் சொன்ன கருத்து இருக்கிறது. ஜனநாயக முறைப்படி இவையெல்லாம் இருந்தால்தான் healthy discussion-ஆகத் தெரியும். ஆனால் இவற்றையெல்லாம் நீங்கள் எடுத்துவிட்டால் இந்த மன்றத்தினுடைய healthy discussion இருக்காது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி அவர்கள் சொன்னதற்குப் பிறகு பேராசிரியர் அவர்கள் சொல்லவில்லை. பேராசிரியர் அவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் பொன்முடி அவர்கள் அந்த வார்த்தையைச் சொன்னார்கள். அதாவது சிகரத்திற்குப் போய்விட்டுப் பள்ளத்தாக்கிலே விழாதீர்கள், அதுதான்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். நீங்களும் விளக்கம் தந்திருக்கிறீர்கள். ஆனால், இடையிலே ஒரு சிறு தொனி இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசும்போது வார்த்தைக்கு வார்த்தை பேசினால் அது ஜனநாயகம்தான். அதைக் குறை சொல்லவில்லை. ஆனால் அவர் எந்த வேகத்தில் பேசினார் என்பதுதான் பிரச்சினை. அது புண்படும் வகையில் இருந்ததால் அவர்கள் எழுந்து நின்றார்கள். உடனே இவர் ஒரு வார்த்தை பேசியது, அடுத்த வார்த்தையை அவர் பேசியது உண்மை. ஆனால் அமைச்சராக இருந்தவர் ** என்று அந்த வார்த்தையைச் சொல்லக்கூடாது. (கூச்சல்-குழப்பம்) ஜனநாயக நெறிகள். எது இருந்தாலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி நீங்கள் பேசுங்கள். நிதிநிலை அறிக்கையிலே பேசுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பேசுபவர் பேசட்டும். ஆனால் அந்த தொனிதான். ஒரு அமைச்சராக இருந்து பண்பட்டவருக்கு அந்த தொனி வரக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். (கூச்சல்-குழப்பம்)

**திரு. துரைமுருகன்:** இதுதான். இப்பொழுதுதான் பிரச்சினை வருகிறது. எப்படி என்று கேட்டால் மாண்புமிகு கல்வி அமைச்சர் சொன்னார். பொன்முடி ** என்று சொன்னார் என்று. அதை record பண்ணிவிட்டார் பார்த்தீர்களா? அதுதான் தவறு. (கூச்சல்-குழப்பம்) You should expunge that also.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுவும் நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அந்த வார்த்தையைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்த வார்த்தை வேண்டாம். நான் வாபஸ் வாங்கிவிடுகிறேன். ஆனால்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அந்த வார்த்தை பேசியபோது கோபம் இருந்ததே, அந்தத் தொனியில்தான் அது ஏற்பட்டதே தவிர வேறொன்றும் கிடையாது.

**டாக்டர் க. பொன்முடி:** ** என்று சொல்லும்போது நான் சொல்லாமல் இருக்க முடியுமா?

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி அமருங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் அமருங்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விளக்கம் சொல்லட்டும். (குறுக்கீடு) அமைச்சர் அவர்களே, நீங்கள் அமருங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசப்படுகிற வாதங்கள் அல்லது கருத்துகள் அல்லது ஒருவருக்கொருவர் மாறுபாடாகப் பேசுகிற எண்ணங்கள் அவைகளைவிட, பேச அழைக்காதவர்கள், பேச வேண்டாதவர்கள் அதிகமாக எழுந்து நின்று பேசுகிறபோது பேசுகிற பேச்சுவார்த்தைகள்தான் அவையினுடைய போக்கை மாற்றிவிடுகின்றன. ஆகவே, பேசுகிறவர்களுடைய பேச்சு அனுமதிக்கப்படுகிற காரணத்தாலே மட்டும் அவையின் மரபுகள் மீறப்பட்டுவிட்டதாக ஆகாது. அந்த வார்த்தைகளுக்கு மறுப்பு வார்த்தைகளும் முறையாகச் சொல்லப்பட்டு இடம் பெற்றுவிடுகிற காரணத்தால் அவை இந்த விவாதத்தில் இடம் பெறலாம். அது இடம் பெறுவதனால் ஒன்றும் ஆகிவிடாது. பொன்முடியாக இருக்கட்டும், அன்பழகனாக இருக்கட்டும், நான் சொல்லுகிற காரணத்தாலே அதுதான் முடிவு என்று பொருள் அல்ல. இந்த அவையிலே உள்ள ஒவ்வொருவருக்கும், கட்சியின் சார்பாகவும், தங்களுடைய சொந்த அடிப்படையிலேயும் கருத்துகளைச் சொல்ல வாய்ப்பு உள்ளபோது, கருத்துகளை எடுத்து வைக்க எல்லா உரிமையும் இருக்கிற காரணத்தால் ஒருவர் சொல்வதே முடிவு அல்ல. சொல்வது எல்லாம் அவரவருடைய எண்ணம். அந்த எண்ணம் வெற்றி பெறுமா, பெறாதா என்பது இந்த அவைக்கு அப்பாற்பட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டிய ஒன்று. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினையில் விவாதத்தில் இடம்பெறுகிற வார்த்தைகள் unparliamentary-ஆக இருந்தால் அதைக் கட்டாயமாக நீக்கிவிடுங்கள். Parliamentary-ஆக இருக்குமானால் அது அனுமதிக்கப்படுவதனாலே மட்டும் அவையின் மரபுகள் மீறப்பட்டதாக ஆகாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகச் சட்டமன்றத்திற்கு என்று ஒரு வரலாறு இருக்கிறது, மரபு இருக்கிறது, இதற்கு மாண்பும் இருக்கிறது. ஆகவே, மாண்பு நிறைந்த உறுப்பினர்களாகிய நாம் இருக்கக்கூடிய அவையிலே, எந்தத் தரப்பிலே யார் பேசினாலும்கூட, கண்ணியக் குறைவான வார்த்தைகள் பேசுவது என்பதை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கக் கூடாது. ஆகவே, இனி வரக்கூடிய காலகட்டங்களிலே எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்கூட கண்ணியக்குறைவான வார்த்தைகள் பேசுவது என்பது மரபுக்கு இழுக்கானது என்ற வகையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்வது, யாரும் இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவதற்கு அனுமதிக்கக்கூடாது. இந்த மன்றத்தினுடைய மரபையும் கண்ணியத்தையும் கட்டிக்காப்பது எல்லோருடைய கடமையாகக் கருத வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் நடுநிலையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,** என்று சொன்னதற்குப் பிறகுதான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி அவர்களே, உங்கள் தரப்பிலும் தடிப்பான வார்த்தைகள் வந்தன. அதற்கு எதிர்த் தரப்பிலும் தடிப்பான வார்த்தைகள் வந்தன. அவைகளெல்லாம் அவைக்குறிப்பிலே ஏறவில்லை. நீங்கள் ஏன் அதையெல்லாம் பெரிதுபடுத்துகிறீர்கள். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். அவர் இப்போது வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றிப் பேசுவார். அவைக் குறிப்பிலே ஏறாத வார்த்தைகளைப்பற்றி யாரும் விமர்சனம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. பொன்முடி பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 100 நாள் ஆட்சியிலே ஏறியிருக்கிற விலைவாசிகளைச் சுட்டிக் காட்டினாலே, மக்கள் எவ்வளவு அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். ஒருசில பொருட்களின் விலைப் பட்டியலை மார்க்கெட்டிலிருந்து பெற்று வந்திருக்கிறேன். அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்வார்.

**டாக்டர் க. பொன்முடி**: கடந்த ஆட்சிக் காலத்திலே மணிலா எண்ணெயினுடைய விலை கிலோவுக்கு 32 ரூபாய், இன்று 46 ரூபாய். ரீபைன்ட் ஆயில் 35 ரூபாய், இன்றைக்கு 47 ரூபாய். பூண்டு 28 ரூபாய், இன்றைக்கு 40 ரூபாய். வெங்காயம் 3 ரூபாய், இன்றைக்கு 7 ரூபாய். வெல்லம் 12 ரூபாய், இன்றைக்கு 17 ரூபாய். தனியா 20 ரூபாய், இன்றைக்கு 30 ரூபாய். சீரகம் 130 ரூபாய், இன்றைக்கு 150 ரூபாய். சோம்பு 33 ரூபாய், இன்றைக்கு 40 ரூபாய். வெந்தயம் 22 ரூபாய், இன்றைக்கு 27 ரூபாய். கடுகு 18 ரூபாய், இன்றைக்கு 22 ரூபாய். மிளகாய் 28 ரூபாய், இன்றைக்கு 37 ரூபாய். தேங்காய் எண்ணெய் 35 ரூபாய், இன்றைக்கு 42 ரூபாய். கசகசா 90 ரூபாய் விற்றது, இன்றைக்கு 140 ரூபாய். இலவங்கம் 125 ரூபாய் விற்றது இன்றைக்கு 650 ரூபாய். ஏலக்காய் 450 ரூபாய் விற்றது இன்றைக்கு 800 ரூபாய். பொன்னி பச்சரிசி 14 ரூபாய் விற்றது இன்றைக்கு 16 ரூபாய். புழுங்கல் அரிசி 13 ரூபாய் விற்றது இன்றைக்கு 16 ரூபாய். இதெல்லாம் 100 நாள் ஆட்சியின் சாதனைகளாக, விலைவாசிகள்...

*முற்பகல் 11-30*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய, தமிழகத்து தாய்மார்கள் வீடுகளிலே பயன்படுத்தக்கூடிய பல வீட்டு சமையல் பொருட்கள் எல்லாம் வடபுலத்து மாநிலங்களிலிருந்து வருவது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். குறிப்பாக ஏற்கெனவே மைய அரசினுடைய கொள்கையை ஏற்று வடபுலத்து மாநிலங்களில் நடைமுறைப்படுத்தி இருக்கின்ற VAT என்று சொல்லக்கூடிய அந்த வரித் திட்டம் உணவுப் பொருட்களின் விலைவாசியை ஏற்றி இருக்கிறது. நாங்கள்கூட அண்மையிலே மைய நிதி அமைச்சர் அவர்களிடம் இது கூடாத ஒன்று என்று எச்சரித்தோம். தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலும் வீட்டு சமையலுக்கு வேண்டிய பொருட்களின் விலை உயர்ந்துவிடும் என்பதைக்கூட நாங்கள் எச்சரித்துச் சொன்னோம். அப்படி இருந்தும்கூட, இந்த 31 ஆம் தேதிக்குள் அதை நடைமுறைப்படுத்தாவிட்டால், மாநில அரசுகளுக்குத் தரக்கூடிய நிதியைக்கூட தரமாட்டோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை எதிர்த்துச் சொன்னதே தமிழக அரசு ஒன்றுதான் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லி, இந்த உயர்வுகளுக்குக் காரணம் மைய அரசினுடைய தவறான வரி விதிப்புக் கொள்கை என்பதைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி விளக்கம் சொல்லுங்கள், இன்னும் 3 நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை எங்கே பேசவிட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இன்னும் 30 பேர் பேச வேண்டும். அவை என்பது உங்களுக்கு மட்டும் உரியதல்ல.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசியைப் பொறுத்தவரையில் மத்திய வரி விதிப்பினாலேயே இவ்வளவு ஏறிவிட்டது. நீங்கள் வேறு இப்போது 135 கோடி ரூபாய்க்கு அதிகமாக வரி போட்டு இருக்கிறீர்கள். அதுதான் பிரச்சினை. (குறுக்கீடுகள்) இப்போது என்ன நான் பேசட்டுமா, வேண்டாமா? (குறுக்கீடுகள்) வேண்டாம் என்றால், சொல்லுங்கள், நான் போகிறேன், அர்த்தமே இல்லாமல் இருக்கிறது. நான் என்ன, தப்பாகவா பேசுகிறேன்? பேசவே கூடாது என்றால் என்ன அர்த்தம்?

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பன்னீர்செல்வம் உட்காருங்கள். பேரவைத் தலைவர் வேலையை நீங்கள் ஏன் எடுத்துக்கொள்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமர்ந்துகொண்டு யாரும் பேசக்கூடாது, அது அவை மரபுக்கு உரியது அல்ல. அனுமதி பெற்று, பேரவைத் தலைவர் அனுமதித்தால் எழுந்து கருத்துச் சொல்லலாமே தவிர, அமர்ந்துகொண்டு யாரும் பேசக்கூடாது. திரு. பொன்முடி பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 135 கோடி ரூபாய்க்கு இதுபோன்ற பொருட்களின் மீது வரி விதித்து இருப்பதால், மேலும் விலைவாசி உயரக்கூடிய ஆபத்து இருக்கிறது. அதைத்தான் நம்முடைய C.P.I. கட்சியைச் சார்ந்த திரு. பழனிசாமி அவர்கள்கூடச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆனால் கடந்த 5 ஆண்டுகளிலே கலைஞருடைய ஆட்சியிலே விலைவாசி ஓரளவுக்கு சீராக வைக்கப்பட்டு இருந்ததைக் கண்டு மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். விலைவாசி உயர்வுதனை கட்டுப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

223439.

100 நாட்களிலே நடைபெற்று இருக்கிற பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது, 100 நாட்கள் ஆட்சியிலே நடைபெற்று இருக்கிற பொய் வழக்குகள் ஏராளமாகிக் கொண்டு இருக்கின்றன. குறிப்பாக அரிசி. இன்றையதினம் தினமலர் பத்திரிகையிலேயே புழுத்த அரிசி பற்றி ஒரு செய்தி வந்து இருக்கிறது. அந்தப் புழுத்த அரிசியைப் பற்றிச் சொல்கிறேன். இன்று பொதுவாக பல்வேறு இடங்களிலே, கிடங்குகளிலே இருக்கிற அரிசி எல்லாம், அதிகம் வாங்கப்பட்ட காரணத்தால், அறைகளில் வைக்க முடியாமல், open place–லே வைக்கப்பட்டு இருக்கிறது. ஒரு குடும்பப் பெண் என்ன செய்வார் என்று சொன்னால், ஒரு துணியை வீட்டிலே மடித்து வைத்துக்கொண்டு இருக்கிறபோது திடீரென்று மழை வந்துவிட்டால், முதலிலே மழையில் நனைந்துகொண்டிருக்கிற துணியைக் கொண்டுவந்துதான் வீட்டிலே வைப்பாரே தவிர, மடித்துக்கொண்டு இருக்கிற துணியை மேலும் மடிப்போம் என்று எண்ணமாட்டார். இப்போது 100 நாட்கள் இந்த ஆட்சி நடைபெற்று இருக்கிறது. முதலிலே வந்து இருக்கிற நெல், அதுவும் குறிப்பாக வெளியிலே வைத்திருக்கிற நெல், அரிசியை எல்லாம் முதலிலே கடைகளுக்கு அனுப்பி இருந்தால், இந்த அளவுக்குச் சேதம்கூட வந்திருக்காது, கலர் மாற்றம்கூட வந்திருக்காது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான ஒரு தகவலை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினமலர் ஏட்டிலே வந்திருப்பதைப் பூராவும் படித்துப் பார்த்து இருக்கமாட்டாரோ என்று நான் அச்சப்படுகிறேன். கிட்டத்தட்ட 18 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், நமக்குத் தேவையானதே 4 இலட்சம் டன் அரிசிதான். தேவைக்கு மேலே அதிகமான அரிசியை வாங்கியிருக்க வேண்டியதில்லை. அப்படித் தேவைக்கு மேலே அதிகமாக அரிசியை, கிட்டத்தட்ட 14 இலட்சம் டன் அரிசியை அதிகமாக வாங்கி, அதைப் பாதுகாக்கக்கூட போதிய வசதி இல்லாத நிலையில் வைத்த காரணத்தால், கடந்த 3 ஆண்டு காலத்தில் நடந்த நிகழ்வுகளின் காரணமாக அந்த அரிசி கெட்டு பழுப்பு நிறமாகிவிட்டதேயொழிய இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு வாங்கி, அப்படி ஆகவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த தினமலரில் வந்துள்ள வரிகளை நான் படிக்க விரும்புகிறேன். 'பல கோடி இழப்பு உறுதி' என்று தலைப்பிட்டு, 'ஜெயலலிதா அரசின் உத்தரவால் (குறுக்கீடு) தமிழக Godown–களில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசி யாருக்கும் பயன்படாமல் இன்னும் சில மாதங்களில் கெட்டுப் போக உள்ளது.' தான் சொன்னதை உண்மை என்று நிரூபிப்பதற்காக இத்தகைய நடவடிக்கையை முதல்வர் எடுத்து உள்ளார் என்பதே உண்மை (குறுக்கீடு) நான் தினமலரை படிக்கவில்லையா?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் தவறான தகவல் என்று சொல்கிறேன். முதலில் பத்திரிகையை அவையிலே படிக்கக்கூடாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விதியினைச் சுட்டிக்காட்டிச் சொல்ல வேண்டும். அடுத்து, 1500 கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசி ஏற்கெனவே வாங்கப்பட்ட அரிசி, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே வாங்கப்பட்ட அரிசி, 18 இலட்சம் டன் அரிசி, தேவைக்கு அதிகமாக 14 இலட்சம் டன் அரிசி வாங்கப்பட்டது என்பதைத்தான் தினமலர் பத்திரிகையை ஒட்டுமொத்தமாக நீங்கள் படித்துப் பார்த்தால் புரியும். அப்படி வாங்கிய அரிசியை, கெட்டு வருகின்ற நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், கெட்டுவிட்ட நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், அதை உடனடியாக விநியோகம் செய்ய வேண்டும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*முற்பகல் 11–35*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி 4 இலட்சம்டன்தான். மீதி இருப்பது நெல் இருப்பு. அரிசி வேறு, நெல் வேறு. நெல்லைக் குத்தி, இருக்கின்ற மாடர்ன் ரைஸ் மில்லில் பாதுகாத்திருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. அதைத்தான் தினமலரில் சொல்லி இருக்கிறார்கள். 14 இலட்சம் டன்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை அரிசி ஆக்கியிருந்தால் பாதுகாக்கப்பட்டு இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். 18 இலட்சம் டன் இருக்கிறது. அந்த நெல்லை அரிசி ஆக்குகிற பணியைக் கடந்த ஆட்சியில் இவர்கள் ஏன் எடுக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்ட வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். 4 இலட்சம் டன் அரிசி பாதுகாப்பாக இருக்கிறது. 14 இலட்சம் டன் நெல் வெளியிலே

இருக்கிறது. வெளியிலே துணி காய்கிறது. மழை பெய்தால் அதைத்தான் முதலிலே எடுத்து வைக்க வேண்டும். அதுபோல 4 இலட்சம் டன் அரிசியை விநியோகிப்பதற்குப் பதிலாக அந்த நெல்லை அரைத்துக் கொடுத்திருந்தால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டிருக்காது. அதுதான் என்னுடைய வாதம். ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு, அந்தப் பொய்யை நிரூபிக்க வேண்டும் என்பதற்காக ஒரு உறுப்பினருடைய உரிமையை மீறி ஒரு பொய் வழக்குப் போடப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு திரு. போளூர் வரதன், பேசுங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசவே இல்லை. தயவுசெய்து இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**திரு. பரிதி இளம்வழுதி:** Speaker, Sir, on a point of clarification ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லலாம். அல்லது போளூர் வரதன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வரவேண்டிய உச்சகட்டத்திற்கு வந்துவிட்டீர்கள். முடிந்தது. போளூர் வரதன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விளக்கம் சொல்கிறார்.

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தினமலரிலே வந்திருக்கிற அந்தச் செய்திக்கு முழுக்க முழுக்க அரசின் சார்பாக என்னுடைய மறுப்பினைத்



தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுதுதான் சற்று நேரத்திற்கு முன்பாக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சந்தித்து அதைப்பற்றிய விளக்கங்களையும், அதைப் பற்றிய தெளிவான உத்தரவுகளையும் பெற்றிருக்கிறோம். ஆகவே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்புவதைப்போல, தினமலர் பத்திரிகையிலே வந்திருப்பதைப் போல எந்தவிதமான பதற்றமும் இல்லை. ஏற்கெனவே இருக்கிற அரிசியைப் பற்றிய முழு விவரங்களும் ஆய்விலே உள்ளது. விசாரணையிலே அதைப்பற்றி எல்லாம் ஏற்கெனவே உங்களுக்கு நாங்கள் சொல்லியிருக்கிறோம். அந்த அரிசி தனி. இப்போது நெல் பற்றிய விவரங்கள், Cap storage–லே வைத்திருக்கிற 9 இலட்சம் டன் நெல்லைப் பற்றிய விவரங்கள் தினமலரிலே இன்றைக்கு வந்திருக்கின்றது. அதைப் பற்றிய முழு விவரத்தையும் இன்றைக்கு ஓர் அறிக்கையாக நான் பத்திரிகைக்குத் தர இருக்கிறேன். ஆகவே, முழுக்க முழுக்க அவை அத்தனையையும் மறுத்து, இன்றைக்கு மாலை நான் பத்திரிகைகளுக்குத் தெளிவான அறிக்கையைத் தர இருக்கிறேன் என்பதனை உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தினமலர் பத்திரிகையைச் சொன்னீர்கள். அவர் விளக்கம் சொல்லிவிட்டார். அதோடு பேசி முடியுங்கள். அதற்கு மேல் அனுமதி கொடுக்க முடியாது. போளூர் வரதன், பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** 10 நிமிடங்கள்கூட முடியவில்லையே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியாது, முடியாது.

**THIRU DURAI MURUGAN:** We are requesting the Hon'ble Speaker.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போளூர் வரதன், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இரண்டு விஷயங்கள். உங்கள் help–க்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சபையிலே வைத்தால் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் விளக்கம் சொல்கிறேன். தாங்கள் பத்திரிகைக்கு அளிக்கக்கூடிய அந்த விளக்கத்தை அவையிலே வையுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். திரு. போளூர் வாதன் பேசலாம்.

*முற்பகல் 11-40*

**டாக்டர் க. பொன்முடி:** நான் பேச்சை முடித்துக்கொள்ள அனுமதியளிக்க வேண்டும்.

**திரு. பரிதி இளம்வழுதி:** Point of Order.

**திரு. இ. புகழேந்தி:** பொன்முடி அவர்கள் பேச அனுமதி அளிக்க வேண்டும்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தரிசு நில மேம்பாடு குறித்து பல்வேறு கருத்துகளை இங்கே அவையிலே, ஆட்சியிலே இருக்கின்ற எங்களைக் குறித்து, ஆட்சியிலேயிருந்து சென்றவர்கள் வெளியிலே சென்று அறிக்கைகளாக விட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றபோது, தமிழகத்திலே இருக்கின்ற மக்கள், இந்தத் தரிசு நில மேம்பாட்டு நிலைமையை இப்போது எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நேற்றையதினம்கூட முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தரிசு நில மேம்பாட்டிற்காக 5 கோடியே 56 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, 25,000 ஏக்கர் நிலங்களில், முந்திரி, கருவேலன், பழத்தோட்டம், பயிர் வகைகள் என்று பல்வேறு வகையான நிலைமைகளை அந்த அரசு செய்திருக்கிறது என்று ஒரு விளம்பரத்தை, விளக்கத்தைத் தந்தார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். 5 கோடியே 56 இலட்சம் ரூபாயைக் கடந்த ஆட்சிக் காலத்திலே செலவழித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் ** கலைஞர் அவர்கள் சொல்கிறார்கள். 25,000 ஏக்கர் தரிசாக இருந்த நிலத்தை நான் சீர் செய்து இருக்கிறேன் என்று அறிக்கை விட்டு மக்களைத் திசை திருப்புகிறார்கள் என்பதுதானே உண்மை. காரணம் அதுவல்ல.**

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. துரைமுருகன்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறபோது ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ஏதோ ** என்றார். (குறுக்கீடு) மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் சொன்னதைப்போல, இதெல்லாம் நமக்குப் பாலபாடம், செய்து முடிந்து போயிற்று. இந்தக் கூச்சல் போடுவதெல்லாம் வேண்டாம். ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். (குறுக்கீடு) போளூர் வரதன் அவர்கள் உட்கார வேண்டும். ஒருவர் எழுந்து நின்றால், மற்றொருவர் உட்கார வேண்டும். I am standing. மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் அவர்கள் மாங்காய் புளித்ததோ, வாய் புளித்ததோ என்று சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதனுக்குச் சொல்கிறேன், ** போளூர் வாதன் அவர்களே, காடு வெட்டுவதற்கென்றே பல அமைச்சர்கள் இருந்தார்கள். அதெல்லாம் பழைய கதை, நீங்கள் புதிதாக வந்து இருக்கிறீர்கள், வேறு ஏதாவது பேசுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவரவர்களே, முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் சொல்கிறார், காடுகளை எல்லாம் வைத்தார்கள் என்று. நான் கேட்பது, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறேன், **

**திரு. துரைமுருகன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போளூர் வரதன், நீங்கள் உட்காருங்கள்.

*முற்பகல் 11-45*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற குற்றச்சாட்டு ஒருவேளை உண்மையான குற்றச்சாட்டாக இருந்தால்கூட, அதற்கான ஆதாரத்தைத் தங்களிடத்திலே தந்து அனுமதி பெற்றுவிட்டுத்தான் குற்றச்சாட்டு பற்றிப் பேச வேண்டும். இல்லையானால், கடந்த ஆட்சியைப் பற்றி இப்படித்தான் நாங்கள் குற்றச்சாட்டு பேசுவோம் என்றால், இன்றைக்கு ஆட்சி நடத்துகிறவர்கள் ஏற்கெனவே ஆட்சியில் இருந்திருக்கிறார்கள்; அந்த வரலாற்றை நாங்கள் திரும்ப இங்கே வரிக்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வரி பேச வேண்டிய நிலைமை ஏற்படும். முறையோடு நடந்தால், முறையோடு குற்றமோ, குறையோ, அந்தக் குறைகளை இங்கே எடுத்துப் பேசி, நியாயங்களைப் பெறுவதற்கு யாரும் முயற்சி செய்யலாம். முறை கடந்துதான் நாங்கள் யாரையும் பற்றிப் பேசுவோம் என்றால், முறை கடப்பது என்பது ஒரு பக்க நியாயம் மட்டுமல்ல, இரண்டு பக்கத்திலேயும் நடைபெறும்.

**திரு. துரைமுருகன்:** ஒரே ஒரு வேண்டுகோள். ஒரு explanation. (Interruption) I am not going to use the expression.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்லிவிடுகிறேன். திரு. துரைமுருகன் அவர்களே, ஓர் உறுப்பினர் பேசும்போது இன்னொரு உறுப்பினர் நிற்கக்கூடாது. நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். போளூர் வரதன் அவர்கள் பொதுவாகப் பேசிக்கொண்டு வருகிறார். சில கருத்துகளைப் பேசிக் கொண்டு வருகிறார். அந்த மாதிரி பொதுவான கருத்துகளைப் பேசுவது என்பது எல்லாத் தரப்பிலும், எல்லோரும் பேசுகிறோம். அதிலே ஒன்றும் தவறு இல்லை. அவர் குறிப்பிட்டு யார் மேலேயாவது, ஓர் அரசைச் சேர்ந்த யார் மேலேயாவது, அவர் இந்தக் குற்றத்தைச் செய்தார் என்று சொன்னால், அதற்குரிய ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுத்தான் பேச வேண்டும். அவர் ஒரு பொதுவான கருத்தைச் சொல்கிறார். நீங்கள் பேசுகிறபோது அதற்கான விளக்கத்தைச் சொல்லுங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நயமாகப் பேசத் தெரிந்த தாங்கள் insinuation-னோடு பேசப்படுவதை எப்படி ஏற்றுக்கொள்வது என்று எனக்குத் தெரியவில்லை. கலைஞர் ஆட்சியில், கலைஞர் ஆட்சியில் என்றால்; எல்லோருடைய ஆட்சியிலும் எத்தனையோ நடைபெற்றிருக்கின்றன. நடைபெற்றதைப்பற்றிக் குற்றச்சாட்டுச் சொல்ல விரும்பினால், ஆதாரத்தைத் தங்களிடத்திலே தரட்டும்; பேசட்டும், விசாரணை நடத்தட்டும். கலைஞர் ஆட்சியின்மீது மட்டும் குற்றச்சாட்டு என்று சொன்னால், கலைஞர் ஆட்சிக்கு முன்னாலே அந்தப் பண்ணை இல்லையா? அப்போதும் தவறு நடைபெற்றிருக்காதா? (குறுக்கீடுகள்) ஆகவே, அப்படி நடைபெற்றிருந்தாலும்கூட, அதைச் சொல்வதற்கான முறை உண்டு. அந்த முறையைத் தாங்கள் வரையறை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போளூர் வரதன், நீங்கள் குறிப்பிட்ட பண்ணையைப் பற்றி ** என்கின்ற வகையிலே ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதாக இருந்தால், அந்தக் குற்றச்சாட்டுக்குண்டான ஆதாரத்தைக் கொடுத்து விட்டுத்தான் சொல்ல வேண்டும். ஆகவே, நீங்கள் அந்தக் குறிப்பிட்ட பண்ணையைப் பற்றிக் குறிப்பிடுகிற காரணத்தால், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1-1/2 மாதத்திற்கு முன்பாகவே அந்தப் பண்ணையினுடைய நிலைமைகள் குறித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பண்ணையைவிட்டு வெளியே வந்துவிடுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** முதலமைச்சர் அவர்களிடம் நான் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தத் தொகுதி மக்களின் சார்பாக, அந்த உணர்வுகளை இந்த அரசுக்கு நான் தெரிவித்திருக்கிறேன். அதுசம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் 9 துறைச் செயலாளர்களுக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள் நடவடிக்கை கோரி. அதனுடைய மனுவும் எனக்கு வந்திருக்கிறது. இந்த உண்மைகளை நான் ஏற்கெனவே அரசுக்குத் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைமீது எனக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன. அதை ஆதாரமாக வைத்துத்தான் நான் பேசுகிறேனே தவிர, நமது பேராசிரியர் அவர்கள் சொன்னதைப்போன்று--.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன், முதலமைச்சர் அவர்களிடத்திலே ஏதாவது ஒரு குறிப்பிட்ட சம்பவம் பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்று தாங்கள் மனு கொடுப்பது, அதை விசாரிப்பது என்பது வேறு. சட்டமன்றத்திலே ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறபோது அதற்குரிய ஆதாரத்தை நீங்கள் சொல்ல வேண்டும். நீங்கள் முதலமைச்சர் அவர்களிடத்திலே மனு கொடுத்ததிலே தவறு இல்லை. அதிலே விசாரணை நடக்கட்டும். அதிலே உண்மைகள் வெளிவரட்டும். அது சம்பந்தமான ஆதாரங்கள் வந்தவுடனே நீங்கள் மீண்டும் பேசலாம். இப்போது நீங்கள் நிதிநிலை அறிக்கையின்மீது சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. நான் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்பதனாலே, அந்தப் பகுதிக்குச் செல்கிறபோது அந்த மக்கள் பல்வேறு கோரிக்கைகளை என்னிடத்திலே சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிறபோது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர், பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள், தொடக்கத்திலே இருந்து எல்லா ஆட்சியிலும் இருந்திருக்கிறது என்று. அன்புடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன், நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் ஆட்சி அப்போது இல்லை. 1970-லே இருந்து 2000 வரை 30 ஆண்டு கால ஒப்பந்தம் என்று வருகிறபோது, திமுக. ஆட்சியிலேதான் அந்த ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசினுடைய பண்ணை என்று நான் கேள்விப்படுகிறேன். ஆகவே, அதுகுறித்து இப்படியெல்லாம் பேச வேண்டுமா என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள். அப்படி எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாம் என்றால், நம்முடைய அவையில் அதற்கு நேரம் இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன், பண்ணையை விட்டு வெளியே வந்துவிடுங்கள். அதற்குப் பிறகு சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்லுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** நான் பண்ணையை விட்டு வெளியே வரத்தான் ஆசைப்படுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில பண்ணை; மாநில சர்க்காருக்கு உட்பட்ட இடம். மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் இணைந்து அந்தப் பண்ணையை நடத்தியிருக்கிறார்கள், 30 ஆண்டு கால ஒப்பந்தத்தில். ஒப்பந்தம் முடிவுற்றது. முடிவுற்ற பின்னாலே மத்திய சர்க்கார் போட்ட முதலீட்டைப் பெற்றுக்கொள்கிறார்கள். மாநில சர்க்கார் அதைத் தொடர்ந்து நடத்தியிருந்தால், பத்தாயிரம் குடும்பங்கள் இப்போது தெருவிற்கு வந்திருக்காது. பல இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள கனி தரும் மரங்கள் இப்போது yielding-ல் இருக்கின்றன. அவையெல்லாம் இப்போது காய்ந்து போகின்ற நிலையில் இருக்கின்றன. அதை இந்த அரசு எடுத்து நடத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கையே தவிர, குற்றம் சொல்ல வேண்டும் என்பது என்னுடைய எண்ணம் அல்ல. இதற்கு முன்னுதாரணம் வேறொன்றையும் சொல்கிறேன். ** இப்படிப் போய்க்கொண்டேயிருந்தால் அந்தப் பத்தாயிரம் குடும்பங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*முற்பகல் 11-50*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்களே, Point of Clarification.

**திரு. போளூர் வரதன்:** நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அந்தத் தொகுதியிலேயிருக்கிற நிலைமைகளைச் சொல்கிறேன். அதாவது-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், செங்கம் பண்ணையைப் பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியும். அதனால் அதைப் பற்றிய குற்றச்சாட்டை எழுதிக் கொடுங்கள். மற்றபடி நிதிநிலை அறிக்கையின்மீது பேசுங்கள். இன்னும் ஐந்து மணித் துளிகள்.

**திரு. போளூர் வரதன்:** சார், ஐந்து மணித் துளிகள் என்றால் ஒன்றையும் சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். முடிகிற அளவிற்குப் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** எனக்குக் கொடுத்ததிலே இப்போது 7 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன. தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கத்திலே சிமெண்ட்டும், இரும்பும் கொடுக்கிறீர்கள். கல், ஜல்லி எல்லாம் வெளியிலே வாங்கிக்கொள்ளலாம் என்பது அரசாங்க விதி.**

**திரு. கோ.சி. மணி:** எந்த மாவட்டத்திலே என்ற விவரம் தரச் சொல்லுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** அது மட்டுமல்ல, (குறுக்கீடு) இல்லை, அவர் பின்னாலே பேசலாம், அவர் அந்தத் துறையினுடைய முன்னாள் அமைச்சர் என்பது எனக்குத் தெரியும்.

**திரு. கோ.சி. மணி:** அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன் நீங்கள் பேசுங்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** அதுமட்டுமல்ல, இப்போது அரசாங்கத்திலே ஒவ்வொரு மாவட்டத்திலேயும் 4 சென்டர்களிலே கூட்டுறவு கருமார் பட்டறை வைத்திருக்கிறார்கள். அவர்களது வேலை அந்த வீடுகளுக்கு ஜன்னல், கதவு போன்ற இரும்பு சாமான்களைத் தயார் பண்ணிக்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொடுக்க வேண்டும். அரசாங்கத்திலே, 16 கேஜி., 18 கேஜி. பிளேட் தகடுகளைப் போட்டுத்தான் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று விதி வைத்திருக்கிறார்கள். பழைய மந்திரியும் இங்கே வந்திருக்கிறார். அவர் ஆட்சியிலே நான் மெம்பர் இல்லை. இப்போது நான் மெம்பர். அவர்கள் விரும்பினால் தமிழ்நாட்டிலே எந்தத் தொகுதியை வேண்டுமானாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம். அங்கே கட்டப்பட்டிருக்கிற வீடுகளில் இருக்கிற தகடுகள் 16 கேஜ் அல்லது 18 கேஜ் இருக்கிறதா என்று பார்ப்போம். 20 கேஜ், 22 கேஜ் பிளேட், அது காற்றடித்தால் பிய்த்துக்கொள்கிறது. அந்தமாதிரி தரம் தாழ்ந்த தகடுகளை வைத்து, சாதாரண மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், ஒன்று அந்த மக்கள் வாயில்லா ஜீவன்கள், கேட்க முடியாது என்ற நிலையிலே அவைகளை இவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும், அல்லது அதிகாரத்தை வைத்துக்கொண்டு அதிலே ஊழல் செய்திருக்க வேண்டும். இதில் எது உண்மை என்பதை அரசு அறிய வேண்டும்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு குற்றச்சாட்டுகளைச் சொல்ல உரிமை உண்டு. எந்தக் குற்றச்சாட்டு வேண்டுமானாலும் சொல்லலாம். அதற்குப் பின்னால் அரசாங்கம் விசாரிக்கலாம், நடவடிக்கை எடுக்கலாம். அதிலே எனக்கு மாறுபாடு இல்லை. குற்றச் சாட்டுகளைத் தங்களிடத்திலே கொடுத்து, அந்தக் குற்றச்சாட்டிற்கான ஆதாரத்தைப் பார்த்து, prima facie இருந்தால், சொல்வதற்கு உரிய background, ஆதாரம் இருந்தால் சரி; முழு ஆதாரம்கூட அல்ல, சபாநாயகர் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்ல அனுமதித்து, அதற்குப் பிறகு சொல்கிற ஒருமுறை இந்த மன்றத்திலே உண்டு. அப்படி இல்லையானால் என்னென்னவோ குற்றச்சாட்டு வரும். ஆகவே, அப்படித் தங்களிடத்திலே அனுமதி வாங்காவிட்டால் அவற்றையெல்லாம் நீக்குவதன் மூலமாகத்தான் அவையைத் தாங்கள் தொடர்ந்து நடத்துகிறபோது பிரச்சினை ஏற்படாமல் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்களே, அவர் குற்றச்சாட்டு சொல்லவில்லை. அவர் பொதுவான சில குறைபாடுகளைச் சொல்லிக்கொண்டு வருகிறார். பொதுவான குறைபாடுகளைச் சொல்கிறார். அதை விசாரிக்க வேண்டுமென்று கருத்துச் சொல்கிறார். தனிப்பட்ட யார் மேலும் அவர் குற்றச்சாட்டாகத் தெரிவிக்கவில்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** நான் சொல்கிற செய்தி, நான் சொல்கிற வார்த்தை, அவர் சொன்ன அதே வார்த்தை அல்லாவிடினும், அந்தக்



கருத்து ** என்று முதலிலே சொன்னார். அப்படி ஆணையிட்டிருந்தால் அதற்கு ஏதாவது ஒரு ஆதாரத்தை உங்களிடத்திலே காட்டட்டும். என்னிடம் காட்ட வேண்டாம்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்பவர்கள் அரசாங்கத்தினுடைய அங்கம். எல்லா காலத்திலும் இருக்கக்கூடியவர்கள். அவ்வாறு ஒரு ஆட்சித் தலைவர் மேலே ஒரு குற்றச்சாட்டு என்று வருகிறபோது இன்றுள்ள அரசாங்கம்தான் விசாரிக்க வேண்டும். ஆகவே, யாரோ அரசியல்வாதிகளை அவர் சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் இப்படி ஒரு கட்டளை இட்டிருக்கிறார் என்று சொல்கிறபோது அவர் சொல்கிற மாவட்ட ஆட்சித் தலைவருடைய பெயரை அவர் குறிப்பிட்டுச் சொன்னால் அதைப்பற்றி இன்றுள்ள அரசாங்கம் விசாரிக்க வேண்டும். அது கடந்த கால ஆட்சியின் மேலே சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்று பேராசிரியர் அவர்கள் கருத வேண்டிய தேவையில்லை. ஒரு ஆட்சித் தலைவர் அப்படி நடந்துகொண்டிருக்கிறார் என்றுதான் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சியின்மீதோ, அமைச்சரின்மீதோ குற்றச்சாட்டு என்பது அல்ல பிரச்சினை. அப்படி குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் ஆதாரம் இருந்து சொல்கிறபோது நாங்கள் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். அதுவேறு. ** என்றால் அது சாதாரணமாக அரசாங்க அதிகாரிகள் செய்ய முடியாத ஒரு காரியம். ஆக, அப்படி ஒரு குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் அதற்கு ஏதேனும் ஓர் ஆதாரம் தங்களிடத்திலே காட்டினால் நல்லது, இல்லையென்றால் ** எந்த background-ம் இல்லை என்று ஆகிறது. எனவே, அப்படி இருக்கிறதா என்பதை விசாரித்து தாங்கள் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், ** என்பது தங்களுக்குத் தெரிந்தால் அந்த G.O. copy, பழைய copy இருந்தால் என்னிடத்திலே கொடுங்கள். கொடுத்ததற்குப் பிறகு அதைக் குறிப்பிலே ஏற்றிக்கொள்வோம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. போளூர் வரதன்:** 385 யூனியன்களிலேயும் B.D.O.-க்கள் தொகுப்பு வீடுகளுக்குக் கொடுக்கப்பட்ட பணத்தில் நான் சொன்ன இந்த சிமெண்ட் கம்பிகளுக்குப் பணத்தை deduct செய்து சம்பந்தப்பட்டவர்களுக்கு cheque கொடுத்திருக்கிறார்கள். Record இந்த அரசாங்கத்திலே இருக்கிறது. நான் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதை எடுத்துக்கொண்டுதான் பணம் கொடுக்கிறார்களேதவிர, அதைக் கொடுத்துவிட்டு வாங்குவதில்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு பிரச்சினை இருக்குமானால், அதுபற்றிய புகாரை – complaint – மாண்புமிகு உறுப்பினர் அரசாங்கத்திற்குக் கொடுத்து, அவர்கள் நடவடிக்கை எடுத்து, அதற்குப் பின்னர் பேச வேண்டுமே தவிர, அவர் இங்கே, அரசாங்கத்திலே ஆதாரம் இருக்கிறது, ஆனால் என்னிடத்திலே இல்லை; நான் அதைப் பேசுவேன் என்றால் அது அவ்வளவு முறையானதல்ல. அப்படியானால் எங்களையும் அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதன் அவர்கள் பொதுப்படையான நிர்வாகக் குறைபாடுகளைத்தான் சுட்டிக்காட்டிக்கொண்டு இருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் எந்த நபர்மீதும் அவர் குற்றச்சாட்டைக் கூறக்கூடாது என்பது மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்வதுபோல சரியான ஒன்று. விதி 93–ல் 'No personal allegation of a defamatory or incriminatory nature shall be made by a Member against any Member or any official...' என்றிருக்கிறது. Any official என்று வருகிறபோது அவர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது என்றுதான் நான் கருதுகிறேன். ** என்பதை வேண்டுமானால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு, மற்றவை அவைக் குறிப்பிலே இருக்க அனுமதி வழங்க வேண்டுகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆனால் அப்படிச் சொல்கிறபோது குறைந்தபட்சம் ஓர் ஆதாரம் இருந்தால்தான் நல்லது. சபாநாயகர் சபையை நடத்துவதற்கு எளிதாகும். நாட்டிலே எவ்வளவோ குற்றச்சாட்டு பேசப்படுகிறது. அதற்கு இதற்கு என்றல்ல. குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்பதல்ல; இந்தச் சபையில் அதேபோல ஒவ்வொருவரும் பேச ஆரம்பித்தால் சபையை சபாநாயகர் நடத்த இயலாது. ஆகவே, அந்த அடிப்படையில்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கூடுமானவரையில் சபை நடவடிக்கைகளில் நாங்கள் கலந்துகொள்கிற போது மாறுபாடு அதிகம் வராமல் இருக்க வேண்டுமானால் அப்படிப் பட்டவற்றை தவிர்க்க தாங்கள் முன்வர வேண்டும்.

**திரு. போளூர் வரதன்:** ஒவ்வொன்றுக்கும் நான் ஆதாரம் கொண்டுவர வேண்டும் என்று சொன்னால், ஒன்று நான் முதலமைச்சராக இருக்க வேண்டும்; இல்லை கவர்னராக இருக்க வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இரண்டுமே ஆகமுடியாது.

**திரு. போளூர் வரதன்:** இந்த இரண்டுமாகவே எந்தநேரத்திலும் நான் வரமுடியாது என்று எனக்கே தெரியும். ஆனால் மரியாதைக்குரிய முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அவர் முதலமைச்சராக வந்தால்கூடப் பரவாயில்லை, நான் அவர் கையிலிருந்து பிடுங்கிக்கொள்வேன். ஏனென்றால் எனக்கு உரிமை உண்டு. அவரும் வரமுடியாது. (சிரிப்பு) ஆகவே அந்த ஆசை என்பது எனக்கில்லை. மக்களுடைய உணர்வுகளை, இருக்கிற விதிமுறைகளை வைத்துப் பேசுகிறேன். நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் இருந்தவன். நான் ஒன்றும் புதியவன் கிடையாது. சட்டமன்ற நடவடிக்கைகளை எனக்கு ஒன்றும் அவர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. எனக்கும் தெரியும். அவர் பாணியிலே நான் பேச வேண்டும் என்று சொன்னால், (குறுக்கீடு) "அண்ணே, துரைமுருகன் அண்ணே, உட்காருங்க அண்ணே நீங்க. நான் பேசறேன்; அப்புறம் பேசுங்க நீங்க." நீங்கள் ஒரு சீனியர் மெம்பர் இப்படி ஒவ்வொன்றிற்கும் குறுக்கிட்டுக் கொண்டிருந்தால், இது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், பேசுங்கள்.

*நண்பகல் 12–00*

**திரு. போளூர் வரதன்:** இப்போது பேராசிரியர் அவர்கள் சொல்கிறார்கள்; தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு கூட்டுறவு வங்கிகளிலே 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது ஒரு மனு பெயரில். வீட்டுக்கு, அடுப்புக்கு Gas இணைப்பு கொடுப்பதற்குக் கூட்டுறவு வங்கிகளிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டே இரண்டு நிமிடம், பேசி முடியுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** சார், இப்படிச் சொன்னால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 30 பேர் பேச வேண்டும்.

**திரு. போளூர் வரதன்:** மத்திய கூட்டுறவு வங்கிகளிலே 5 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் லோன் என்று போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். பேங்க் மேனேஜரைக் கேட்டால் நான் அப்ளிகேஷன் கொடுக்கவில்லையென்று சொல்கிறார். 120 கோடி ரூபாய் தமிழகத்திலே அதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்ளிகேஷன் போய்ச் சேர்ந்திருக்கிறது. அப்ளிகேஷன் மேல் பணம் எடுத்துவிட்டார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம் அந்த gas connection–க்கு ஒரு regulator வருகிறது. அந்த regulator மேல் 800 ரூபாய் over rate போட்டு வாங்கி பணம் எடுக்கப்பட்டிருக்கிறது. மார்க்கெட்டில் என்ன விலை இருக்கிறதோ அந்த விலைக்கு எடுத்திருந்தால் பரவாயில்லை. Over rate, 800 ரூபாய் ஒரு regulator–க்கு; இப்படி 120 கோடி ரூபாய் தேர்தல் வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆறு மாதம் ஆகிறது இப்போது. வாங்கியவர்கள் ஒரு தவணைகூடக் கட்டவில்லை. நான் இந்த அரசைக் கேட்க விரும்புவதெல்லாம் இந்த 120 கோடி ரூபாய் உண்மையிலேயே அந்தக் கிராமப்புற மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா அல்லது ஒரு குறிப்பிட்டவருக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்பதை அறிவதற்குக் குறைந்தபட்சம் ஒரு C.B.C.I.D. enquiry போட்டு இந்த 120 கோடி ரூபாய் யாரிடத்தில் இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைக் கண்டுபிடித்து அந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கு அந்தப் பணத்தைத் திரும்பப் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பணப் புழக்கம், பணப் புழக்கம் என்று சொல்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். தொகுதி பற்றியே பேசவிடவில்லை. கிரானைட், தாதுப் பொருள் தமிழகத்திலே சிவகங்கை மாவட்டத்திலே நிறையக் கிடைக்கிறது. மாண்புமிகு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்த கிரானைட்டை எடுக்க வேண்டுமென்றும், அதை மாநிலச் சர்க்காரே எடுக்க வேண்டுமென்னும் கோரிக்கையை அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, மாநில சர்க்காரே எடுத்துக்கொள்வதற்கு அனுமதியும் பெற்றார்கள். அதற்குப் பின்னாலே வந்த புரட்சித் தலைவி அவர்கள் 1991-96-லே 36 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்த கிரானைட், தாதுப் பொருளை இந்தியாவிலேயே தரமுள்ள ஒரு கிரானைட் என்பதை நிரூபித்து



எடுத்தார்கள். அதற்குப் பின்னாலே வந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியினர் அதை மூடிவிட்டார்கள். கிரானைட் ரொம்ப costly. காருக்கெல்லாம் gasket வருகிறதே, அதைத் தயாரிக்கக்கூடிய பொருள்; flight–க்கு grease; எழுதக்கூடிய பென்சில் மை; இவையெல்லாம் தயாரிக்கப்படுகிறது அந்தப் பொருளிலிருந்து. ஆனால், மூடிவிட்டதனுடைய விளைவாக இங்கு இருக்கக்கூடிய சில சமூக விரோதிகள் திருட்டுத்தனமாக என்றைக்காவது தோண்டி எடுத்து, ஜப்பான் மாதிரி நாடுகளுக்கு அனுப்பி, கொள்ளை இலாபம் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கப் பணம் ஏற்கெனவே 1991–லிருந்து 1996 வரை 36 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது, நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இது ரொம்ப காஸ்ட்லியான ஒன்று. தரம் வாய்ந்த கிரானைட் என்பது நிரூபிக்கப்பட்டிருந்தும் கடந்த ஆட்சி அதைக் கைவிட்டது ஏன்? அப்படிக் கைவிட்டதனுடைய விளைவு என்ன? இலாபம் நஷ்டம் பார்த்தார்களா? இலாபம் வரக்கூடியது என்பதை நிரூபித்த பின்னாலும்கூட, மூடியதற்குக் காரணம் என்ன? சமூக விரோதிகள் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவா, இல்லை, புரட்சித் தலைவி ஆட்சியில் வந்த இந்தத் திட்டம் இருக்கக்கூடாது என்பதற்காகவா (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், பணப் புழக்கம், பணப் புழக்கம் என்று சொல்கிறார்கள். ரியல் எஸ்டேட் என்றால் 100 ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்கள்தான். பிளான் அப்ரூவல் வாங்கி எடுத்துக்கொண்டு போக முடியும். அப்படி அப்ரூவல் வாங்கி எடுத்துக்கொண்டு போனால்தான் ரிஜிஸ்டர் ஆபிசில் ரிஜிஸ்டர் பண்ண முடியும், பில்டிங் கட்ட முடியும். கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள், தவறான வழியிலே பணம் சம்பாதிக்கக்கூடியவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு அசோசியேஷன் ஆரம்பித்து, அவர்களால்தான் 100, 200 ஏக்கர் வாங்கி பண்ண முடியும். ஒரு ground, இரண்டு ground வாங்கி விற்கக்கூடியவர்களால் அது முடியாது. அப்படி ஒரு ground, இரண்டு ground–ல் flats கட்டி விற்கக்கூடியவர்கள் அந்த விதியின்கீழ் செல்கிறபோது ரிஜிஸ்ட்ரேஷன் கிடைக்காது, விற்பனை இருக்காது. அந்த விதிகளை மாற்றி, அரசு தளர்த்தி, பழைய நிலைக்குக் கொண்டு வந்தால் பணப் புழக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். கடைசி பாயின்ட்.

முதலிலேகூட இங்கே பத்திரிகை நண்பர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். 25 ஆயிரம், 50 ஆயிரம் ஆகி, 50 ஆயிரம், 2 இலட்சம் ஆகியிருக்கிறது, நாங்கள் கொண்டு வந்த திட்டம்தான் என்று சொன்னார்கள். நாங்கள் ஆட்சியில் இல்லை. அதனால், காங்கிரஸ்

காரர்கள் நாங்கள் கொண்டு வந்த திட்டம் என்று சொல்ல முடியாது. இருந்தாலும், நல்ல உள்ளத்தோடு புரட்சித் தலைவி அவர்கள் இப்போது இலட்சம் ரூபாய் பத்திரிகையாளர்களுக்கு நிதி வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-05*

அதேநேரத்திலே அவர்களுக்கு வீடு ஒதுக்கித் தருகின்றபோது, வைப்புத் தொகை என்று கோரப்படுகிறது. பத்திரிகைத் துறையிலே பணிபுரியக் கூடியவர்கள் எல்லாம் மிகச் சாதாரண நிலையிலே, வறுமைக் கோட்டிற்குக் கீழேதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமைகளைப் பற்றிப் பேச வேண்டுமானால், அவர்கள் வெள்ளையுஞ்சள்ளையுமாக வந்திருக்கலாம். காரணம் அவர்கள் செய்கிற தொழில் அந்தமாதிரி இருக்கும். வீடுகளில் சென்று பார்க்கிறபோது, சாதாரண நிலையிலே அவர்களுடைய குடும்பத்திலேயிருக்கிற குழந்தைகள் ஒருவேளை உணவுக்குக்கூட சிரமப்படுகிறார்கள் என்பதுதான் உண்மை. ஆகையால், அந்த வைப்புத் தொகையைக் கட்டக்கூடிய நிலையிலே அவர்கள் இல்லை. அவர்களுக்கு வீடு ஒதுக்குகின்றபோது, அந்த வைப்புத் தொகையைக் கட்ட வேண்டும் என்பதை இல்லாமல் செய்ய வேண்டும். நேரடியாக அவர்களுக்கு வீடுகளைக் கொடுக்க வேண்டும். அந்த வீடுகளைக் கொடுக்கிறபோது, அந்த ஃப்ளாட்டிலே இரண்டு, இந்த ஃப்ளாட்டிலே இரண்டு என்று பிரித்துக் கொடுப்பதை விட்டுவிட்டு, அந்த நிருபர்களுக்குக் குடியிருப்புகளை உருவாக்கி, ஒரேயிடத்தில் அவர்களுக்கெல்லாம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

20 ஆண்டுகாலம் அவர்கள் பணிபுரிந்தால்தான் அவர்களுக்கு pension கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு sensitive post. அறிவுக்கு உண்மையிலேயே வேலை கொடுக்கக்கூடியவர்கள். 20 ஆண்டு காலம் வேலை செய்தால் எப்படியாவார்கள் என்று நம் எல்லோருக்கும் தெரியும். ஆக, 20 ஆண்டுகாலம் என்பதைக் குறைத்து, 12 ஆண்டுகாலம் அவர்கள் பணியிலிருந்தால், அந்தப் பணிக்காலத்தைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு முன்வா வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒரு நிமிடம் என்னுடைய தொகுதியைப் பற்றிப் பேசலாம் என்று எண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. பி.எம். நரசிம்மன்.



**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை, ஒரு சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாபெரும் வாய்ப்பினை உருவாக்கித் தந்த நாங்கள் வணங்குகிற தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற் பாதங்களில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, பள்ளிப்பட்டுத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக என்னை மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

நம்முடைய இதய தெய்வம், தானைத் தலைவி, புரட்சித் தலைவி, அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை சிறப்பானதாக இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்தவர்கள், பண்பாளர்கள், அரசியல் நோக்கர்கள் எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கெல்லாம் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்பதிலே யாருக்கும் வேறுபாடான கருத்து இருக்க முடியாது. முன்னாலே உரையாற்றிய பிரதான எதிர்க்கட்சியின் உறுப்பினர் மாண்புமிகு பொன்முடி அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் 53 இடங்களில் 'உத்தேசிக்கப்படுகிறது', 'கருதப்படுகிறது' என்கிற சொல் வருகிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். பிரதான எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக, அவருடைய பணிகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, இந்த 'உத்தேசிக்கப்படுகிறது', 'கருதப்படுகிறது' என்பதைத் தேடிப்பிடித்து, இங்கே சொல்லியிருக்கிறார் என்பதைத்தான் என்னாலே உணர முடிகிறது. காரணம் சிறப்பான முறையிலே கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை பிரதான எதிர்க்கட்சிகளேகூட குறை சொல்ல முடியாத அளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் அது எடுத்துக்காட்டுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருக்கிறார்கள். நடைபெற்ற பொதுத் தேர்தலிலே இரண்டு அரசுகளின் பலத்தையும், பத்திரிகை பலத்தையும் தனியார் தொலைக்காட்சி பலத்தையும், பிரதான எதிர்க்கட்சி தன் பக்கம் வைத்திருந்தாலும், அவற்றையெல்லாம் தாள் தூளாக்கி மாபெரும் இமாலய

வெற்றியைத் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது சாதாரண வெற்றி அல்ல. இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்களுடைய அடக்குமுறைகள், அவதூறுகள், பல அத்துமீறல்கள் எல்லாவற்றையும் மீறித்தான் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி, அம்மா அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. எது வந்தாலும் ஏற்றுக்கொண்டு, துணிவே துணையாய் நின்று, தேர்தலிலே தமிழக முதல்வர் அவர்கள் தன்னந்தனியாக வெற்றி பெற்றிருக்கிறார்கள். வெற்றி பெற்றதற்குப் பின்னாலேயும், பல போராட்டங்கள்; தோற்றுவிட்டோம் என்கின்ற எரிச்சல்; புழுதி வாரித் தூற்றுகிறார்கள்.

*பிற்பகல் 12-10*

1967 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்படுகிறபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டினுடைய முதல்வராக அரியணை ஏறுகிறார்கள். அப்போது பத்திரிகையாளர்கள் எல்லாம் கர்மவீரர் காமராஜர் அவர்களைப் பார்த்து, புதியதாக வந்திருக்கிற ஆட்சியைப் பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஆறு மாத காலம்வரை நான் ஒன்றும் சொல்லமாட்டேன். அமைதியாக அவர்களை ஆளவிடுவேன் என்று பெருந்தன்மையோடு கூறினார். தோற்றுவிட்டோம் என்கின்ற எரிச்சலை அவர் அடையவில்லை; அவருக்கு இருந்தது பெரிய புத்தி. ஆனால், இவர்களுக்கு அந்த எண்ணம் வரவேயில்லையே என்ற ஆதங்கம்தான் என்னைப் போன்றவர்களுக்கு இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order.

**திரு. பி.எம். நரசிம்மன்:** I am not yielding. இது ஒன்றும் வேறுபாடான கருத்து அல்ல.

**டாக்டர் க. பொன்முடி:** Point of order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்போது ஆட்சியிலே இருந்த அண்ணாவிற்கு நடுராத்திரியிலே சென்று காமராஜரைக் கைது செய்ய வேண்டும் என்ற ** வரவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி சொன்ன ** என்கின்ற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலே ஏறாது. அதை நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அவர் பேசியதையும் நீக்குங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அவர் பேசியதையும் நீக்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கு முன்னாலே அமர்ந்திருந்த நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் ஓர் உறுப்பினர் எழுந்து நின்றால் நீங்கள் அமர வேண்டும் என்று சொன்னார்கள். நீங்களும் அதைக் கேட்டுக்கொண்டிருந்தீர்கள். ஆகவே, எங்கள் பகுதியிலே இருக்கிற அத்தனைபேரும் எழுந்து நின்று, நீங்களும் எழுந்து நின்றால் சபையை நடத்த முடியாது. ஆகவே, உறுப்பினர்கள் பேசுபவரை அனுமதித்து, சபையை நடத்த ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நரசிம்மன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் இந்த நிதிநிலை அறிக்கை பிரதிபலிக்கிறது. அரசு என்று சொல்கின்றபோது வரிவிதிப்பு இல்லாமல் இயங்க முடியாது. ஆனால், ஏழை எளியவர்கள் பாதிக்காத அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கை உள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள், பணக்காரர்களிடமிருந்து வரியை வாங்கி, ஏழை எளியவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதுபோன்றுதான்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர், அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை ஏழை எளியவர்கள் பயன் பெறுகிற அளவிலே அமைந்திருக்கிறது என்பதற்காக நான் இந்த நேரத்திலே மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-15*

எதிர்க்கட்சி ஒன்று சொல்கிறபோது அதிலே உண்மை இருக்க வேண்டும்; நியாயம் இருக்க வேண்டும். அரசின்மீது களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற முழு நோக்கத்தோடு செயல்படுமேயானால், உண்மை பின்னாலே வெற்றி பெறும். புனைந்து கூறப்பட்ட நிலைமைகள் எடுபடாது. பிரதான எதிர்க்கட்சித் தலைவர் இந்த நிதிநிலை அறிக்கையில் புதுமைகள் எதுவும் இல்லை என்கிறார். எப்படிச் சொன்னாலும் இந்த நிதிநிலை அறிக்கையின் செயலாக்கம் எவ்வகையிலேயும் கெட்டுப் போகாது; சிறப்பாக அமையும்; செம்மையாக நடைபெறும். பிற மாநில நிதிநிலை அறிக்கைகளோடு இதனை ஒப்பிட்டுப் பார்த்தால், இதன் அருமை புரியும். தூங்குவோரை எழுப்பலாம். ஆனால் தூங்குவதைப்போல நடிப்பவர்களை எழுப்ப முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய அரசின் முதல்வராக மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்கிறபோது முன்பிருந்த ஆட்சியாளர்களால் கஜானாவும் காலி. எனவே, இருப்பதைக் கொண்டு சிறப்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இந்த 100 நாட்களிலேயே இந்த அரசு போய்விட வேண்டுமென்று சிலருக்குத் தணியாத தாகமாக இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு ஏன் போக வேண்டும்? 356 அல்லது 355 பிரிவுகளைப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். என்ன காரணத்திற்காக அவற்றைப் பயன்படுத்த வேண்டும்? தமிழகத்தில் முன்பு நடந்ததே, மாணவனைக் கொன்றுவிட்டு அவன் தந்தையை அழைத்து என் பிள்ளை இவன் இல்லை என்று சொல்லி அந்தப் பிணத்தின்மீது டாக்டர் பட்டம் பெற்றார்களே, அப்படி (மேசையைத் தட்டும் ஒலி) ஏதாவது இப்போது நடைபெற்றதா?

ஒரு பைசாவைக் குறைக்க வேண்டுமென்று விவசாயிகள் போராடினார்கள். 8 பேரைக் கொன்றுவிட்டு, அலகாபாத்திலே நடந்ததுபோல 16 பேரையா நாங்கள் சுட்டுக் கொன்றோம் என்று வியாக்கியானம் பேசவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று இப்போது நடைபெற்றதா?



நியாயத்திற்காகப் போராடிய தொழிற் சங்கத் தலைவர்களைக் கத்தியால் குத்தி, அடித்து, உதைத்து சிறைச்சாலையிலே தள்ளவில்லையா? பத்திரிகையாளர்களைத் தாக்கவில்லையா? அதைப்போன்ற சம்பவங்கள் இப்போது நடைபெற்றதா? எதற்காக இந்த ஆட்சி போக வேண்டும்? என் போன்றவர்களுக்கு எல்லாம் (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் yield ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நரசிம்மன் நீங்கள் பேசுங்கள். பேசிக் கொண்டேயிருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே, Point of Order. பத்திரிகையாளர்கள் நீதி...

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் வேலு அவர்கள்... (குறுக்கீடு) இல்லை, இல்லை, அதற்கு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நரசிம்மன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே...

**திரு. பி.எம். நரசிம்மன்:** இந்த நிதிநிலை அறிக்கையைக் குறித்து (குறுக்கீடு) பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் வேலு அவர்கள் பேசும்போது (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நான் பேச யாரையாவது அழைத்து அனுமதித்தால்தான் பேச வேண்டும். அமர்ந்துகொண்டே பேசக்கூடாது. நான் இப்போது பள்ளிப்பட்டு நரசிம்மன் அவர்களைப் பேச அனுமதித்துள்ளேன். அவர் பேசி முடிப்பார்.

**திரு. இ. புகழேந்தி:**தலைவர் அவர்களே, Point of order. விவசாயிகள்...

**திரு. பி.எம். நரசிம்மன்:** நான் yield ஆகவில்லை, இதிலே என்ன Point of order?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, உட்காருங்கள். நரசிம்மன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் வேலு அவர்கள் நேற்றையதினம் பேசும்போது இந்த நிதிநிலை அறிக்கையைக் குறித்து, யானைப் பசிக்கு சோளப் பொரி என்றார். யானைப் பசிக்குக் கொண்டு போனதே நீங்கள்தானே? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இருக்கும்போது எங்கள்மீது ஏன் இந்தப் பழியைச் சுமத்துகிறீர்கள்? கஜானாவைக் காலி செய்தது யார்? நீங்கள் தானே? நேர்மையான அரசு என்றால் பசி வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால், நீங்கள் தவறிவிட்டீர்கள். இதனை நிதிக் குழு அறிக்கையே சொல்கிறது.

**திரு. எ.வ. வேலு:** தலைவர் அவர்களே, Point of order.

**திரு. பி.எம். நரசிம்மன்:** தலைவர் அவர்களே, நான் yield ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, உட்காருங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** இதிலே என்ன Point of order? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நரசிம்மன், நீங்கள் பேசுங்கள், பேசிக் கொண்டேயிருங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** நான் சொல்லவில்லை, நிதிக் குழு அறிக்கை சொல்கிறது. கடந்த சில ஆண்டுகளாகப் பழங்குடியினர், ஆதிதிராவிடர்களுக்குண்டான சிறப்புக் கூறு திட்டங்களைத் தமிழ்நாடு முழுவதுமாகச் செயல்படுத்தவில்லை. கடந்த ஆண்டு தமிழ்நாட்டின் திட்ட ஒதுக்கீட்டில் மாநில அரசின் நிதிப் பங்கு 35 சதவீதமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அது மைனஸ் 112 சதவீதமாக ஆகிவிட்டது. எழுத்தறிவில் தமிழ்நாடு 13-வது இடத்திற்குச் சென்றுவிட்டது. நட்டத்திலே இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களைச் சீரமைக்க முந்தைய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இக்கருத்துகளை மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி, அம்மா அவர்கள்கூட, அறிக்கையாகக்கூட வெளியிட்டிருந்தார்கள். எனவே, இதற்கெல்லாம் யார் காரணம் என்பதை நாம் முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேச வேண்டிய பட்டியல் நிறைய இருக்கிறது. நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.



**திரு. பி.எம். நரசிம்மன்:** 2 நிமிடத்திற்குள் பேசி முடித்துவிடுகிறேன். நடைபெற்ற பொதுத் தேர்தலில் எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பான வெற்றியைப் பெற்றார்கள். ஆனால், சென்ற கூட்டத் தொடரில் பேசும்போது, பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் பொன்முடி அவர்கள் இது சாதாரண நிகழ்வுதானே என்று சொன்னார்கள். எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, அம்மா அவர்கள், வெற்றி பெறச் செய்தவர்கள் பல ஆயிரம் வாக்கு வித்தியாசத்திலே இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக அமர்ந்திருக்கிறார்கள். ஆனால், பிரதான எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தப்பித்தோம், பிழைத்தோம் என்று பரிதாபத்தோடு இங்கு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு தேர்தல் நேரத்தில் கொஞ்சம் கால அவகாசம் இருந்திருக்குமேயானால், தேர்தல் நேரத்தில் அடித்த புரட்சித் தலைவி அவர்களின் புயல் காற்றில் பஞ்சாகப் பறந்து இருப்பார்கள் என்பதையும் இந்த நாடு அறியும். எனவேதான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய வெற்றி ஒரு சிறப்புடையது என்பதை நான் இந்தநேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திற்குள் பேசி முடியுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** அதேபோல இந்த அரசு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, விவசாயிகளுக்கு 110.05 கோடி ரூபாய் வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறது. 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை மேம்பாடு செய்ய வேண்டும் என்பதற்காக சிறப்பான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. 11-வது வகுப்பு, 12-வது வகுப்பு படிக்கின்ற ஏழை எளிய ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவசமாகவே சைக்கிள் வழங்குகிற திட்டம். இப்படிச் சிறப்பான திட்டங்களையெல்லாம் புதியதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற இந்த அரசு 100 நாட்களிலே கொண்டு வந்திருக்கிறது. புகையிலை, பான் மசாலா, குட்காவிற்குத் தடை, சட்டமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டு நிதி ரூபாய் 82 இலட்சமாக உயர்வு, எம்.ஜி.ஆர். திரைப்பட நகரின் பெயர் மாற்றப்பட்டு எம்.ஜி.ஆர். அறிவு நகராம் ஆகிறது. இதுபோன்ற சிறப்பான திட்டங்களையெல்லாம் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. கிராமப்புற மக்களுக்கு அரிய பல திட்டங்களை நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கிறது.

எங்களுடைய பள்ளிப்பட்டு தொகுதியைப் பொறுத்தமட்டிலும், பல்வேறு நல்ல பணிகளை இந்த அரசு செய்யும் என்கின்ற உறுதியோடு பொது மக்கள் இருக்கிறார்கள். ஆர்.கே. பேட்டை பிர்க்காவை உயர்த்தி, பள்ளிப்பட்டு வட்டத்திலேயிருந்து பிரித்து ஒரு வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று திருவள்ளூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு 5 வருடங்கள் ஆகின்றன. அந்த மாவட்டத்திற்கு மாவட்ட நீதிமன்றம் வேண்டுமென்றும், திருத்தணிக்கு ஒரு சார்பு நீதிமன்றம் வேண்டும் என்றும், பள்ளிப்பட்டு தொகுதியிலே ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டும் என்றும் இந்த நேரத்திலே தொகுதியின் சார்பிலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஏழை எளியோர் துயரைப் போக்கும் செயலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சேவை ஆகும். உண்மையின்மையும், புரட்டும் துணையாகக் கொண்டு பிழைத்தவர்களை எல்லாம் மூலைக்கு மூலை தூக்கி எறிந்தோம், தலைகுனிவாக ஆனாங்க. இதுதான் இன்றைய நிலை. புதிய அரசுக்குத் தெளிவு இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். சிறப்பான ஆட்சிக்கு இதுவே அஸ்திவாரம். இந்த ஆட்சி உறுதியாக இருக்கிறது. உண்மையாகச் சேவை புரிகிறது. நல்லாட்சி புரிய நல்லதோர் நிதிநிலை அறிக்கையைக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே மனதார பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"As per Criminal Procedure Code, some of the offences cannot be withdrawn and some of the offences cannot be compromised." எனவே, சர்க்காரியா கமிஷனிலே சொல்லப்பட்ட விஞ்ஞான ரீதியிலே ஊழல் புரிந்த குற்றவாளிகள்மீது நடவடிக்கையை நம்முடைய அரசு எடுக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்த நேரத்திலே இறுதியாகக் கேட்டு, சிறப்பான நிதிநிலை அறிக்கையை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த நல்ல நிதிநிலை அறிக்கையை வரவேற்று, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீதான பொது விவாதத்திலே கலந்துகொள்கிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த ஆட்சி இன்று 102-வது நாளைக் கண்டு கொண்டிருக்கிறது. 102-வது நாளைக் கண்டு கொண்டிருக்கிற இந்த வேளையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக எங்களுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் வயதை, பிறந்த நாளைக் கணக்கிட்டு 82 இலட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி வளர்ச்சி நிதி என்று கொடுத்திருக்கிற முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதுவே போதும் என்பது எங்களுடைய எண்ணம் இல்லை என்பதையும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த 102-வது நாளை நீங்கள் எடுத்துக்கொண்டு 102 இலட்சம் ரூபாயை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் நீங்கள் தொகுதி வளர்ச்சி நிதியாக வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், நம்முடைய நிதியமைச்சர் மாநிலம் முழுமைக்கும் ஒரு பட்ஜெட்டைக் கொடுத்து இன்று மக்களைக் காப்பாற்றுவது போல, தொகுதி மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற காரணத்தாலே அந்தந்தத் தொகுதியினுடைய பிரச்சினைகளை ஆங்காங்கே தீர்த்து விடுவதற்கு அந்த நிதி நிச்சயமாகப் பயன்படும் என்கிற காரணத்தினாலே, பெருந்தன்மையோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் தொகையை 102 இலட்சம் ரூபாய் என உயர்த்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெண்கள் பாதுகாப்புத் திட்டம் என்கிற ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டு வந்து புத்துணர்வு கொடுத்து, அதிலே பல பரிமாணங்களை இங்கே விரிவடையச் செய்து, பெண்களுக்கு என்று ஒரு தனிப் பாதுகாப்பை உருவாக்கி இருப்பதற்காக நான் நிச்சயமாக அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், பொதுவாக நம்முடைய இந்தியத் திருநாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில், பெண் குழந்தைகளுடைய பிறப்பு

விகிதம் குறைந்துகொண்டே வந்துகொண்டிருக்கிறது. Scan facility எல்லாம் வந்த பிறகு இன்று பெண் குழந்தை கருவிலே உருவானவுடன் அதைக் கண்டுபிடித்து, உடனடியாக கருச்சிதைவெல்லாம் செய்வது என்பது நடந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே, எதிர்காலத்திலே பெண் ஜனத்தொகை மிகவும் குறைந்து, ஆண் ஜனத்தொகை அதிகமாகி, பஞ்சபாண்டவர்–திரௌபதி formula எதிர்காலத்திலே வந்துவிடுமோ என்கிற அச்சம்கூட இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, நிச்சயமாகப் பெண்களுக்குரிய பாதுகாப்பைத் தந்தால்தான் பெண்களும் இங்கே சம உரிமையோடு வாழ முடியும். அப்படி வாழ்வது மட்டுமல்ல, குற்றங்கள் இல்லாத ஒரு சமுதாயம் அமைவதற்கு அது ஓர் எடுத்துக்காட்டாக இருக்கும். ஆகவே, பெண்களுக்கென்று இதுபோன்ற சிறப்புத் திட்டத்தினை நிச்சயமாக நாம் உருவாக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, இன்னும்கூட இதற்கு முக்கியத்துவத்தை அளிக்கலாம். நீங்கள் எப்படி தொட்டில் குழந்தைகள் திட்டம் மற்றும் ஒரு பெண் குழந்தை பிறந்தால் 80,000 ரூபாய், இரண்டு பெண் குழந்தைகள் என்றால் 40,000 ரூபாய் என்று வழங்கக்கூடிய திட்டம், இவற்றிலெல்லாம் இன்னும்கூட கொஞ்சம் அதிகமாகக் கொடுத்து, பெண் குழந்தைகளுடைய பிறப்பு விகிதத்தை எப்படியாவது ஆண் குழந்தைகளுடைய பிறப்பு விகிதத்தோடு சமமாகக் கொண்டு செல்வதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு நிச்சயமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில்தான் நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் Pre–Natal Diagnosis Act–ஐ, தூங்கிக்கொண்டிருந்த அந்தச் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தி, குறைந்துகொண்டு வருகிற பெண்கள் விகிதாச்சாரத்தை அதிகப்படுத்தி, ஆண்–பெண் விகிதாச்சாரத்தை சமச்சீருக்குக் கொண்டு வர வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்காக அந்தக் கருவிகளெல்லாம், ஸ்கேன்கள் எல்லாம், இப்போது உடனடியாக, ஆகஸ்ட் மாதத்திற்குள் பதிவு செய்யப்பட வேண்டுமென்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க, புதுப்பிக்கப்படாமல், பதிவு செய்யப்படாமல் இருந்த அந்த ஸ்கேன்கள் எல்லாம் இப்போது பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அந்தச் சட்டத்தினை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்க சட்டத்திலே இடமிருக்கிறது. இந்தச் சட்டத்தினைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12–30*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. கடந்த கால ஆட்சியிலே தேர்தல் வாக்குறுதி கொடுத்து, கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்லி, நாங்கள் பலமுறை இந்த மன்றத்திலே வற்புறுத்தியபோது, 5 ஆண்டுகள் எங்களை ஆளவிடுங்கள், கொடுக்கிறோம் என்று சொல்லி, 10 விழுக்காடு பிழிதிறன் இருந்தால்தான் 1000 ரூபாய் என்று கொடுத்தார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னாலே இந்த மன்றத்திலே பேசுகின்றபோது, இந்த அரசு மக்களை ஏமாற்றிவிட்டது என்று சொன்னார்கள். நிச்சயமாக ஏமாற்றியது கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில்: அவர்கள் சொன்னதைச் செய்யாமல் விட்டுவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. பாலகிருஷ்ணன் தலைமையிலே நாங்கள் எல்லாம் விவசாயக் கூட்டுறவுக் கடன்களை உடனடியாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கேட்டு சாலை மறியல் செய்தபோதெல்லாம் அப்போதிருந்த முதலமைச்சர் அவர்கள் நாங்கள் இருந்த இடத்திற்கே வராமல், எங்களையெல்லாம் சந்திக்காமல், பின்வழியிலே போய்விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் 5 ஆண்டுகள் போராடியும்கூட, அந்த வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யாதவர்கள், இன்று, இன்றைய முதலமைச்சரைப் பார்த்து, நீங்கள் தள்ளுபடி செய்யுங்கள் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களால் முடியாததை, நிச்சயமாக இவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், நீங்கள் ஏற்கெனவே 310 கோடி ரூபாயைக் கொடுத்து கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். அதேபோல இன்னும் கொஞ்சம் மூச்சை அதிகமாகப் பிடித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களுடைய எதிர்பார்ப்புக்கு நிச்சயமாக ஈடுகொடுக்கக்கூடிய முதலமைச்சர் என்பதால் 8.5 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கும் 1000 ரூபாய் டன்னுக்குக் கொடுத்து, சொல்லாமலேயே ஆயிரம் ரூபாய் கொடுத்தீர்கள் என்ற பெருமையை நிச்சயமாக இந்த மண்ணுக்குத் தரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, விவசாயிகளைப் பொறுத்தவரையில், பால் கொள்முதல் விலை இப்போது 8 ரூபாய், 8.50 ரூபாய் என்று இருந்துகொண்டிருக்கிறது. அதை உயர்த்த வேண்டுமென்று பால் உற்பத்தியாளர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நெல்லுக்கு உரிய விலை இல்லை. தேங்காய்க்கு உரிய விலை இல்லை. இந்த நேரத்தில் கொப்பரைக்கு 4 சதவிகிதமாக சமச்சீர் வணிக வரியைப் போட்டிருக்கிறீர்கள். தேங்காய், மஞ்சள், நெல் ஆகியவற்றுக்கு உரிய விலை கிடைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக ஒரு நடவடிக்கை எடுத்து, விவசாயிகள் வயிற்றில் பாலை வார்க்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், விவசாயத்திற்கென்று ஒரு பட்ஜெட் போட்டால் – நானும் ஒரு விவசாயி, நிதியமைச்சர் அவர்களும் ஒரு விவசாயி – உழுவதிலிருந்து ஆரம்பித்து உரம் போடுகிற கணக்கையெல்லாம் நாம் போட்டால் கரும்புக்கு ஆயிரம் ரூபாய் டன் ஒன்றுக்கு என்று கொடுத்தால்கூட, அதுவே Deficit Budget–ஆகத்தான் ஒவ்வொரு விவசாயிக்கும் வந்துகொண்டிருக்கும். ஆனால் நீங்கள் தனிப்பட்ட விவசாயிகளுடைய பட்ஜெட்டை முழுமையாகப் புரிந்துகொண்டிருக்கிற காரணத்தால், நிச்சயமாக ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று நான் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, Real Estate business பற்றி நீங்கள் சொல்லுகிறபோது, அது படுத்துவிட்டதால் நிச்சயமாக அதில் இருக்கக்கூடிய குறைகளையெல்லாம் அகற்றி, எப்படியும் பல இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கக்கூடிய அல்லது மக்களுக்கெல்லாம் வீட்டுமனைகளைக் கொடுக்கக்கூடிய ஒரு திட்டம் என்பதால், Real Estate–ல் இருக்கிற கஷ்டங்களை நிவர்த்தி செய்வதாக நீங்கள் ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறீர்கள். கடந்த ஆட்சிக்காலத்திலே ஒரு G.O. போட்டு இதில் பல நெருக்கடிகளைக் கொடுத்தார்கள். நாங்கள்கூட 40 நிமிடம் இந்த அவையிலே விவாதித்து அந்த G.O.–வை வாபஸ் பெறுங்கள் என்று சொன்னோம். பிறகு உயர் நீதிமன்றமும் அந்த ஆணையை அப்படியே confirm செய்துவிட்டது. இருந்தாலும்கூட, ஆட்சியாளர்கள், இருக்கக்கூடிய பிரச்சினைகளை அலசி, ஆய்ந்து பார்த்து Real Estate business–ல் இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும். ஏனென்று சொன்னால், Unapproved Layout மனைகளை விற்க முடியாது என்றெல்லாம் இருக்கக்கூடிய நிலைமைகளையெல்லாம் தளர்த்திக் கொடுத்தால்தான் அந்த business கொஞ்சம் pick up ஆகும்.



இல்லையென்றால், பழையபடியே நின்றுவிடும் என்ற காரணத்தால் நீங்கள் இதற்கும் வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சென்னையில் கட்டப்பட்டிருக்கின்ற Flats–களையெல்லாம் Regularisation செய்வதற்கு ஏற்கெனவே இன்றைய முதலமைச்சர் அவர்கள் அப்போது ஓர் அறிக்கை விட்டார்கள். ஆந்திராவில் ஒரு method வைத்து, குறைந்த கட்டணத்தை வைத்து Regularisation செய்தார்கள். கடந்தகால ஆட்சியில் அதிகமான ஒரு தொகையைப் போட்டு Regularisation of Building செய்த காரணத்தால் அதைச் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது. அதில் முக்கால்வாசிப் பேர் இன்னனும் கட்டவே இல்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கும் ஒரு வழிவகை கண்டு, ஆந்திராவிலே இருக்கக்கூடிய Formula–வை இங்கே Adopt செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–35*

***மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னை மாநகரத்திலே இருக்கிற கட்டடங்களை regularisation செய்வதுபற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே விவாதித்திருக்கிறோம். அமைச்சரவைக் கூட்டத்திலேயும் இதுபற்றி விவாதித்திருக்கிறோம். இதுசம்பந்தமாக இன்னும் ஓரிரு நாட்களிலே இந்த அவையிலே அந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கவிருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அடுத்து, மினி பஸ் திட்டம். கடந்த ஆட்சியிலே மினி பஸ் திட்டத்தைப் புகுத்தினார்கள். எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் பேசுகிறபோது, எங்களுடைய தானைத் தலைவர் கொண்டு வந்த திட்டத்தைத்தான் இந்த ஆட்சி செய்துகொண்டிருக்கிறது என்று சொன்னார். திட்டம் என்று சொல்கிறபோது, பொதுவாக எல்லா ஆட்சிக்கும் ஒரே திட்டம்தான் வரமுடியும். புதிது புதிதாகக் கண்டுபிடித்ததாகச் சொன்னார். வணிக வரி போடவேண்டுமென்று சொன்னால், முதன்முதலாக கர்மவீரர் காமராஜர் அவர்கள் போட்ட வரியைத்தான் பின்னாலே வந்த பேறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வரமுடியும். அதற்குப் பிறகு வந்தவர்களும் அதனைத் தொடர்ந்து செய்ய முடியும். திட்டங்களைப் புதியதாகப்

போட முடியாது. ஏதோ சில திட்டங்களை வேண்டுமானால், காலத்திற்கேற்ப நீங்கள் மாற்றியமைக்கலாமே தவிர, திட்டங்கள் என்பது, பொதுவாக வரி வசூலிப்பது என்று ஆரம்பித்து, ஒவ்வொரு திட்டமும் வந்துகொண்டிருக்கும். மினி பஸ் திட்டத்தைக்கூட நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், அது சில கிராமப்புறப் பகுதிகளுக்குப் பொதுவாகப் பயனுள்ளதாக இருக்கிறது. ஆனால், அப்போதிருந்த ஆட்சி என்ன செய்தது என்று சொன்னால், – இன்னும் கொஞ்சம் 1/2 கி.மீ. தூரம் போனால், Town–க்குப் போகலாம் – பாதி வழிவரையிலே நீங்கள் route–ஐக் கொடுத்து, அதாவது Town–க்கும் போக முடியாமல், கிராமத்திலேயும் இருக்க முடியாமல், நடுக்கிணற்றிலே கொண்டுபோய் கிராம மக்களை வைத்திருக்கிற திட்டமாகத்தான், இப்போது மினி பஸ் திட்டம் இருந்துகொண்டிருக்கிறது. பக்கத்திலே இருக்கக்கூடிய Town–க்கு ஒரு மினி பஸ் போகவில்லையென்று சொன்னால், What is the purpose in plying mini buses? No use at all. Therefore, I request the Hon. Minister to extend the routes of the mini buses. இல்லையென்று சொன்னால் அதனால் use இல்லை. அந்த மினி பஸ்ஸைப் பொறுத்தளவிலே, நகரத்தை எட்டிப் பிடிக்க முடியாமல், பஸ் ஸ்டாண்டிற்கே போக முடியாமல், நடுவிலே நிறுத்தி, மக்களையும் அந்த இடத்திலே பாதிப்புக்குள்ளாக்கி, மினி பஸ் ஆப்பரேட்டர்களையும் பாதிப்புக்குள்ளாக்கியிருப்பது, நட்டாற்றில் விடப்பட்டு இருக்கக்கூடிய அந்த மக்களுக்கும், மினி பஸ் ஆப்பரேட்டர்களுக்கும் சரியாக இருக்காது என்கிற காரணத்தினாலே, நிச்சயமாக அதனுடைய நன்மைகளைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த route–ஐ கொஞ்சம் extend பண்ணி நான்கு கிலோமீட்டர் தூரம் நீட்டித்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ் திட்டம் என்பது கடந்தகால ஆட்சியிலே நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்திலே பல கோளாறுகள் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் அதனை நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டுமென்று சொல்லி, அந்தத் திட்டம் தற்போது அரசின் ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. காரணம், அந்த மினி பஸ் driver தப்பித் தவறி கொஞ்சம் bus stand பக்கம் போனால், உடனே R.T.O.வழக்குப் போட்டு விடுகிறார். அவர்கள் பாவம், ஒவ்வொரு மினி பஸ் ஆப்பரேட்டரும்



தினந்தோறும் கையைவிட்டு 150 ரூபாய், 200 ரூபாய் என்று செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். நட்டத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், route–ஐ நீட்டித்து, Town–ஐ எட்டிப் பிடிப்பதற்கு அனுமதி கொடுங்கள். முடிந்தால் Service Road – இன்னும் 4 கிலோ மீட்டரோ, 2 கிலோ மீட்டரோ நீட்டித்துக் கொடுத்தால் அந்தத் திட்டம் ஓரளவிற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிமெண்ட் விலை உயர்வை நிச்சயமாகக் குறைப்போம் என்று நீங்கள் அறிவித்தீர்கள். நேற்றைக்கு முன்தினம்தான் கொஞ்சம் குறைந்திருக்கிறது. சிலர் ரூ.120 விலைக்குக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அதற்காக ஒரு கட்டுப்பாட்டு அமைப்பு அமைக்கப்பட இருப்பதாக நீங்கள் ஆளுநர் உரையிலே ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு ஓர் அமைப்பை அமைப்பது என்றால், அதை மத்திய அரசுதான் அமைக்க முடியும். அப்படி ஓர் அமைப்பை அமைக்கக் கோரி மத்திய அரசிடம் கோரிக்கை வைப்போம் என்றுதான் ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அதைத்தான் சொல்ல வந்தேன். தவறுதலாகச் சொல்லிவிட்டேன். இருந்தாலும்கூட, மத்திய அரசோடு நீங்கள் பேசியும், அதேபோல, இருக்கக்கூடிய சிமெண்ட் ஆலை உரிமையாளர்களைத் தயவுசெய்து அழைத்துப் பேசியும் – 120 ரூபாய் என்று நிலையாக இருந்தது, அதை 180 ரூபாய் வரை கொண்டு போனார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் ஆலை அதிபர்களை ஏற்கெனவே இரண்டு முறை அழைத்துப் பேசியிருக்கிறோம். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். விலையைக் குறைக்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாமே தவிர, இதற்கு மேல் இதில் மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. எனவே, இதுகுறித்து மத்திய அரசுதான் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மீண்டும் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நீங்கள் எப்படியாவது, இந்த அவையிலே ஒரு தீர்மானத்தைப் போட்டாவது, மத்திய அரசை இதற்காக வற்புறுத்தலாம். ஏனென்றால், இதில் எல்லாவற்றிலும் மத்திய அரசு, மத்திய அரசு என்று இருந்துவிட்டால், மாநில அரசு எந்தவகையிலும் முன்னேற முடியாமல், நாம் ஒரு சாண் ஏறினால், ஒரு முழம் சறுக்கக்கூடிய நிலை வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மத்திய அரசு சிலவற்றில் கொஞ்சம் அதிகமாகத் தலையிடாமல் ஓரளவிற்கு மக்களுக்குப் பயன்படக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்வதற்கு மத்திய அரசை நீங்கள் வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம்-ஒழுங்கைப் பொறுத்தளவில், இப்போது பெண்களை மிகவும் பாதிக்கக்கூடிய கள்ளச் சாராயத்தை ஒழிப்பதாக நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இன்னும்கூட கொஞ்சம் கடுமையாக நடவடிக்கை எடுத்து கள்ளச் சாராயத்தை நீங்கள் முழுக்க முழுக்க ஒழிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

கந்து வட்டியைப் பற்றியும், அதேபோல கட்டப் பஞ்சாயத்தைப் பற்றியும்கூட இரண்டு நாட்களுக்கு முன்னாலேகூட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளித்தார்கள். இன்னும்கூட அந்த கட்டப் பஞ்சாயத்துக்காரர்கள், கள்ளச் சாராயக்காரர்கள், கந்து வட்டிக்காரர்களுடைய கை ஓங்கியிருப்பதை நீங்கள் தயவுசெய்து உள் துறை மூலமாகவாவது கட்டுப்படுத்த வேண்டும். Law and Order Police-க்கு பொதுவாக அவர்களோடு தொடர்பு இருக்கிற காரணத்தினாலே அதைச் சரியாக, இன்னும் அவர்கள் கன்ட்ரோலுக்குக் கொண்டு வரவில்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதை எப்படியாவது, உளவுத் துறையின் மூலமாக, அவர்கள் யார், யாரென்று ஒரு பட்டியலைக் கொண்டு வந்தாவது, அவர்களை நீங்கள் முழுக்க முழுக்க இரும்புக் கரங்கொண்டு, ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது பற்றாக்குறை பட்ஜெட் என்று நிறைய நாம் போட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினால், நிதி நெருக்கடியில் இருக்கிற நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சருக்கு ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். வரவுக்கு அதிகமாகச் சொத்து சேர்த்தவர்களுடைய பட்டியல் இப்போது, தமிழ்நாட்டிலே மிக வேகமாக, ஜெட் விமான வேகத்தில்



போய்க்கொண்டிருக்கிறது. யாரெல்லாம் Finance Company என்று வைத்துக்கொண்டு இருக்கிறானோ, யாரெல்லாம் கள்ளச் சாராயம் விற்றுக் கொண்டிருக்கிறானோ, யாரெல்லாம் சந்தனத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறானோ, அல்லது இப்படிப்பட்டவர்களுடைய பட்டியலைப் பார்த்தால், 10, 15 ஆண்டுகளிலே பெரிய, பெரிய கோடீஸ்வரர்களாகி இருக்கிறார்கள். அதேபோல, ஆட்சியிலே இருந்தவர்கள்கூட, அமைச்சர்களாக இருந்தாலும் சரி அல்லது சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அவர்களும்கூட சொத்துக் கணக்கை மீறி, அதிகமாகச் சொத்து சேர்த்திருப்பதை நீங்கள் கண்டுபிடித்து, அவற்றையெல்லாம் பறிமுதல் செய்தாலே நிச்சயமாக ஐந்தாண்டுகளுக்கு நல்ல பட்ஜெட்டை தமிழ்நாட்டிற்குக் கொடுக்க முடியும் என்பதை நான் இந்த இடத்திலே சொல்லி...(மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான ஆய்வுகளை நீங்கள் தயவுசெய்து எடுங்கள். இல்லையென்று சொன்னால், பொதுவாக ஒரு பத்து ஆண்டுகளில் ஒரு அசுர வளர்ச்சி; அதிலே அவர்கள் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் வளர்ந்து இருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. பொதுவாக, கள்ளச் சாராயக்காரர்களும், சந்தனக் கட்டைக்காரர்களும், இவர்களெல்லாம் ஒரு பெரிய அளவிலே, இன்னுங்கூடப் பார்த்தீர்களென்றால், பெரிய, பெரிய அளவில் அவர்கள் போஸ்டரை போட்டுக்கொள்வதும் அல்லது கழுத்து நிறைய – பெண்களைவிட – மணப் பெண்ணைவிட அதிகமான நகைகளை, அப்படியே கொத்தாகத் தங்களுடைய கழுத்திலே ஆண்கள் போட்டுக்கொள்வதும் அல்லது அரை கிலோ அளவிலே மோதிரத்தைப் போட்டுக்கொள்வதும் அல்லது 'ப்ரேஸ்லெட்' இப்படியெல்லாம் போட்டுக்கொண்டிருக்கக்கூடியவர்களைப் பார்த்தால், இது உண்மையிலேயே மிகவும் வருத்தத்தை அளிக்கக்கூடிய ஒரு செய்தியாக இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால், நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுபோன்ற சமூக விரோதிகளை வேரறுப்பதற்காக முழுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வீரப்பனைப் பிடிப்பதற்காக நாம் Task Force Committee-ஐ அமைத்திருக்கிறோம். இன்னும் அதற்கான முன்னேற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நேற்று பாராளுமன்றத்திலே, செப்டம்பர் மாதத்திற்குள்ளே அவனைப் பிடிக்க இருப்பதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியதாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வீரப்பனுக்குத் துணை போய்க் கொண்டிருக்கிறவர்கள் சிலபேர், தாராள மனதுக்காரர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்; இந்த அரசு சொன்னால், நாங்களே

அவனைப் பிடித்து வந்து, சரண் அடையச் செய்கிறோம் என்று. அப்படி வீரப்பனுடைய புகலிடம் தெரிந்தவர்கள், அவர்கள் எந்தவொரு இயக்கத்தினுடைய தலைவராக இருந்தாலும் சரி, அவர்கள் மீட்புப் படை என்று வைத்துக் கொண்டும், விடுதலைப் படை என்ற வைத்துக் கொண்டும் – இப்படியெல்லாம் தமிழகத்திலே கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டுத் தீவிரவாதத்தை வளர்த்துக் கொண்டிருக்கிற அந்த சதிகார கும்பல் – அதுவும், மத்தியில் முன்பு அமைச்சராக இருந்தவர், N.D.A.-வினுடைய தலைவராக இருக்கக்கூடிய ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் அவர்களையே பார்த்துப் பேசியிருக்கிறார்கள். அது என்ன ஒப்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லை. இவ்வளவு பெரிய பொறுப்பிலே இருக்கிறவர்கள், சமூக விரோதக் கும்பலோடு துணை போய்க்கொண்டிருக்கிறவர்களை அழைத்துப் பேசி, பிறகு மற்ற மாநிலத்திலே கொண்டுபோய் சரண்டர் பண்ணுகிறோம்; இல்லையென்றால், இங்கேயே சரண்டர் பண்ணுகிறோம் என்றெல்லாம் சொல்லி விவாதத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை நீங்கள் விட்டுவைத்தால், தமிழகம் கலவர பூமியாக மீண்டும் 'வெடித்துவிடும். வெடிகுண்டு கலாச்சாரத்திற்கு ஏற்கெனவே தமிழகம் ஆளாகி, எப்படிப்பட்ட பாதிப்பெல்லாம் வந்தது என்பது நமக்குத் தெரியும். எங்களுடைய அருமைத் தலைவர், ராஜீவ் காந்தி அவர்களையே இந்த மண்ணில்தான் நாம் இழந்திருக்கிறோம். இன்னும்கூட, இரண்டு நாட்களுக்கு முன்புகூட, இதே சட்டமன்றத்தில் பார்த்தோம். சட்டமன்றம் என்று சொன்னால், இந்த மன்றத்திற்கு ஒரு வரலாறு இருக்கிறது. இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடியவர்கள் கண்ணியத்தோடு நடந்துகொள்ள வேண்டும் என்கிற ஒரு மரபு இருந்து கொண்டிருக்கிறது. என்னைக் கேட்டால் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்வது – T.V. ஒளிபரப்புகளையெல்லாம் தயவுசெய்து நிறுத்திவிடலாம் என்று நமக்கெல்லாம் தோன்றுகிறது. காரணம், என்னுடைய மனைவிகூட, சட்டமன்றத்திற்குப் போய்வருகிறேன் என்று சொன்னால், "கொஞ்சம் பத்திரமாகப் போய் வாருங்கள்" என்று சொல்லும் நிலை;

"போகாதே போகாதே என் கணவா;
பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்"

என்று சொல்லி, போகிறவன் உயிரோடு திரும்பி வருவானா என்ற நிலை; ஏதோ, நாங்களெல்லாம் போர்க் களத்திற்குப் போகக்கூடிய ஒரு நிலை வருமோ என்பது போன்ற, அப்படிப்பட்ட ஒரு அச்சம். ஏனென்றால்,



இதே மன்றத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிற உறுப்பினர் ஒருவரே, நாங்கள் வெடிகுண்டு வைத்து சட்டமன்றத்தைத் தகர்ப்போம் என்று சொன்னதாகச் சில செய்திகள் வருகின்றன. இது என்ன அடிப்படை என்று எனக்குத் தெரியவில்லை. இதுவரை வெடித்த வெடிகுண்டுகளுக்கு எல்லாம் அவர்கள்தான் பொறுப்பா? (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றம் என்பது, எவ்வளவு கண்ணியமிக்க சபை! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணா வழியிலே வந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிற அந்த நண்பர்களையெல்லாம் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்; அது ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி; நாங்களாக இருந்தாலும் சரி; ஏனென்றால், எங்கள் பாடு இன்னும் மோசம்; ஏனென்றால், நான்கூட, நம்முடைய முதன்மைச் செயலாளரையும், பேரவைத் தலைவரையும் பார்த்து எங்களைக் கொஞ்சம் ஓரமாக உட்கார வைத்துவிடுங்கள்; எழுந்து போகிறமாதிரி இடம் விடுங்கள் என்றுகூடச் சொன்னேன். எங்களைக் கொண்டுபோய் இப்படி வைத்திருக்கிறார்கள்; இந்தப் பக்கம் தி.மு.க.; அந்தப் பக்கம் பா.ம.க. ஏனென்றால் அவர்களோடுதான் போகப் போகிறார்கள் என்பது முதலிலேயே தெரியும்...

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தக் கேமராக்கள் எல்லாம் எதற்கு, எடுத்துவிடலாமே என்று சொன்னார்கள். இந்தக் கேமராக்கள் இருப்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பாதுகாப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிலர், இந்த அவைக்குள் வன்முறையைத் தூண்ட வேண்டும், வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டிருந்தார்கள். கீழ்தளத்திலும் சரி, மேல்தளத்திலும் சரி, கிட்டத்தட்ட 12 ஃபிலிம் டிவிஷன் கேமராக்கள் ஓயாமல் ஓடிக்கொண்டிருப்பதால்தான், அந்தத் திட்டங்களையெல்லாம் கைவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை தயவுசெய்து நாம் பின்பற்ற வேண்டும். ஏனென்றால், போலீஸ்காரர்களுக்கு நல்லொழுக்கத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று நாம் இரண்டு நாளைக்கு முன்புதான் இந்த இடத்திலே பேசியிருக்கிறோம். இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய

உறுப்பினர்களுக்கு அவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கிறது. நாமே முன்னுதாரணமாக இல்லையென்று சொன்னால், பிறகு நாம் வேலை வாங்கக்கூடிய அந்த அதிகாரிகளை எப்படி நாம் வேலை வாங்கப் போகிறோம்? நமக்கு ஒரு நல்லொழுக்கம் வேண்டாமா? நமக்கென்று ஒரு நெறிமுறை வேண்டாமா? இப்படித்தான் இந்த அவையிலே நடந்துகொள்ள வேண்டுமென்ற பாரம்பரியத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டாமா? அவற்றையெல்லாம் காற்றிலே பறக்க விட்டுவிட்டு போர்க் களத்தைப்போல ஒரு தோற்றத்தை இந்தச் சட்டமன்றத்திலே உருவாக்குவோம் என்று சொன்னால், நிச்சயமாக நாடு நம்மை மன்னிக்காது. ஆகவே, நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்; இன்றோடு எல்லாவற்றையும் நிறுத்தி, உங்களுக்கு எவ்வளவுதான் கோபதாபங்கள் இருந்தாலும், எவ்வளவுதான் காழ்ப்புணர்ச்சி இருந்தாலும், எல்லாவற்றிற்கும் ஒரு முற்றப்புள்ளி வைத்து, நாம் இந்த மன்றத்திலே பொறுப்போடு பணியாற்றுகிற நிலையை மேற்கொள்ள வேண்டும். அதற்காக ஒரு நல்லொழுக்க வகுப்பை, காவலர்களுக்கு எடுப்பதைப்போல நடத்தலாம். முன்பெல்லாம் எம்.எல்.ஏ.-க்களுக்குச் செய்ததைப்போல - இப்போது புதியதாக எம்.எல்.ஏ.-க்கள் மற்றும் அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள் - அவர்களுக்குக்கூட நீங்கள் ஒரு வகுப்பை, 10-வது மாடிக் கட்டடத்திலே நடத்த தயவுசெய்து ஏற்பாடு செய்து, அவர்களுக்கும் நல்லொழுக்கத்தை நிச்சயமாக வளர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்துக்கொள்கிறேன். நிறைய சப்ஜெக்ட் இருக்கிறது. பேசி முடித்துவிடுகிறேன். மன்னித்துக்கொள்ள வேண்டும், பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சப்ஜெக்டுக்கு வரவில்லையா, ஞானசேகரன்?

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ வந்துவிடுகிறேன். ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். ஆபிசர்கள் குறித்து, ஏற்கெனவே நாம் அவர்களுடைய இழந்துபோன பெருமைகளை மீட்பதற்காக - ஏனென்றால், அவர்களுக்கென்று சில குமுறல்கள் இருக்கின்றன. இதுபற்றியெல்லாம்கூட ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டது. அதைச் சரி செய்வதாகச் சொன்னோம். நிச்சயமாக அதைச் செய்தாக வேண்டும். ஏனென்றால், அவர்கள் தொடர்ந்து பணியிலே இருக்கக்கூடியவர்கள். அதேநேரத்தில் நான் கேட்டுக் கொள்வதெல்லாம், ஐ.ஏ.எஸ்/ஐ.பி.எஸ். ஆபிசர்கள் மற்றும் எந்த அதிகாரிகளாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் போனாலே,



அவர்கள் எழுந்து நின்று வரவேற்க வேண்டும்; அரசு விழாக்களிலே அவர்களை அழைக்க வேண்டும். அதற்கான G.O. எல்லாம் இருக்கிறது. ஆனால், சில நேரங்களிலே, ஆபிசர்களைப் பார்க்கப் போனால், அங்கே உள்ளே இரண்டு பேர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது, யாராவது, அவர்களுடைய subordinate officers-களோடு பேசிக் கொண்டிருப்பார்கள். கேட்டால் மீட்டிங் என்று சொல்வார்கள். சட்டமன்ற உறுப்பினர்களை அதிக நேரம் காக்க வைக்கிறார்கள். இந்த நிலையை எல்லாம் தயவுசெய்து தவிர்க்க வேண்டும்.

அடுத்து நிதியின் மூலம் சிலவற்றைச் சாதிக்க முடியும்; நிதி இல்லாமலே சிலவற்றைச் சாதிக்க முடியும். குறிப்பாக, என்னுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால்கூட, இப்பொழுது தேவையில்லாமல் ஒரு one-way traffic கொண்டு வந்துவிட்டார்கள். நான்கூட எவ்வளவோ கடுமையாக எதிர்த்துப் பார்த்தேன். நிதி ஒன்றும் அதிகமாகச் செலவு செய்யப் போவதில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் புதிதாக வந்திருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்கள் சொன்னாலும்கூட, கேட்காமல் இப்படித்தான் one-way traffic என்று போட்டுவிட்டார்கள். ஏனென்றால், மக்களுடைய ஆட்சி இது. என்ன கருத்து என்று தெரியவில்லை. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு அந்த one-way traffic தேவையா, தேவை இல்லையா என்று நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு நிலையை எடுக்கவில்லை. எங்களுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய அமைச்சர்கள் கொஞ்சம் தயவுசெய்து அவர்களாகவே sort out செய்துகொள்வதற்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாதுகாப்பைப் பொறுத்தளவிலேகூட, வீரப்பன் கடத்தல் பட்டியலிலே நான்கூட இருக்கிறேன் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய அமைச்சர் பேசுகின்றார்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுடைய வேண்டுகோளை ஏற்றும், ஒருசில பொதுநலச் சங்கங்களுடைய வேண்டுகோளை ஏற்றும்தான், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு வழிப்பாதையை ஏற்படுத்தி இருக்கிறார்களேயொழிய, பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுகின்ற

அளவிலே ஒருவழிப் பாதையை ஏற்படுத்தவில்லை என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களுக்குக் கனிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து மக்களுடைய கருத்தறிந்து செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Deemed University students நிலைமையைப் பார்த்தோம் என்றால், ஏற்கெனவே, நிறைய வழக்குகள் வந்து, சுப்ரீம் கோர்ட்டிலே ஸ்டே கொடுத்துவிட்டார்கள். ஸ்டே கொடுத்த பிறகு, அந்த rank–ல் வரக்கூடிய அந்தக் கல்லூரிகளைத்தான் மாணவர்கள் கேட்கிறார்கள். நீங்கள் 10 ஆயிரம், 15 ஆயிரம் vacancy என்று சொல்லி மிக மோசமான கல்லூரிகளிலே அவர்களைத் தள்ளிவிடாமல், அவர்கள் எடுத்த cut–off மார்க்கில், அந்த rank–ல், எந்த ஒரு கல்லூரி கிடைத்ததோ அந்த நிலையை உணர்ந்து அதே கல்லூரியிலே கூடுதலான சீட்டுகளைப் பெற்றாவது அவர்களுக்கு நீங்கள் வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வேலூர் மாவட்டத்திலே குடிநீர்ப் பிரச்சினை கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. அதனை நாளைக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்திலே எடுத்துக்கொள்ள இருக்கிற காரணத்தினால், அதற்கும் வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மூடப்பட்ட தொழிற்சாலைகள். அரியூர் கூட்டுறவு நூற்பாலை 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூடப்பட்டது. கடந்த 5 ஆண்டுகால ஆட்சியிலே, திறப்பதாகச் சொல்லிச் சொல்லி திறக்காமலேயே விட்டுவிட்டார்கள். அதைத் திறப்பதற்கு ஒரு வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–50*

பொதுவாக Housing Board–ஐ வைத்துக்கொண்டு இருப்பதில் பிரயோசனம் இல்லை. நிறைய வீடுகளைக் கட்டி, கட்டி வைத்துக்கொண்டிருப்பதைவிட, அதைப் பேசாமல் மூடிவிடுவதே மேல். என்னைக் கேட்டால், நீங்கள் Housing Board–ஐ இல்லாமல்கூட பண்ணிவிட்டால் நல்லது. அதை, District Registrar யாரையாவது வைத்துக்கொண்டு நிருவாகம் செய்யலாம். ஏனென்றால், Housing



Board–ஐ வைத்துக்கொண்டு என்ன 'பிரயோசனம்? அது, அரசாங்கத்திற்கு ஏதாவது உதவிகரமாக இருக்கிறது என்றால் பரவாயில்லை. நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டு, நிறைய வீடு கட்டி வைத்துவிட்டு, அவற்றை விற்க முடியாமல் இருந்து கொண்டிருப்பதைவிட, எப்படி நீங்கள் போக்குவரத்துக் கழகங்களை ஒன்றாக இணைக்க வேண்டும்; நிறைய M.D. தேவையில்லை; G.M. தேவையில்லை; ஒரே ஒரு M.D. தமிழ்நாடு பூராவும் இருந்து பாதுகாக்க முடியும் என்ற நிலைமையை வகுத்து, அவற்றை ஒருங்கிணைக்கப் போகிறீர்களோ, அதைப்போல, Housing Board–ஐ close பண்ணிவிட்டு, ஒரு Registrar–ஐ வைத்துக் கொண்டு, வீடு தேவைப்பட்டால், அந்த ஊரில் நிலத்தைக் கையகப்படுத்தி, வீடுகளைக் கட்டிக் கொடுத்துவிடலாம். இப்படி ஏதாவது சிக்கன வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

அதேபோல, District bifurcation. அதைக்கூட, நிதி இல்லை, நிதி இல்லை என்று சொல்லிக்கொண்டு, நாம் bifurcation கேட்டுக்கொண்டே போனால், அதற்கு ஒரு தனி கலெக்டர், அப்புறம் நிறைய அதிகாரிகள், இப்படியெல்லாம் போய்க்கொண்டே இருக்கும். எனவே, District bifurcation கூட இனிமேல் உங்களுக்கு சுமையைத்தான் கொடுக்கும். ஏனென்றால், இப்போதெல்லாம் நிறைய வசதிகள் வந்துவிட்டன. பேருந்து வசதியில் இருந்து ஆரம்பித்து, நிறைய வசதிகள், டெலிபோன், செல்போன் எல்லாம் வந்துவிட்ட பின்னால்கூட, இனிமேல் bifurcation எல்லாம் தேவையா என்பதை நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்து, உங்களுடைய செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளைக் காண வேண்டும். You put an end to the bifurcation hereafter.

நதிநீர்த் திட்டத்தைப்பற்றி இப்போதெல்லாம் நிறைய பேசப்படுகிறது. பொதுவாக ஒகேனக்கல் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வருவதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டதற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒகேனக்கல் திட்டத்தை வேலூருக்கு அறிவித்துள்ளதாக, எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் இங்கு Collectors' Conference–க்கு வந்து, பிறகு எங்கள் ஊருக்கு வந்து தெரிவித்தார். ஏனென்றால், ஒகேனக்கல் திட்டம் வந்தால்தான், எங்களுடைய வேலூர், ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் போன்ற நகரங்களுக்கு எதிர்காலத்தில் தண்ணீர் கிடைக்கும். இல்லையென்றால், தண்ணீர் கிடைக்காது. இப்போது குடிக்கிற தண்ணீர் எல்லாம் குடிக்க இலாயக்கு இல்லாத தண்ணீர். – unfit for drinking – அந்தத் தண்ணீரைத்தான் நாங்கள் குடித்துக்கொண்டிருக்கிறோம்.

பொன்னை ஆற்றுத் திட்டம் ஒன்று; ஏற்கெனவே, 3 வருடமாகிவிட்டது, நி.ளி. போட்டு. அதற்கு டெண்டர் எல்லாம் விட்டாயிற்று. டெண்டர் இன்னும் போர்டில் approval ஆகாமல் இருக்கிறது. முதலில் அந்தத் திட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக clear செய்து கொடுக்க வேண்டும். பிறகு, அந்த ஒகேனக்கல் திட்டத்தின்மூலம் தொடர்ந்து எங்கள் வேலூருக்கு தண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்; முடித்துவிடுகிறேன்.

உள்ளாட்சித் தேர்தலைப்பற்றி ஏற்கெனவே ஆளுநர் உரையின்மீது பேசும்போது சொல்லப்பட்டது. ஏற்கெனவே நிறைய பேர், ஒரு கோடி மக்கள், வாக்களிக்கவில்லை. போன ஆட்சியில், கண்ட மேனிக்கு, சகட்டு மேனிக்கு எல்லா பெயர்களையும் அடித்துத் தள்ளிவிட்டார்கள். அப்படித் தள்ளியதால், நிறையப் பேரால் வாக்களிக்க முடியவில்லை. எங்களுடைய வேலூர் நகராட்சியில் மட்டும் 40 ஆயிரம் ஓட்டு, total-ஆக தொகுதியில் 70 ஆயிரம் ஓட்டு missing. எல்லாவற்றையும் அடித்துத் தள்ளிவிட்டார்கள். அப்படி அடிக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் இன்னும் சேர்க்கப்படாமல் இருக்கிறது. அதைச் சேர்த்து, சரி செய்த பிறகு தேர்தலை நடத்தலாம் என்றும் தேர்தல் ஆணையத்தை வற்புறுத்துவோம் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆளுநர் உரையில் சொல்லி இருந்தார்கள். ஆனால், திடீரென்று தேர்தல் வந்து, நல்லவேளை, நாங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து, எங்களுடைய கோரிக்கையை வைத்தோம், இப்போதைக்கு வேண்டாம் என்று. வேலூர் நகராட்சிக்கும், அதேபோல நாகை நகராட்சிக்கும் தேர்தல்; voters' list-ல் நிறையப் பெயர்கள் விட்டுப் போய் இருக்கின்றன; அதை எல்லாம் சரி பண்ணி, நீங்கள் மற்ற தேர்தலோடு நடத்துங்கள் என்று சொன்னபோது, அதைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டு அதை நிறுத்துவதற்கு ஆணை பிறப்பித்ததற்காக அன்னார் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் விட்டுப்போன ஒரு கோடி பெயர்களைச் சேர்த்து சரிசெய்ய வேண்டும். அவர்கள் எல்லாம் ஆபிசில் உட்கார்ந்துகொண்டு, பாரம் கொடுத்தால், அந்தப் பாரத்தை அடித்துத் தள்ளிவிடுகிறார்கள். உடனடியாக வீட்டுக்கு வீடு அவர்கள் சென்று, சரியாகக் கணக்குப் பார்த்து, விட்டுப்போன ஒரு கோடி வாக்காளர்களுடைய பெயர்களையும் அந்த voters' list-ல் சேர்த்த பிறகு, தேர்தலை நடத்துவதற்கும், அதைப்போல, மத்திய அரசு இரண்டு அடுக்கு திட்டத்தை, two-tier system கொண்டுவந்து, பிறகு உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கும் நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



எங்களுடைய வேலூருக்கு Medical College-ஐ 3 வருடங்களாகக் கொடுக்கிறோம் என்று சொல்லி, கொடுக்காமல் விட்டுவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். Medical College-ஐ இந்த ஆண்டிலேயே கொண்டு வந்து, மாணவர்களைச் சேர்ப்பதற்கு, நீங்கள் உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

சட்டக் கல்லூரியை, போன ஆட்சியிலே கொண்டுவருவதாகச் சொல்லி, ஆர்டர் போட்டு நின்று போய்விட்டது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வேலூர் மருத்துவக் கல்லூரிக்காக இடம் கண்டறியப்பட்டு, ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விரைவிலேயே கல்லூரியைத் தொடங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. மாண்புமிகு தலைவர் அவர்களே, அதேபோல, சட்டக் கல்லூரி... (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிட்டேன்; முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், கேட்டவுடனேயே, பருத்தி புடவையாகக் காய்த்தது மாதிரி, சொல்லிவிட்டார்கள். அடுத்து, கணேசன்.

**திரு. சி. ஞானசேகரன்:** போன ஆட்சியிலே, சட்டக் கல்லூரியை வேலூருக்குக் கொடுப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவித்து, நின்றுபோய் விட்டது. அங்கே சட்டக் கல்லூரி கொடுக்க வேண்டும்.

Bus Stand-க்காக, ஒரு G.O. போட்டு 3 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், அந்த G.O. அப்படியே நின்றுவிட்டது. நிலம் கையகப்படுத்துவதற்கு தகராறு இருந்து, நானே High Court-லே போய் வாதாடி, 10 வாரத்திற்குள் Bus Stand-க்கு உரிய நிலத்தைக் கையகப்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது – வேலூருக்கு bus stand உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்குப் பேசுவதற்கு நல்வாய்ப்பை நல்கிய உங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள்.

**திரு. இ. புகழேந்தி:** சின்ன clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், முதல்வர் அவர்களை, எவ்வளவு வேண்டுமானாலும் புகழட்டும். இதையேதான் கடந்த ஆட்சிக் காலத்திலே எங்களுடைய தலைவரைப் புகழ்ந்து, இப்போது இருக்கிற முதல்வர் அவர்களை இகழ்ந்து, அவருடைய பணியை அவர் செய்துகொண்டிருந்தார். ஏதோ பின்புறமாகப் போனதாகச் சொன்னது தவறு. கடந்த காலத்தில், இன்றைய முதல்வர், முதல்வராக இருந்தபோது, இவர் ஒருமுறை இங்கே இருந்து நேராகச் சிறைக்கு அனுப்பப்பட்ட காலங்களையும் அவர் மறந்துவிடக் கூடாது. முன்னுக்குப் பின் பேசுவது, ஞானசேகரன் போன்றவர்கள்தானே தவிர, நாங்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் சில காலம் ஆளும் கட்சியிலும், சில காலம் எதிர்க்கட்சியிலும் இருக்கிறவர்கள். நாங்களெல்லாம் தொடர்ந்து எதிர்க்கட்சியிலே இருந்துகொண்டு இருக்கிறவர்கள். நாங்கள் பொறுப்பான எதிர்க்கட்சி உறுப்பினர்களாக, எந்த முதலமைச்சரானாலும், அப்போது குறை இருந்தது, சுட்டிக்காட்டினோம். இன்று நான் challenge செய்கிறேன். என்றாவது முதலமைச்சரை இப்படி நான் பாராட்டிப் பேசியதாக நீங்கள் குறிப்பு எடுத்துக் காட்டுங்கள். இன்றே பதவியை இராஜினாமா செய்கிறேன். நீங்கள் சகட்டுமேனிக்கு எதையாவது சொல்லி, இப்படியெல்லாம் சாதிக்க வேண்டாம். காரணம், அப்படிப்பட்ட ** எனக்குக் கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பதை இருப்பதாக, 'நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று அன்றும் பேசினேன்; நாளையும் பேசுவேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்படியெல்லாம் பொதுவாகப் பேச வேண்டாம். அன்று நாங்கள் சாலை மறியல் செய்துகொண்டிருந்தபோது, இந்த வழியாக முதலமைச்சர் போனார் என்பதுதான் உண்மை; அதைத்தான் சுட்டிக்காட்டினேன். நான் பின்புற வழி என்று வேறு கோணத்தில், அவர் சொன்ன அர்த்தத்தில் பேசவில்லை. அவர் வந்த வழி முன்னால் அல்ல, பின்னால் உள்ள வழி என்று சுட்டிக்காட்டினேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நான்காவது முறையாக என்னை அனுப்பி வைத்து, பேச வாய்ப்பினை அளித்த என்னுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், முதல் முறையாக எப்போது வந்தீர்கள்? (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** அதற்கெல்லாம் பின்னாலே வருகின்றேன். (சிரிப்பு) என்னை இங்கே இப்போது அனுப்பி வைத்த, ஏழை எளியோருடைய விடிவெள்ளி, என்னுடைய இதயதெய்வம், டாக்டர் அய்யா அவர்களுக்கு, திண்டிவனத்தை நோக்கி என்னுடைய வணக்கத்தைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய, இளைஞர்களுடைய சிம்மாசனத்தில் குடியிருக்கக்கூடிய என்னுடைய அன்புத் தம்பி, பசுமை தாயகத்தினுடைய தலை நாயகர் அன்புமணி அவர்களுக்கும் என்னுடைய அன்புகனிந்த நன்றியை இந்த இனிய நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே என்னைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்திலே வெற்றியடையச் செய்த என்னுடைய எடப்பாடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு அவர்கள் இருக்கின்ற அத்திசையை நோக்கி என்னுடைய இதயபூர்வமான நன்றியைச் சொல்லி, என்னுடைய வெற்றிக்காக இரவு பகல் பாராமல் உழைத்து வெற்றி அடையச் செய்த உண்மையான, அந்தத் தூய்மையான கூட்டணித் தோழர்களுக்கும், தொண்டர்களுக்கும் நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதனை மிகப் பணிவோடு தெளிவாக இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள்; 'நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்' என்று. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் காலத்திலிருந்து நான் திராவிட இயக்கத்திலே – 1965–லே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, பேரறிஞர் அண்ணா அவர்களும், ஈரோட்டுச் சிங்கம், வெண்தாடி வேந்தன், பகுத்தறிவுப் பகலவன் ஈ.வே.ரா. அவர்களின் கொள்கைப் பிடிப்போடு திராவிட இயக்கத்திலே – காலடி எடுத்து வைத்து, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இயக்கத்தைக் கண்டவன். அதேபோல, பெரியாரைக் கண்டவன். அதன் பிறகு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை, 'தூக்கி எறிந்தேன்' என்று சொன்ன பிறகு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

53-570—7

அவர்கள் அண்ணா தி.மு.க.-வைத் தொடங்கிய 1972 ஆம் ஆண்டு அண்ணா தி.மு.க.-விலே என்னை இணைத்துக் கொண்டவன் என்பதனைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எம்ஜிஆர். அவர்கள் இந்த மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகம் செல்லும்வரை, அவருடைய தொண்டனாக, தோழனாக, நண்பனாக, ஒரு சேவகனாக இருந்து பணியாற்றியவன் இந்தக் கணேசன் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்ல நான் பெருமைப்படுகிறேன்.

*பிற்பகல் 1-00*

1977-லே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த அரியணையிலே இங்கே, அமர்ந்து இருந்தபோது அவருக்கு நேர் பின்னாலே நான் அமர்ந்தவன் என்பது உங்களுக்குத் தெரியும். ஏன், இந்த நிதிநிலை அறிக்கையை அளித்தாரே, அண்ணன் – மாண்புமிகு என்று சொல்ல வேண்டும் – மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இன்னும் எத்தனையோ பேருக்குத் தெரியும். நான் அதைச் சொல்வது, இன்றல்ல, என்னுடைய டாக்டர் அய்யா அவர்களை வைத்து பல்வேறு கூட்டங்களிலே நான் பேசும்போதெல்லாம், ஏன், இந்த அவையினுடைய ரெக்கார்டுகளை எடுத்துப் பாருங்கள், பத்திரிகையாளர்களைக் கேட்டுப் பாருங்கள்; ஒரு கேள்வி கேட்டால்கூட, புரட்சித் தலைவருடைய ஒரு பாட்டைச் சொல்லித்தான் கேட்டுப் பழக்கமேயொழிய, அவரை மறக்கக்கூடிய அந்தப் பழக்கத்திலே இந்த கணேசன் இல்லை என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மடியிலே கனம் இல்லை; வழியிலே பயம் இல்லை எனக்கு என்பதையும் தெளிவுபடுத்தி, நான்காவது முறையாக வாக்களித்த என்னுடைய எடப்பாடி மக்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து நண்பர்களுக்கும் என்னுடைய கட்சியைச் சேர்ந்த, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நண்பர்களுக்கும் நான் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன், என்னுடைய கட்சியை மட்டும் சொல்லிவிட்டால் தவறு அல்ல. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு; இதுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்த தாரக மந்திரம், நல்ல பண்பாடு. அரசியல் நாகரிகம்;



அரசியல் நாகரிகத்திற்குக் கட்டுப்பட்டு, யாரை மக்கள் தேர்ந்தெடுக்கிறார்களோ, அவர்கள் மூலமாக 6 கோடி மக்களுக்கு என்ன நன்மை வரப்போகிறது என்பது நம்முடைய சிந்தனையிலே இருக்க வேண்டும். ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சியாக இருக்க வேண்டும் என்பதை மறந்துவிட்டு, ஆளுங்கட்சிக்கு நல்ல ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக இருங்கள்; இதுதான் அய்யா, நம்மை உருவாக்கிய, திராவிட இயக்கத்தினுடைய பெருந்தலைவர்களெல்லாம் சொல்லிக் கொடுத்த பண்பாடு; கலாச்சாரம். என்னைப் பொறுத்தவரை, எங்களுடைய இயக்கமான பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரை, ஞானசேகரன் போன்றவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்; நாங்கள் எதிரிக் கட்சியல்ல. எதிர்க்கட்சியாகச் செயல்படுவோமேயொழிய – பாட்டாளி மக்கள் கட்சி பற்றி யாராவது தொட்டுவிட்டீர்களானால், சுட்டுவிடும் என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள். நெருப்பைக் காகிதத்தில் கட்டி, மடியிலே வைக்கத் துணிந்தீர்களானால், பொசுக்கிவிடும் என்பதனைச் சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி-(குறுக்கீடு) அய்யா, நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை; நான் ஒன்றும் தப்பாகப் பேசவில்லை. (குறுக்கீடு) எவ்வளவு நேரம் அவர் பேசுகிறாரோ அந்த நேரத்தை எனக்கு ஒதுக்க நீங்கள் உத்தரவாதம் கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள் தேர்தலிலே போட்டியிடுவதற்கு, தேர்தலிலே வெற்றி பெறுவதற்கு, அவர்களுக்காக உழைத்தவர்களுக்கு, இன்னும் அவர்களை உருவாக்கிய தலைவர்களுக்கெல்லாம் நல்ல பண்போடு நன்றி சொன்னார்கள். ஆனால், கடந்த தேர்தலிலே அவர் வெற்றிக்காகக் கொட்டும் மழையிலும், மின்சாரம் நிறுத்தப்பட்ட நிலையிலும், எடப்பாடி தொகுதிக்கு நான் சென்றபோது, நம்முடைய தோழமைக் கட்சியினுடைய வேட்பாளருக்காக நான் நிச்சயமாக வாக்குகளைக் கேட்கவேண்டுமென்று சொன்ன நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்வதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மறந்து விட்டாரே; ஏற்கெனவே அவர் சொன்ன அந்த நல்ல பண்பை இதிலும் காட்டினால் அவருடைய பண்பாடு இன்னும் உயர்ந்ததாக இருக்குமே என்ற ஆதங்கத்திலே இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் செம்மலை, அவர் மறக்கவில்லை. அவர் பேசிக்கொண்டே வருகிறார். இப்போதுதான் முக்கியமான இடத்திற்கு வருகிறார்.

**திரு. ஐ. கணேசன்:** தமிழே, தலைமையே, உங்களுக்கு நான் அரசியல் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. என்னைவிட எவ்வளவோ காலத்திற்கு முன்னால் நீங்கள் இருந்தீர்கள். ஒரு கட்சிக் கூட்டணியோடு இணைந்து செயல்படும்போது, எங்களுடைய வாக்கு உங்களுக்கு; உங்களுடைய வாக்கு எங்களுக்கு. எங்களால் உங்களுக்கு ஒரு 4 இடம்; உங்களால் எங்களுக்கு ஒரு 2 இடம். இதுதான் அய்யா அரசியல் கூட்டணி. அதற்காகத்தானே நான் நன்றி சொன்னேன். என்னுடைய வெற்றிக்கு இரவு பகல் பாராமல் உழைத்த தோழமைக் கட்சி நண்பர்களுக்கு நன்றி என்று சொல்லும்போது, அண்ணா திமுக., தமாகா., காங்கிரஸ், கம்யூனிஸ்ட், முஸ்லீம் லீக் – அனைத்துக் கட்சிகளும் இருக்கின்றனவே; இதை ஏன் பிரிக்க வேண்டும்? நேரம் எப்படிப்பட்டது? பொன்னான, கண்ணான நேரம்; அதை ஒதுக்கலாமா?

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. கணேசன், தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் வந்தார்களே, அதைக் குறித்துக் கேட்கிறார்.

**திரு. ஐ. கணேசன்:** அதற்குத்தான் சொன்னேன். என்னுடைய வெற்றியிலே அதனுடைய உள் அர்த்தம் உங்களுக்குத் தெரியும். (சிரிப்பு) அதுதான் 'தமிழே!' என்றேன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஐ. கணேசன்:** என்னங்க இவர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், குறுக்கிட வேண்டாம், உட்காருங்கள். திரு. கணேசனை சிக்கலில் மாட்டி வைக்க வேண்டாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தன்னுடைய வெற்றிக்காக உழைத்த அத்தனை பேரையும் பிரித்து விடாதீர்கள் என்று சொன்ன நம்முடைய திரு. ஐ. கணேசன் அவர்களுடைய கட்சி ஏன் இதிலிருந்து பிரிந்து போனது என்பதை அவர் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் அவையிலே சொல்லிக் கொண்டிருந்தால், இத்தனை பேப்பர்களைப் படித்துவிட்டு, இவ்வளவு சட்டத்தைப் படித்துவிட்டு, இவ்வளவு நேரமாக முன்னாலேயும் போக முடியவில்லை; பின்னாலேயும் போக முடியவில்லை; சைடிலேயும் போக முடியவில்லை; ஏனென்றால், பின்னாலே கடைசியாக போடுங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்துவிட்டு, என்ன நடந்தது, ஏது நடந்தது, என்னென்ன அறிக்கை கொடுக்கப்பட்டது – இத்தனையையும் விவாதித்து, இங்கேயும் கலாட்டாவா? அது தேவைதானா? என்னுடைய அண்ணன் எவ்வளவு அற்புதமான எம்.ஜி.ஆர். காலத்தில் அமைச்சராக இருந்தவர்; அவர் இன்று இந்த நிதிநிலை அறிக்கையிலே தெள்ளத் தெளிவோடு எவ்வளவு நல்ல பல திட்டங்களையெல்லாம் கொண்டு வந்து இருக்கிறார்; அதைப்பற்றி எல்லாம் பேசலாம் என்று இருந்தேன்; அதையும் குறைத்துவிட்டார்கள். இருப்பினும், ஐந்தாறு பகுதிகளை விட்டுவிட்டு, முக்கியமான நல்ல திட்டங்களைப் பற்றி மட்டும் சொல்கிறேன். ஒரு தாய்க் குலம் ஆட்சியிலே இருப்பதனால், பெண்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன; அவற்றை உளமார பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக, தாய்மார்களுக்காக அளிக்கக்கூடிய அத்தனை திட்டங்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் வரவேற்கிறோம்.

குறிப்பாக, பெண் சிசுக் கொலையைத் தடுக்க எங்களுடைய மாவட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அண்ணனுடைய மாவட்டத்தில் எவ்வளவு பெண் சிசுக் கொலை நடந்தது, நடந்து கொண்டிருக்கிறது; நேற்று, இன்று, தினசரி நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பெண் சிசுக் கொலையைத் தடுக்க சட்டத்தை எங்களுடைய பகுதியிலே இன்னும் கடுமைப்படுத்துங்கள். தாய்க்கு முக்கியத்துவம் காட்டக்கூடிய தமிழ்நாட்டிலே, பெண்களுக்கு முக்கியத்துவம் காட்டக்கூடிய இந்த அற்புதமான ஆட்சியிலே, பெண் சிசுக் கொலை எங்களுடைய மாவட்டத்திலே மிக அதிகமாக இருக்கிறது. குறிப்பாக, தாரமங்கலத்தில் இருக்கிறது; அதேபோல, திருச்செங்கோட்டிலே இருக்கிறது; எடப்பாடியிலே இருக்கிறது. அரசு தினசரி அதைக் கவனிக்க வேண்டும்; கடுமையான சட்டத்தைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அண்ணன் பழனிசாமி அவர்கள் மிகவும் பாராட்டிய திட்டம், என்னைக் கவர்ந்த திட்டம் என்னவென்றால், ஒரு பெண் குழந்தை பிறந்து, அதன் தாய் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டால்,

அக்குடும்பத்திற்கு 20,650 ரூபாயை பேங்கிலே டெபாசிட் செய்து, அந்தக் குழந்தை படிக்கக்கூடிய காலத்திலே மாதா மாதம் 150 ரூபாயைக் கொடுத்து, திருமண காலம் – நல்ல அறிவு ஏற்படக்கூடிய – 18 ஆண்டை 20 ஆண்டாக ஆக்கி, 80 ஆயிரம் ரூபாய் கிடைக்கக்கூடிய திட்டம்; அதைப் பாராட்ட வேண்டாமா ஒரு நல்ல எதிர்க்கட்சி?

அதேபோலதான், 2 பெண் குழந்தைகள் மட்டும் பிறந்து, அதிலே ஒவ்வொரு குழந்தைக்கும் 40 ஆயிரம் ரூபாய் திருமணத்தின்போது கொடுக்கும் வகையில்; அந்தக் குழந்தைகள் பெயரில் 14,500 ரூபாய் டெபாசிட் செய்து, கல்விக் கூடத்திலே சேர்ந்து படிக்கக்கூடிய காலத்தில் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் கொடுக்கும் திட்டம் மிகப் பாராட்டக்கூடிய திட்டமாகும்.

அதேபோல, இன்னும் பல திட்டங்கள் பற்றிச் சொல்ல வேண்டும். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். எங்களுடைய மாவட்டத்தின் கிராமப் பகுதிகளிலே, படிப்பறிவு இல்லாத ஆயிரம் ஆயிரம் குடும்பங்களிலே, ஆண் மகன் வரும், ஆண் மகன் வரும் என்று ஏமாந்து, 3, 4 பெண் குழந்தைகளைப் பெற்றுவிட்டு, இன்னும் ஆண்டியாக இருக்கிறார்கள். இரண்டு குழந்தைகளுக்குக் கொடுக்கிறீர்களே, அந்தத் தொகையை அந்த 4 குழந்தைகளுக்கும், இன்னும் சேர்த்துக் கொடுங்கள் என்று இந்த நிதிச் சுமையிலே கேட்கவில்லை. அந்தக் குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகளுக்கு, கடைசியாகப் பிறந்த இரண்டு குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்திலே இடம் கொடுங்கள் என்று என்னுடைய சார்பாகவும், ஏழை, எளிய, படிப்பறிவற்ற அந்தக் கிராம மக்கள் சார்பாகவும் உங்களைப் பணிவோடு கனிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள், மூன்றாவது பெண் குழந்தை, நான்காவது பெண் குழந்தை இருக்கிற குடும்பங்களுக்கும் இந்த உதவியை நீட்டிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படிச் செய்தால், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மீறுவதை நாமே ஊக்குவிப்பதாக அமைந்துவிடும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலே பெண் குழந்தைகள் பிறந்தால்கூட, இரண்டோடு நிறுத்திக்கொள்ளுங்கள் என்கிற அந்த அறிவுரையை வழங்கினால் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி சொல்ல முடியவில்லை. இனிமேல் பிறக்கக்கூடியதற்கு வேண்டுமானால் பிரச்சாரம் பண்ணலாம். 'ஐந்து பிறந்தால் அரசனும் ஆண்டிதான்' என்ற நம்முடைய பழமொழி உண்டு. இனிமேல் பிறப்பதற்கு பிரச்சாரம் பண்ணலாம். எப்படியோ பிறந்துவிட்டது–

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், நாம் அறிவித்திருக்கிற சலுகையின் நோக்கம், இரண்டு நோக்கங்களாகும். ஒன்று, பெண் குழந்தைக்குச் சமுதாயத்தில் பாதுகாப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதாகும். இன்னொன்று, குடும்பக் கட்டுப்பாடு செய்வதை ஊக்குவிக்க வேண்டும் என்பதாகும். மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் இங்கே கோரியதுபோல, மூன்றாவது பெண் குழந்தை, நான்காவது பெண் குழந்தைக்கெல்லாம் இந்தச் சலுகையை நீட்டித்தால், ஏற்கெனவே பிறந்தவர்களுக்கு மட்டுமல்லாது இனிமேல் பிறப்பவர்களுக்கும் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகும். ஆகவே, குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கைக்கே ஊறு விளைந்துவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் நோக்கமே ஒரு பெண் குழந்தையைப் பெற்றுக்கொண்டு குடும்பக் கட்டுப்பாட்டைச் செய்துகொண்டால், அவர்களுக்கு எந்தவிதமான ஒரு குறைபாடும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இந்த வைப்புத் தொகையை, அந்த முதல் குழந்தை பெயரில் போட்டு வைக்கிறோம். அதைப்போலவே, இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றுவிட்டு, மேலும் ஆண் குழந்தைக்கு ஆசைப்படாமல், அதோடு குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டால், அவர்களுக்கும் எந்த நஷ்டமும் ஏற்படாதவகையில், இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். ஆகவே, குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கை என்பது கைவிட முடியாத கொள்கை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. நான், மூன்று, நான்கு குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்கவில்லை. ஏற்கெனவே பிறந்துவிட்டது; வளர்ந்துவிட்டது; திருமணம் செய்ய வழியில்லை. ஆகையினாலே இந்தத் திட்டத்தை அந்த இரண்டு குழந்தைகளுக்கு, ஒரு குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகளுக்குள்ளே கொடுங்கள். இனிமேல் இந்தத் தேதியிலிருந்து வருவது, ஒரே ஒரு பெண் குழந்தை பிறந்தால் [illegible]தும் என்று குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளச் [illegible]லாம்.

223 439.
சென்னை-600 [illegible]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குழந்தைகளுக்கும்கூட திருமண காலத்தில் திருமண உதவித் தொகையைப் பெறுவதற்கு வழிமுறை இருக்கிறது. அதை வேண்டுமானால் பெற்றுக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு ஒரு வருமான வரம்பை நிர்ணயம் செய்து, பல்வேறு திருமண உதவித் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள். இப்போதுகூட அந்த வருமான வரம்பை – வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்காக, ஏழாயிரம் ரூபாய் என்று இருந்ததை – பத்தாயிரம் ரூபாய் என்று உயர்த்தி அவர்களுக்காகப் பல்வேறு சலுகைகளை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதிர்க்கட்சி என்பதற்காக அல்ல என்றாலும், எங்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய அந்தக் கிராம மக்களுடைய உணர்வுகளைச் சொல்வது என்னுடைய கடமை என்ற முறையிலே சொல்லியிருக்கிறேன். எனவே, முதல்வர் அவர்களும், இந்த ஆட்சியும் சற்று இதன்மீது தனிக் கவனம் செலுத்தி, அந்தப் பெண்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

அதோடு, கலப்புத் திருமணத் திட்டத்திலே ஆதிதிராவிடர் பெண்களையும், மணமக்களிலே, ஆணோ, பெண்ணோ, ஆதிதிராவிடர் குடும்பத்திலே உள்ளவர்களைத் திருமணம் செய்தால், 10,000 அல்ல; 20,000 ரூபாய், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளிப்பதாக இந்த வரவு–செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோல, இன்னும் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. ஏழை விவசாயிகளுடைய வாழ்வினை முன்னேற்ற மிகச் சரியான ஒரு முடிவை எடுத்து, கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று இந்த அவையிலே பலமுறை நாங்கள் பேசி வெளிநடப்புச் செய்திருக்கிறோம். கடைசியாகக் கேட்டதற்குத்தான் – முதலிலே கேட்டவனும் நான்தான், ஞானசேகரன் இதை மறுக்க மாட்டார்.



முதலிலே கேட்டவனும் நான்தான்; எப்படியாவது கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்; நீங்கள் இதை முன்னர் அறிவித்தீர்கள் என்று நான் திருச்சி மாநாட்டிலே சொன்னபோது, 5 ஆண்டு காலம் ஆளவிடுங்கள்; நிச்சயமாகக் கொடுப்பேன் என்று சொன்னார்கள். கடைசிவரை கொடுக்காமல், கடைசியாக ஓர் அறிவிப்புச் செய்தார், 10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன் என்று. இந்த நிதிநிலை அறிக்கையிலே எத்தனையோ கஷ்டம், எத்தனையோ சிக்கல், எங்களுக்கும் புரிகிறது. அதைவிடக் கொடுமை ஏழை கரும்பு விவசாயிகள் படாத பாடு படுகிறார்கள். அவர்களுடைய முட்டுவழிச் செலவிற்கு நீங்கள் ஒதுக்கிய தொகை போதாது. எப்படியாவது சிரமத்தோடு சிரமமாக அந்த விவசாயிகளுடைய வாழ்வு உயர கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க இந்த அரசு, முதலமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. இலட்சக்கணக்கான நெசவாளர்கள் இன்று வேலையிழந்து விடக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். நேற்று ஒரேநாளிலே நூலுக்கு கட்டு ஒன்றுக்கு 6 ரூபாய், 7 ரூபாய் விலை ஏற்றம்; என்னிடத்திலே பல சங்கத்தினர் மனு கொடுத்து, முதலமைச்சரிடத்திலும், நிதியமைச்சர் அவர்களிடத்திலும் இதைச் சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் அவர்களுக்கு, நான் கொடுப்பேன், கொடுப்பேன் என்று சொல்கிறேன்.

அடுத்து, காவிரி பிரச்சினையைப் பற்றி நான் ஒன்றை உங்களுக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும். நாளை அதுசம்பந்தமான ஒத்திவைப்புத் தீர்மானம் வரும் என்ற மிக ஆவலோடு எதிர்பார்க்கிறேன். காவிரியிலே தண்ணீர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** சீக்கிரம் முடித்துவிடுகிறேன். நான் பிரச்சினைக்குப் போகமாட்டேன். என்னைப் பேச அனுமதித்தால், 2 நிமிடங்களில் உரையை முடித்துவிடுவேன். என்னுடைய ஊருக்குப் பக்கத்திலே மேட்டூர் இருக்கிறது. அவ்வளவு பெரிய மேட்டூர் அணை, தற்போது குட்டையாக இருக்கிறது. தண்ணீர் வரத்து, மிக மிகக் குறைந்துவிட்டது. அந்த மேட்டூர் அணையை நம்பி, கிட்டத்தட்ட 5

இலட்சம் விவசாயிகள் பயிரிட்டு இருக்கிறார்கள். இன்னும் 10 நாட்களுக்குத்தான் தண்ணீர் வரும் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நமது அரசு என்ன செய்யப் போகிறது?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூருக்கு காவிரியிலிருந்து தண்ணீர் திறந்து விடவேண்டும்; அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கடந்த மாதமே, 5 வாரங்களுக்கு முன்பாகவே, நான் மாண்புமிகு பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். அதைப்போலவே, கர்நாடக மாநில முதலமைச்சருக்கும் கடிதம் எழுதியிருந்தேன். பிரதமரிடமிருந்து 'உங்கள் கடிதம் கிடைத்தது' என்று மட்டும் பதில் வந்தது. கர்நாடக முதலமைச்சரிடமிருந்து இதுவரை பதில் வரவில்லை. இன்று மீண்டும் பிரதமர் அவர்களுக்கும், கர்நாடக முதலமைச்சர் அவர்களுக்கும் நான் கடிதம் அனுப்பவுள்ளேன். அதோடு, பொதுப் பணித் துறை அமைச்சரும், தமிழக அரசுத் தலைமைச் செயலாளரும், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களும், கர்நாடக முதலமைச்சரைச் சந்திக்க நேரம் கேட்டிருக்கிறோம். அவர்களுடைய பதிலுக்காகக் காத்திருக்கிறோம். ஆகவே, இந்த அரசு, இந்தப் பிரச்சினை குறித்து முடிந்த நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய விளக்கத்தினை நான் மட்டுமல்ல; கிட்டத்தட்ட தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை விவசாயிகளும் நெஞ்சாரப் பாராட்டுவார்கள். ஏனென்றால், மேட்டூர் கிழக்குக் கரை, மேற்குக் கரைக் கால்வாய்களிலே என்னுடைய நிலமும் இருக்கிறது. இந்தத் தண்ணீரை நம்பித்தான் 10 ஏக்கராவுக்கு நாற்று நட்டுவிட்டேன். நான் இங்கு இருக்கிறேன். அங்கு இருக்கக்கூடியவர்கள் தினசரி என்னைத் தொந்தரவு செய்கிறார்கள்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசில் Cauvery River Authority என்ற ஓர் அமைப்பை அமைத்திருக்கிறார்கள். அதற்கு பிரதமர் தலைவராக இருக்கிறார். அதைப்போலவே, அதிகாரிகளைக் கொண்ட ஒரு Monitoring Committee அமைத்திருக்கிறார்கள். அதில், தமிழக அரசின்



தலைமைச் செயலாளரும், கர்நாடக அரசின் தலைமைச் செயலாளரும் உறுப்பினர்கள் ஆவார்கள். அந்த Monitoring Committee-யின் கூட்டத்தை உடனே கூட்ட வேண்டும் என்றும் மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அமைத்துள்ள அந்த Monitoring Committee-ஐ ஐந்து மாநில முதலமைச்சர்களும் சேர்ந்து கூட்டினால்தான், கூட்ட முடியும்; இல்லையென்றால் கூட்ட முடியாது என்று சொல்கிற அளவுக்கு நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது Monitoring Committee அல்ல. அதுதான் ஆணையம். அந்த ஆணையத்திற்குத் தலைவர் பிரதமர். அதில், உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட மாநில முதலமைச்சர்கள்; Monitoring Committee-யில் அதிகாரிகள்தான் இருக்கிறார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்று சொன்னால், அந்த ஆணையத்தையே மாற்றுவதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமரோடு பேசி, இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற பிரச்சினை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில் பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணி அரசில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இடம் பெற்றிருந்தபோது, நம் ஆலோசனையை மீறி, என்னுடைய ஆலோசனையை மீறி, பிரதமர் தலைமையில் இந்தக் காவிரி ஆணையம் அமைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்துதான் நான் அந்தக் கூட்டணியில் இருந்தே வெளியேறினேன்; (மேசையைத் தட்டும் ஒலி) பி.ஜே.பி. தலைமையிலான மத்திய அரசுக்கு அளித்த ஆதரவை வாபஸ் பெற்றேன் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே, ஆரம்பத்திலிருந்தே இந்த ஆணையம் அமைப்பது தவறு, பிரதமரையும், நான்கு மாநில முதலமைச்சர்களையும் கொண்டு அமைத்த இந்த ஆணையம் தேவையற்ற ஓர் அமைப்பு என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக இருந்து

வந்திருக்கிறது. ஆனால், அதையும் மீறி அந்த ஆணையத்தை அமைத்துவிட்டார்கள். அதனால்தான், பிரதமருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். ஆணையத்தின் தலைவர் என்ற முறையில் கர்நாடகம் தண்ணீரைத் திறந்துவிட நீங்கள்தான் ஆவன செய்ய வேண்டும் என்று பிரதமரிடம் கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், உங்கள் கேள்விக்கு மிக முக்கியமான விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள். உங்கள் நிலமும் நன்றாக விளையும். கவலைப்படாமல் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தண்ணீர் வந்து நன்றாக விளைய வேண்டும் என்பதற்காகச் சூடத்தை வாங்கிக் கொளுத்தி, அந்த ஜனங்கள் எல்லாம் நொந்து விட்டார்கள். நிச்சயமாக இந்தத் தடவை தண்ணீர் வரும் என்ற செய்தி இன்று திருப்தியாக இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. கபினி பகுதியில் மீண்டும் மழை பெய்திருக்கிறது. இன்று மீண்டும் மேட்டூருக்குக் கிட்டத்தட்ட 1-1/2 டி.எம்.சி. அடி தண்ணீர் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** முடித்துவிடுகிறேன். சென்னையிலே கடுமையான குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. அந்தக் குடிநீர்ப் பிரச்சினைக்காக, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு போர்க்கால நடவடிக்கையிலே பல்வேறு திட்டங்களைச் செய்து, லாரியிலே, இரயிலிலே, எல்லாவற்றிலும் தண்ணீர் கொண்டுவந்து அந்தத் தண்ணீரைக் கொடுத்துவிட்டு, கடைசியாக, நிதிநிலை அறிக்கையிலே வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-25*

1977-லே சட்டமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக இருந்தவர்களுக்குத் தெரியும். புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களிடம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற



வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அப்போதைய முன்னாள் அமைச்சர் திரு. ப.உ. சண்முகம் அவர்கள், வீராணம் திட்டம் மூலம் தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டுவா வேண்டும் என்று கேட்டபோது, நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், கூடாது; ஏனென்றால், அது கொள்ளிடம், காவிரியை நம்பியிருக்கக்கூடிய ஏரி. அங்கேயிருந்து வறட்சிக் காலத்திலே, வெய்யில் காலத்திலே, நிச்சயமாக அந்த ஏரிக்குத் தண்ணீர் வந்து, அதை சென்னைக்குக் கொடுக்க முடியாது என்று கைவிட்ட திட்டம் என்றார்கள். இதே அவையிலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தெள்ளத் தெளிவாக இதை எடுத்துச் சொன்னார்கள். திரு. ப.உ. சண்முகம் அவர்களும், பேராசிரியர் அவர்களும், கலைஞர் அவர்களும், மாறி மாறி, ரோட்டில் எல்லாம் குழாயைப் போட்டுவிட்டோம்; 225 மைல் நீளத்துக்குக் குழாய் பதித்துவிட்டோம் என்றெல்லாம் சொல்லும்போதுதான் புரட்சித் தலைவர் அவர்கள், முடியவே முடியாது என்று சொல்லி, அதற்குப் பல விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, வீராணம் ஏரி 1440 மில்லியன் கன அடி தண்ணீர் மட்டும்தான் கொள்ளளவு கொண்ட ஏரியாகச் சொல்லப்படுகிறது. அதுவும் பல நூறு ஆண்டு காலமாக தூர் வாரப்படாததால், 960 கன அடி தண்ணீர்தான்; அதாவது ஒரு டி.எம்.சி. தண்ணீருக்குக் குறைவான கொள்ளளவு கொண்ட ஏரியாகச் சொல்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்த ஏரியை நம்பி 45,000 விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் மனதிலே வைத்து, அந்த ஏரியிலிருந்து சென்னை நகரினுடைய இலட்சக்கணக்கான மக்களுடைய தாகத்தை, குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க முடியுமா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல, இந்தத் திட்டத்துக்கு உலக வங்கி பணம் கொடுக்க முடியாது என்று அப்பொழுது சொல்லியிருக்கிறார்கள். இதையும் நீங்கள் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு நல்ல தீர்வாக சென்னைக்குக் குடிதண்ணீர் கொண்டுவர வேண்டுமானால், கிருஷ்ணா நீர் வரவேண்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அன்னை இந்திரா காந்தி மற்றும் ஆந்திராவினுடைய முதல்வர் என்.டி.ஆர். அவர்கள் சென்னை மக்களுடைய பிரச்சினையைப் போக்க ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா நீரைக் கொண்டு வரவேண்டும் என்ற திட்டத்தை ஏற்படுத்தினார்கள். பல நூறு கோடி ரூபாயை, ஏழை மக்களுடைய வரிப் பணத்தைக் இந்த அரசு கொடுத்திருக்கிறது. கர்நாடகத்திலே இருக்கக்கூடிய ஒரு சிலர், பக்கத்திலே ஒரு சிலர் அதைத் தடங்கல் செய்து, நம்முடைய தமிழ் மக்களுடைய தாகத்தைத் தீர்க்க விடாமல் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அந்தத் திட்டம் வெற்றியடைந்தாலொழிய, சென்னைக்குப் போதுமான குடிநீர் நிச்சயமாகக் கிடைக்காது என்பதனை நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களே தெள்ளத்தெளிவாக இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

பள்ளிப்பாளையம்-ஒகேனக்கல் திட்டம், அதிலே பள்ளிப்பாளையத்திலிருந்து கொண்டுவந்தால், உங்களுக்குத் தெரியும், ஏகப்பட்ட சலவைத் தண்ணீர், அது, இது என்று விட்டு, பாதித் தண்ணீரைக் குடிக்கவே முடியாது. அதனால் ஒகேனக்கலிலிருந்து நேராக நீங்கள் ' கொண்டு வந்தால், வேலூர், இராணிப்பேட்டை, எல்லாப் பகுதிகளுக்கும் தந்து சென்னை வரைக்கும் கொண்டுவரலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் எழுப்பிய அத்தனை பிரச்சினைகளுக்கும் பதில் சொல்ல வேண்டுமானால், கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் தேவை. இருப்பினும், நேரத்தின் அருமை கருதி, எனது விளக்கத்தினை நான் சுருக்கிக்கொள்கிறேன். ஒகேனக்கல் திட்டத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார். 1991-லிருந்து 1996 வரை இருந்த முந்தைய ஆட்சிக் காலத்தில் ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்ற திட்டம் தீட்டி, அதற்காக ஜப்பான் நாடு நிதியுதவி செய்வதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அப்போது இங்கே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மத்தியிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. 1998-ல், பி.ஜே.பி. தலைமையிலான மத்திய அரசு Pokhran Nuclear Test-களை நடத்தியது. இதற்குக் கடுமையான கண்டனம் தெரிவித்து, ஜப்பான் நாடு இந்தியாவுக்கு அளிப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த அத்தனை நிதி உதவியையும் இரத்து செய்துவிட்டது. அதனால்தான், தமிழகத்திலும் ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்ற ஜப்பான் நாட்டின் எதிர்பார்க்கப்பட்ட நிதி உதவி கிடைக்கவில்லை. அதன் பிறகு, அந்தத் திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இப்போது மீண்டும் நம்முடைய ஆட்சி ஏற்பட்ட பிறகு, அந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு, அதற்கு வேறு இடத்திலிருந்து நிதி ஏற்பாடு செய்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றத் திட்டமிட்டிருக்கிறோம். ஒகேனக்கல் திட்டத்தைப் பொறுத்தவரை, அதனுடைய தலையாய நோக்கம், தருமபுரி மாவட்டத்திற்குக் குடிநீர் வழங்க வேண்டும் என்பதுதான் ஆகும். கூடவே வேலூர் பகுதிக்கும் குடிநீர் வழங்கத் திட்டமிட்டிருக்கிறோம். அங்கிருந்து சென்னைக்குக் கொண்டுவர சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதையும் ஆராய்ந்து பார்க்கிறோம்.



வீராணம் திட்டத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் சில தவறான தகவல்களை இந்த அவைக்குத் தந்திருக்கிறார். அதற்கு விளக்கம் அளிப்பது என்னுடைய கடமையாகிறது. வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் வழங்க அங்கே போதுமான தண்ணீர் இருக்குமா, ஆண்டு முழுவதும் இருக்குமா என்பதைப் பற்றிய சந்தேகங்களைப் பலர் இதற்கு முன்பு எழுப்பியிருக்கிறார்கள். இதன் சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காகத்தான் உலக வங்கி தனது குழுவை அனுப்பி வைத்தது. உலக வங்கியின் குழு இங்கே பலமுறை வந்து இந்தத் திட்டத்தை ஆராய்ந்து, வீராணம் ஏரியில் போதுமான தண்ணீர் இருக்கிறது; இந்தத் திட்டம் சாத்தியமானதுதான் என்று அவர்கள் சான்றிதழ் அளித்த பிறகே, அறிக்கை அளித்த பிறகே, உலக வங்கி தமிழ்நாட்டிற்கு 1,638 கோடி ரூபாய் நிதி உதவி வழங்க ஒப்புதல் அளித்தது. ஆகவே, உலக வங்கி அனுமதி மறுத்தது என்பது தவறான தகவல். உலக வங்கி 1,638 கோடி வழங்க அனுமதி அளித்தது. அந்த நேரத்தில் இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு எல்லா ஆயத்தப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. உலக வங்கியின் அனுமதி பெறப்பட்டது. 1965 இறுதியில். 1996-ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அப்போதுதான் ஸ்டீல் பைப்புகளுக்காக, ஸ்டீல் குழாய்களுக்காக குளோபல் டெண்டர் விட ஆரம்பித்திருந்தோம். அதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. வெறும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக முந்தைய ஆட்சியாளர்கள், இந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் கைவிட்டுவிட்டார்கள். அதனால், உலக வங்கி அளித்திருந்த நிதியுதவியையும் பயன்படுத்திக்கொள்ளாமல் இவர்கள்தான் இந்தத் திட்டத்தைக் கை கழுவிவிட்டார்கள். இப்போது மீண்டும் வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறோம். வீராணம் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலமாக சென்னை மாநகர குடிநீர்த் தேவையை முழுவதுமாகப் பூர்த்தி செய்ய முடியும் என்று நாங்கள் கருதவில்லை. அப்படி நாங்கள் நினைக்கவும் இல்லை. எங்கிருந்தெல்லாம் தண்ணீர் கொண்டுவர முடிகிறதோ, அங்கிருந்தெல்லாம் தண்ணீரைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய முயற்சியாக இருக்கிறது. வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளோம்.

பாலாற்றில் புதிய நீர்த்தேக்கத்தைக் கட்ட உள்ளோம். அதைப்போலவே, பள்ளிப்பாளையத்திலிருந்தும், மேட்டூரிலிருந்தும் குழாய்கள் மூலமாக சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான ஒரு திட்டத்தைத் தீட்டி அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். இன்னும் பல திட்டங்களை நாங்கள் தீட்டிக் கொண்டிருக்கிறோம். இவற்றையெல்லாம் அந்த மானியக்

கோரிக்கை வரும்போது, விரிவாக எடுத்துச் சொல்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. கணேசன், ஒரு நிமிடத்தில் முடியுங்கள். மதியமும் அவைக் கூட்டம் இருக்கிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்னைவாழ் மக்களுக்கு எப்படியாவது குடிநீர் கொடுக்க வேண்டும் என்ற அந்த உயரிய சிந்தனையோடு திட்டத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள் எல்லாம் உணருகிறோம். அதேநேரத்திலே, வீராணம் ஏரிக்கு நீர்வரத்து என்பது காவிரியிலிருந்துதான் வருகிறது. காவிரியிலே இப்போது நீர்வரத்து குறைந்து கொண்டிருக்கிற சூழ்நிலையிலே அந்தக் காவிரி நீரை இந்த ஏரிக்குக் கொண்டு வரக்கூடிய சாத்தியக்கூறுகள் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை ஆராயக்கூடிய அதேநேரத்திலே வீராணம் ஏரியை பாசனத்திற்காக பயன்படுத்தக்கூடிய விவசாயிகள் முப்போகமும் பயிரிடுகிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திர தினத்தன்று என்னுடைய உரையிலேயே இதற்கான ஒரு உறுதியை அளித்திருந்தேன். வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீருக்காகத் தண்ணீர் கொண்டு வருவதன் மூலமாக அங்கே வீராணம் ஆயக்கட்டில் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படும் தண்ணீருக்கு எந்தக் குறைவும் வராது; அங்கே விவசாயிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்ற உறுதியை இந்த அரசு அளிக்கத் தயாராக இருக்கிறது.

**திரு. ஐ. கணேசன்:** சென்னைக்கு எப்படியாவது குடிநீர் கொண்டு வந்து இந்த மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதில் நாங்கள் உங்களுக்கு ஆதரவாக நிச்சயமாக இருப்போம். அதேநேரத்திலே அந்தப் பகுதி மக்களுடைய 45,000 ஏக்கர் விளை நிலங்களுக்கும் நீர் கிடைக்க நீங்கள் உத்தரவாதம் அளித்து அந்த விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை என்று சொல்லி...



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனத்திற்கு t.m.c. ft. அளவில் தண்ணீரை அளவிடுகிறார்கள் – Thousand million cubit feet – பாசனத்திற்குத்தான் நிறையத் தண்ணீர் தேவை. குடிநீருக்கு M.L.D. கணக்கில்தான் கணக்கிடுகிறோம் – Million litres per day . ஆகவே, எவ்வளவுதான் குடிநீருக்காக நாம் தண்ணீரை எடுத்துக்கொண்டாலும், அங்கே விவசாயிகளின் பாசனத் தேவைகள் பாதிக்கப்படாது என்ற உறுதியை அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஐ. கணேசன்:** நன்றி. அடுத்தது வருவாய்த் துறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, ஒன்றே ஒன்றுதான், முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதி மக்கள் பிரச்சினையை எல்லாம் சொல்லி முடித்துவிடுகிறேன்.

நிதிநிலை அறிக்கை என்பதாலே கிட்டத்தட்ட விவசாயி பெற்ற கடனுக்கு எப்படி இப்போது 340 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி, கூட்டு வட்டி எல்லாம் தள்ளினார்களோ, அதேபோல வருமான வரி பாக்கி மட்டும் பல ஆண்டு காலமாக குறைந்தது 6,000 கோடி ரூபாய் இருக்கிறது. அதற்கு மாதம் ஒன்றுக்கு 2 சதவிகிதம் வீதம் ஒரு ஆண்டுக்கு 24 சதவிகிதம் வட்டி வருகிறது. 4 ஆண்டு காலம் அந்த வட்டியைக் கணக்குப் போடும்போது, வாங்கிய தொகைக்குக் கிட்டத்தட்ட சரியாகிவிடுகிறது. இது ஒரு 24, 30 ஆண்டு காலமாக வரி கட்டாமல் இருப்பதால், வட்டி கணக்குப் போட்டால், 6 ஆயிரம் கோடி நாம் ஒரு வருடம் பட்ஜெட்டே போடக்கூடிய அளவுக்கு இருக்கிறது. இதற்கு ஒரு சுருக்கமான வழி எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். நேரமில்லை. தயவுசெய்து, பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று சொல்வார்கள், அது தெரிகிறது. (குறுக்கீடு)

*பிற்பகல் 1–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் ஏதோ விளக்கம் சொல்கிறார்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி 1996 ஆம் ஆண்டு ஆட்சியை விட்டுச் செல்லும்போது, வரி பாக்கி 870.08 கோடி ரூபாய் இருந்தது. கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில், அதுவும் குறிப்பாக கடந்த 3 ஆண்டு காலத்தில் மட்டும் இந்த வரி பாக்கி ரூ.1,818.32 கோடியாக உள்ளது. இதனையும் சேர்த்து தற்போது 6,688.38 கோடி ரூபாயைத் தாண்டி வரியை வசூலிக்காமல் விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை. 6 ஆயிரம் கோடி என்று நான் சேகரித்தது சரி என்று சொல்லும்போது, உள்ளபடியே அமைச்சர் அவர்களுக்கும், உங்களுக்கும் நான் நன்றியைச் சொல்ல வேண்டும். என்னுடைய ஆதங்கம் எல்லாம் விவசாயிகளுக்கு அந்த வட்டியைத் தள்ளுவதுபோல இந்தச் சிறிய வியாபாரிகளுக்கு, அவர்கள் கட்ட வேண்டிய தொகைக்கான வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். ஒரு பொருளை, 10 இலட்சம் ரூபாய் பொருளை அடமானமாக வைத்து வாங்கினால் அவனுக்கு 4, 5, 10 ஆண்டு காலத்திலே அது 20, 25 இலட்சம் ரூபாய் ஆகிறது. அதை அரசாங்கம் ஜப்தி செய்தால்கூட அதனால் நமக்கு நன்மை கிடைப்பதில்லை. அதிலே ஏலமும் போவதில்லை. 6 ஆயிரம் கோடி; சர்வ சாதாரணமாக அந்த வட்டியைத் தள்ளுபடி செய்தீர்களானால் ஒரு 10 சதவிகிதம் வசூல் செய்தால்கூட 600 கோடிக்கு மேலே அந்தப் பணம் வரும். அதனால் இந்தத் துண்டு பட்ஜெட்டே இல்லாத நிலைமைகூட இந்த ஒரு சிறிய கணக்கிலே உங்களுக்குத் தெரியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதியம் உங்கள் உறுப்பினர்கள் எல்லாம் பேசுகிறார்கள். அதிலே பேசச் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஆதிதிராவிட அருந்ததியர்களுக்கு எம்.ஜி.ஆர். காலத்திலே கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் ஒழுகிக்கொண்டிருக்கின்றன. 20 ஆண்டு காலமாக அந்த ஆதிதிராவிட அருந்ததியர் மக்களுக்கு ரிப்பேர் செய்ய வழியில்லை. ஆகையினாலே...

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக மத்திய அரசு நிதியின் மூலம் எல்லா தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதேமாதிரி, பழுது பார்ப்பதற்குத் தனி நிதி ஒதுக்கீடு



செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எந்தப் பகுதியிலே அந்தச் சமுதாய மக்கள் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால், அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அந்த வீடுகளைச் சீர் செய்வதற்கு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் ஏதோ விளக்கம் சொல்கிறார். சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டப்படுகின்ற வீடுகள் சீர் செய்யப்படாமல் பல ஆண்டுகளாக இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே 4 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். கச்சா வீடுகளுக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து அந்த வீடுகள் எல்லாம் புதுப்பிக்கப்படுகின்றன என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** சிரிப்புத்தான் வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே எத்தனையோ முறை கேட்டும் ஒன்றும் நடக்கவில்லை. இவர்கள் பாவம் நம்முடைய ஜனங்கள்; நம்மை நம்பி இருக்கின்ற ஜனங்கள். எம்.ஜி.ஆர். அவர்களை நம்பி இருக்கக்கூடிய அருந்ததியர் சமுதாயத்து ஜனங்கள். எனக்காக இதைப் புறக்கணிக்காமல், உங்களைத் தவிர கடவுளே வந்தாலும், வேற யாரையும் அவர்கள் தேர்ந்தெடுக்கமாட்டார்கள்; இதயத்திலே பதிய வைக்கமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை வீரன் அவர்தான் என்று சொல்லிக்கொண்டிருக்கிற அந்த ஜனங்களைக் காப்பாற்றுவதற்கு இந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றினால் அது உங்களுக்குத்தான் நன்மை என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். கோ-ஆப்டெக்ஸில் 35 பேர் மட்டும் படித்தவர்கள்...

## 4. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதியம் பேசிக்கொள்ளலாம். இன்று மாலை சட்ட மன்றப் பேரவையின் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 4-30 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டிய

பகுதியில் உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*பிற்பகல் 1–30*

பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 5. சிறப்புக் கவன ஈர்ப்பு

### காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலை வெடி விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலூர் மாவட்டம், காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலையில் நடந்த வெடி விபத்தில் பலர் இறந்தது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ்வி. திருஞானசம்பந்தம், திரு. எம். ராம்குமார், திரு. என்.ஆர். ரங்கராஜன், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கே.சி. கருணாகரன், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. துரைமுருகன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஆஸ்டின் ஆகியவர்களும், கவன ஈர்ப்பாக திரு. ஜி.கே. மணி, திரு. சு. சிவராஜ் ஆகியவர்களும், மற்றும் சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. லா. சந்தானம், திரு. ஐ. கணேசன் ஆகியவர்களும் முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இத்தகைய தீர்மானங்களைக் கேள்வி நேரம் முடிந்த பிறகு எடுத்துக்கொள்வதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. இருப்பினும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும், அவசரத் தன்மையைக் கருதியும், சிறப்பு நேர்வாகக் கருதியும், இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக அனுமதிக்கிறேன். கட்சிக்கு ஒருவராக மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானத்தை மட்டும் குறிப்பிடுமாறு அழைக்கிறேன். முதலில் மாண்புமிகு திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி காட்பாடியில் அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு வெடிமருந்துத் தொழிற்சாலையில் 16 ஆம் தேதி காலை 9 மணியளவில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக 24 பேர்கள் இறந்துவிட்டார்கள். 3



பேர்களுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அவர்கள் அரசு மருத்துவமனையில் இருக்கிறார்கள் என்ற துயரமான செய்தியை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, மேற்கொண்டு இந்த அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைக்கு நான் கொண்டு வருகிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் துணையாக அமையும் என்ற காரணத்தால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொண்டுவந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இது ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல, சிறப்புக் கவன ஈர்ப்பு.

**திரு. துரைமுருகன்:** அது ரொம்பப் பேசுவது. Please, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு என்பது அவை நிகழ்ச்சி நிரலிலே இல்லாத ஒன்று. ஒத்திவைப்புத் தீர்மானமாக இப்போது எடுக்கப்படவில்லை. சிறப்புக் கவன ஈர்ப்பாக அதன் சிறப்புத் தன்மையைக் கருதி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. சிறப்புக் கவன ஈர்ப்பு என்பது நம்முடைய விதிமுறைகளிலே கிடையாது. பிரச்சினைகளுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நீங்கள் இதிலே விளக்கமாகப் பேசுவதற்கெல்லாம் அனுமதி கிடையாது. நீங்கள் நிகழ்ச்சியைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். அதற்கு அமைச்சர் விளக்கம் சொல்வார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தாங்கள் தெரிவித்ததுபோல, சிறப்புக் கவன ஈர்ப்பு என்று ஒன்று கிடையாது. தாங்கள் இருந்தபோதும் அறிவீர்கள். நானும் அறிவேன். ஆனால், சென்ற முறை உங்களுடைய ஆசனத்திலே அமர்ந்திருந்தவர் அப்படியொரு வாய்ப்பைத் தந்து, Adjournment motion and Call attention–ஐவிட இது சிறப்பாக இருப்பதால் 10 நிமிடம் அதிகமாகப் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெடிமருந்துத் தொழிற்சாலைக்கு வாருங்கள். சிறப்புக் கவன ஈர்ப்புக்கு வாருங்கள். கடந்த முறை இருந்தவர் அளித்த தீர்ப்பின் அடிப்படையில்தான் இது.

**திரு. துரைமுருகன்:** இதை ஒப்புக்கொள்கிறேன். For your kind information. உங்களுக்குத் தெரியும், கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நான் இந்த அவையிலே ஆளும் கட்சி உறுப்பினராகவும், எதிர்க்கட்சி உறுப்பினராகவும் இருந்திருக்கிறேன். ஆனால், 24 பேர் உயிர்களைப்

பறித்த ஒரு செய்தியை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நான் இங்கே கீழே உட்கார வேண்டிய நிலை வந்ததே என்பதற்காக நான் வருத்தப்படுகிறேன். காரணம், நான் ஆட்சியைக் குறை சொல்ல விரும்பவில்லை. அமைச்சர்மீது குற்றச்சாட்டை நான் சாட்டவில்லை. Accident என்பது விபத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது வெடிமருந்துத் தொழிற்சாலை பற்றிய சிறப்புக் கவன ஈர்ப்பு.

**திரு. துரைமுருகன்:** விபத்து எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம். ஆகையால் ஏற்பட்டிருக்கிற இந்த விபத்திற்கு என்ன காரணம்? (குறுக்கீடு) அமைச்சரை நான் ஒன்றும் சொல்லவில்லை. குற்றஞ்சாட்டவில்லை என்று சொன்னேன். அதற்கு எழுந்து நிற்கிறார். சாட்டும்போது சாட்டலாம். ஆனால், இதில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டெல்லாம் இதில் இல்லை. அதற்கு அமைச்சர் பதில் சொல்லவேண்டுமென்று கேளுங்கள். அவ்வளவுதான்.

**திரு. துரைமுருகன்:** இந்த விபத்து கொடுமையான ஒன்று. அன்றைக்கு அங்கு நான் சென்றேன். அது German Collaborators சேர்ந்து கட்டியது. அந்த அறை தூளாகாது என்றார்கள். இப்போது தூளாகியிருக்கிறது. இது நாச வேலையா அல்லது எதிர்பாராது ஏற்பட்ட விபத்தா என்பது தெரியவில்லை. அரசு இது குறித்து மேலும் விசாரித்ததா என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும். நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதுடன், இறந்தவர்கள் குடும்பத்திற்கெல்லாம் ரூபாய் 5 இலட்சமும், மிகப் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறவர்களுக்கு 3 இலட்சம் ரூபாயும், இறந்தவர்களுடைய வீட்டிலே இருக்கிற வாரிசுகளுக்கு உடனடியாக வேலையும் தரவேண்டுமென்று இந்த அரசை நான் இதன்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

*பிற்பகல் 4-35*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16-8-2001 ஆம் நாளன்று எங்களுடைய காட்பாடி பகுதியிலே இருக்கக்கூடிய அந்த வெடிமருந்துத் தொழிற்சாலையில் 24 பேர் மாண்டு போனார்கள் என்கிற செய்தி உண்மை இல்லாத ஒரு செய்தி. 25 பேர் மாண்டு போயிருக்கிறார்கள். அதிலே தலை இல்லாமல், கை இல்லாமல்





ஒரு முண்டம் அப்படியே unclaimed-ஆக Government Hospital-லில், எந்த உறவினரும் கேட்காமல் இருந்துகொண்டிருக்கிற ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதாவது, அரசுத் தரப்பில் சொல்லப்படக்கூடிய செய்தியின்படி, 24 பேர் மட்டும் மாண்டுவிட்டார்கள் என்று சொன்னால், ஒரு புதிய நபர் யாரோ அங்கே உள்ளே நுழைந்திருக்கிறார். அவர் workman கிடையாது. யாரும் அவரை claim செய்யவும் இல்லை. இப்படித் தலை இல்லாத ஒரு பிணம் அங்கே இருக்கிறது என்று சொன்னால், ஏதோ நாசவேலைதான் இதனுடைய அடிப்படை என்கிற சந்தேகம் நாட்டு மக்களுக்கு எழுந்திருக்கிறது.

இன்னும் ஒன்று. அங்கே காயம்பட்டு தப்பிப்போன ஒருவர் சித்தூர் போகிற வழியிலே Check-post-லே காயங்களோடு கைது செய்யப்பட்டு, பிறகு அவரும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். Injured கணக்கிலே அவரும் வரவில்லை. பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திரப் பிரதேசத்திலே நக்சலைட்டுகள் அதிகம். மறுநாள் அங்கே உள்ளாட்சித் தேர்தல். இப்படி உள்ளாட்சித் தேர்தல் இருக்கிற சூழ்நிலையிலே இது நடந்துள்ளது. அதேபோல் காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலையை, பொதுவாக மக்கள் பார்வையிட அனுமதிப்பது கிடையாது. ஆனால், சுதந்திர தினத்தன்று மட்டும் அவர்கள் அங்கே அனுமதிக்கப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆகவே, 15 ஆம் தேதி பார்வையிடுவதற்கு Visitors allow செய்யப்பட்ட நேரத்தில், யாரோ சில பேர் அங்கே உள்ளே ஊடுருவி இருக்கலாம் என்கிற சந்தேகமும் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையை அரசும் முழுமையாக ஆராய்ந்ததா? அதே நேரத்திலே, இங்கே அவை நடந்துகொண்டிருக்கிறபோது அங்கே இருக்கக்கூடிய அலுவலர்கள் தாறுமாறாக ஒரு statement-ஐ தினந்தோறும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்போதுமே அவை நடக்கிறபோது அவையினுடைய உரிமையைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்களோ அல்லது முதலமைச்சர் அவர்களோ அல்லது அரசோ இந்த அவைக்குத்தான் அப்படிப்பட்ட சங்கதிகளைத் தெரிவிக்க வேண்டும் என்கிற ஒரு மரபு கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. அது தங்களுக்கும் தெரியும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இதிலே நாசவேலை இருக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டும். Safety measures சரியாக அவர்களால் கடைப்பிடிக்கப்படுவதில்லை. Temporary workers 14 பேர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இது சிறப்புச் சொற்பொழிவல்ல. கருத்துகளை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Temporary workers–ஐ இவ்வளவு sensitive spot–லே கொண்டுபோய் வேலைக்கு அமர்த்தக் கூடாது என்கிற விதிமுறையை இனியாவது கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 50 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள், நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அது போதாது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்கள் ஒரு குடும்பத்திற்கு குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். தற்காலிக வேலையாட்களாக இருந்தால்கூட, அவர்களுக்கு Insurance கிடைக்கும்போது, வெறும் 75 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். அரசு கொடுக்கக்கூடிய 50 ஆயிரம் ரூபாயைச் சேர்த்தால் 1–1/4 இலட்சம் ரூபாய்தான் அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால், தற்காலிகத் தொழிலாளர்களுக்குக்கூட குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாயை நீங்கள் அரசு சார்பாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இனி இப்படிப்பட்ட விபத்துகள் நடக்காமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? அதேபோல, இதனுடைய உண்மை என்ன என்பதை இந்த அவைக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று நம்முடைய அவைத் தலைவர் மூலமாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடியில் வெடிமருந்துத் தொழிற்சாலையிலே ஏற்பட்டிருக்கிற விபத்து என்பது சாதாரண விபத்தல்ல என்பது வரப்பெற்றிருக்கும் விவரங்களிலேயிருந்து அனைவருக்கும் தெரியும். ஆனால், அந்த அதிகாரிகள் விடுகிற statement–ஐப் பார்த்தால், safety measures சரிவர அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டதா என்பதைப் பற்றி எந்த விளக்கமும் அவர்களுடைய பக்கத்திலேயிருந்து வரவில்லை. இன்றைக்குக்கூட அந்த ஸ்தாபனத்தினுடைய பொறுப்பிலே இருக்கிற நிர்வாகியால் கொடுக்கப்பட்டதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தியிலேகூட இன்னும் அதற்கான காரணம் கண்டுபிடிக்கப்





படவில்லை என்பது தெரிகிறது. சரியான காரணங்களைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு விசாரணை –enquiry– நடத்தப்பட்டு அதன் வழியாகத்தான் உண்மை கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்ற நிலை இருக்கிறது என்று சொன்னால், “Something is rotten in Denmark” என்று சொல்வதுபோல் அந்த ஸ்தாபனத்தைப் பொறுத்தளவிலே மிகப் பெரிய கோளாறு இருக்கிறது என்றுதான் என்னைப் போன்றவர்களுக்குத் தெரிய வந்திருக்கிறது. ஆகவே, நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அதிகாரிகளுடைய அறிக்கையிலேகூட அவர்களுக்குச் செல்லவேண்டிய கிராஜுவிட்டியிலேயிருந்து அட்வான்சாகக் கொஞ்சம் பணம் கொடுக்கப்படுகிறது என்ற ஒரு தகவல் வந்திருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலேயிருந்து தலா 50 ஆயிரம் ரூபாய், இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 24 குடும்பங்கள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட அந்த 24 குடும்பங்களுக்குத் தகுந்த நிவாரணம் என்று சொல்லக்கூடிய நேரத்திலே கொஞ்சம் ரூபாய் கொடுப்பது என்பது மட்டும் பிரச்சினையல்ல. அந்தக் குடும்பத்தாருடைய வாரிசுகளுக்குத் தகுந்த வேலையை, அந்தத் தொழிற்சாலையிலே இல்லாவிட்டாலும்கூட, வேறு தொழிற்சாலைகளிலேயாவது கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, அந்தக் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4–40*

இப்படிப்பட்ட விபத்துகள் தமிழகத்திலே மேலும் ஏற்படாமல் இருக்கக்கூடிய அளவுக்கு, Labour Department–ம், Industries Department–ம் பாதுகாப்பு நடவடிக்கைகள் –Safety measures– எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அவர்கள் பெரிய வார விழாக்களெல்லாம் நடத்துகிறார்கள். ஆனால் அவர்களுடைய வார விழாக்கள் எல்லாம் ஒரு பக்கத்திலே நடந்துகொண்டிருக்கின்றன. இந்த மாதிரி விபத்துகளும் மறு பக்கத்திலே நடக்கின்றன. அதைத் தடுப்பதற்கு எந்த ஏற்பாடுகளும் அந்த Industry–லே எடுக்கவில்லை என்பது மிக துரதிருஷ்டவசமான ஒன்று. அதைத் தடுப்பதற்கு இந்தத் துறையால் என்ன நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி அரசு வெடிமருந்துத் தொழிற்சாலையிலே நடைபெற்ற விபத்தினுடைய தன்மைகளைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்து வைத்தார்கள். அங்கே வெடிமருந்துகள் வெளியே கடத்திச் செல்லப்படுகின்றன என்றும், அரசு நிறுவனங்களுக்கு மட்டும் அல்லாமல், தனியாருக்கும் அதிக விலையிலே வெடிமருந்துகள் விற்கப்பட்டு வந்தன என்றும், வெடிமருந்து ஏற்றிச் சென்ற பல லாரிகள் மாயமாக மறைந்துவிடுவதாகவும், அவற்றின்மீது அந்த நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் பல்வேறு குற்றச்சாட்டுகளை நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். மேலும், தமிழ்நாட்டிலே நடந்த பல்வேறு வெடிகுண்டுச் சம்பவங்களிலும் அங்குள்ள வெடிமருந்துதான் பயன்படுத்தப்பட்டிருக்குமோ என்ற சந்தேகமும் இப்போது நாட்டு மக்கள் மத்தியிலே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பணத்திற்காக விடுதலைப் புலிகளுக்கும் மற்றும் ஆந்திராவிலுள்ள நக்சலைட்டுகளுக்கும் இங்கிருந்து வெடிமருந்து சென்றிருக்குமோ என்ற சந்தேகமும் இருக்கிறது. எனவே, நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், இந்த வெடிமருந்துத் தொழிற்சாலையிலே நடைபெற்ற விபத்து எப்படி நடந்தது என்பதனைக் கண்டறிவதற்காக C.B.I. விசாரணையை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அங்கே பாதிக்கப்பட்டவர்களுக்கும், மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 50,000 ரூபாய் வழங்குவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்களெல்லாம், 5 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். ஒருவேளை 5 இலட்சம் ரூபாய் வழங்க முடியாவிட்டாலும்கூட குறைந்தபட்சம் 3 இலட்சம் ரூபாயாவது இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு வழங்க வேண்டும். மேலும், காயமடைந்தவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வெடிமருந்துச் சம்பவம் பற்றிய விளக்கத்தைத் தரவேண்டுமென்று கேட்டு, விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 16-08-2001 அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி அருகே இருக்கக்கூடிய அரசு வெடிமருந்துத் தொழிற்சாலையிலே யாரும் எதிர்பாராத விதத்திலே மிகப் பெரிய விபத்து ஏற்பட்டு, 24 தொழிலாளர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். அதேபோல, இதுவரையிலும் அடையாளம் தெரியாத நபர் ஒருவரின் உடல் முழுவதும் கருகி, துண்டு, துண்டாகி அடையாளம் காண முடியாத நிலையிலே இருக்கிறார் என்று சொன்னால், அது எல்லோருக்கும் சந்தேகத்தைக் கிளப்பக்கூடியதான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, இந்த விபத்தினுடைய தன்மை எப்படிப்பட்டது, சதியா அல்லது இயல்பான விபத்தா, எதிர்பாராத விபத்தா என்பதை உணர்கின்ற வகையிலே, நாட்டு மக்களுக்குச் சொல்கின்ற வகையிலே, அரசு அதை ஆராய்ந்தறிய வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

அதே நேரத்திலே, வேலைக்குச் சென்ற அந்தத் தொழிலாளி வீடு திரும்பாமல் உயிரிழந்த நேரத்திலே அந்தக் குடும்பம் எவ்வளவு துயருற்றிருக்கும் என்பதையெல்லாம் எண்ணி, அந்த நேரத்திலே எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், இந்த நாட்டு மக்களெல்லாம், இந்தத் துயரமான சம்பவத்தைக் கேட்டு மிகவும் வேதனைப்பட்டார்கள். ஆகவே, ஈடுசெய்ய முடியாத அந்தக் குடும்பங்களுடைய இழப்பிற்கு 5 இலட்சம் ரூபாய் என்பது குறைவாக இருக்கும் என்று கருதினாலும்கூட, அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்து, குறைந்தது 5 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். இன்னும் 3 பேர் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மருத்துவ மனையிலே தீவிர சிகிச்சைப் பிரிவிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களுடைய சிகிச்சைக்குண்டான செலவு முழுவதையும் அரசே ஏற்று, அவர்களுக்கும் 3 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைக்கிறேன்.

அதே நேரத்திலே, அந்த உயிரிழந்த தொழிலாளர்களுடைய குடும்பங்களிலே வாரிசுக்கு வேலை என்ற அடிப்படையிலே, அந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி அல்லது வேறு நிறுவனத்திலேயாவது அந்தக் குடும்பத்திலேயுள்ள படித்தவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப அரசு வேலை வழங்க முன்வர வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் வைக்கிறேன். இப்படி அந்த விபத்தினுடைய தன்மையை ஆராய்கின்ற அதே நேரத்திலே அதிகாரிகள் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளிலே விபத்துக்கு எச்சரிக்கையோடு இருக்க வேண்டியவர்கள் அங்கே ஏன் எச்சரிக்கையாக இருக்கவில்லை என்று அறிய ஒரு விசாரணைக் குழு

அமைத்து, அத்தகைய அதிகாரிகளுக்கு அச்சுறுத்தலையும், எச்சரிக்கையையும், செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்து, இந்த அளவிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இதைத் துரித நடவடிக்கையாக, அவசர நிகழ்வாக அரசு கருத வேண்டுமென்றும் கேட்டு, அமைகிறேன்.

*பிற்பகல் 4-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 16-8-2001 அன்று காட்பாடி அரசு வெடிமருந்துத் தொழிற்சாலையிலே ஏற்பட்ட விபத்தின் காரணமாக 24 பேர் உயிரிழந்தார்கள் என்கின்ற செய்தி, தமிழக மக்களைத் துயரத்தில் ஆழ்த்துகின்ற ஒரு செய்தியாக அமைந்திருக்கிறது. இங்கு நமது உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல, இந்தத் தொழிற்சாலையிலே பல்வேறு முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அந்தத் தவறுகளின் காரணமாக ஒரு நாளைக்கு இந்தத் தொழிற்சாலையில் இத்தகைய விபத்து நேரிடுவதற்குக்கூட வாய்ப்பிருக்கிறது என்பதை முன்னாள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் இங்கு குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், இப்போது அவர் அந்த இயக்கத்திலே இல்லை. அதற்கு அவர் என்ன சொல்லப் போகின்றார் என்கின்ற கேள்வியை 17-8-2001 ஆம் நாள் 'தினமலர்' பத்திரிகையிலே குறிப்பிட்டிருந்தார்கள். எனவே, இந்த நிகழ்வு என்பது, இந்த முறைகேடுகளால் அந்தத் தொழிற்சாலைக்கு பல நாட்களாக ஒரு ஆபத்து இருந்திருக்கிறது என்பதை முன்பே குறிப்பிட்டிருக்கின்ற ஒரு நிலை இருந்திருக்கிறது. ஆகவே, அன்றிலிருந்து இன்றைய வரைக்கும் கவனக் குறைவின் காரணமாக, அதைச் சரியாகக் கவனிக்கவில்லை என்கின்ற நிலையின் மூலமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்த விபத்திலே உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நமது முதலமைச்சர் அவர்கள் 50 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடாக வழங்கியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்தாலும்கூட, இது போதாது என்கின்ற நிலையில் மற்ற அனைத்து உறுப்பினர்களும் குறிப்பிட்டதுபோல, நானும் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அவர்கள் குடும்பத்திற்கு ஏதாவது அதிகப்படியான நிதியை அரசு தர வேண்டும். அதுபோல, அவர்களுக்கு வேலைவாய்ப்பு போன்றவைகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலையிலே ஏற்பட்ட கோரமான சம்பவம் அனைவரையுமே மிக வருத்தத்திலே ஆழ்த்தியிருக்கிறது. 25 பேர் மடிந்திருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தைப் பற்றி பல்வேறுவிதமாக, பல்வேறு கோணங்களில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, இந்த வெடிமருந்துத் தொழிற்சாலைக்குரிய போதிய பாதுகாப்பு வசதிகளோடு அந்த நிர்வாகம் செயல்படவில்லையோ என்ற அச்சத்தை இது ஏற்படுத்துவதற்கு வாய்ப்பிருப்பதாக நான் அறிகிறேன். இந்தத் தொழிற்சாலை எவ்வளவு பாதுகாப்போடு, எச்சரிக்கையோடு இருக்க வேண்டுமோ, அதற்குரிய எச்சரிக்கையோடும், பாதுகாப்போடும் இல்லையோ என்ற சந்தேகம் எழுகிறது. குறிப்பாக, அந்த நிர்வாகி அளித்திருக்கிற அறிக்கையின் மூலமாகவும், வேறு சில செய்திகள் மூலமாகவும் பார்க்கிறபோது அந்த அச்சம் ஏற்படுகிறது.

நமது தமிழகத்திலே பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றன. வெடி குண்டுக் கலாச்சாரச் சம்பவங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. பல சம்பவங்கள் வருகின்றபோது காட்பாடியை இணைத்துப் பேசுகின்ற ஒரு நிலைமையும் இருந்தது உண்டு. மிகப் பெரிய தலைவர்கள் மரணமுற்ற செய்திகள் வருகிறபோதுகூட, அங்கேயிருந்து அந்த வெடிமருந்துப் பொருட்கள் கிடைத்திருக்கும் அல்லது கடத்தப்பட்டு இருக்கலாம் என்ற அச்சம் ஏற்படுவதற்கான சூழ்நிலைக்குள்ளான பகுதியாக காட்பாடி தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த நிர்வாக முறையிலே, அதிலே இருக்கக்கூடிய அந்தச் செயல்பாடுகளிலே அச்சமும், சந்தேகமும் தொடர்ந்து இருப்பதாகத் தான் நான் கருதுகிறேன். ஆகவே, இதைத் தீவிர விசாரணையின் மூலமாகக் கண்டறிந்து, அந்தத் தவறுகளுக்குரியவர்கள்மீது உரிய விசாரணை நடத்தி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, இதுபோன்ற தொழிற்சாலைகள் மிகக் கவனத்தோடு பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. இல்லை என்று சொன்னால், இன்னும் பல்வேறு சம்பவங்கள் நடப்பதற்கான வாய்ப்புகள்கூட இருக்கலாம். தீவிரவாதிகள், மற்றவர்கள்கூடப் பயன்படுத்துவதற்குரிய களமாக இது மாறிவிடக் கூடாது என்ற அந்த அச்சத்தின் காரணத்தினாலேதான் சொல்கிறேன். ஆகவே, இதன்மீது நமது அரசு

உரிய கவனம் செலுத்தி, விரைவான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வலியுறுத்திக் கேட்டு, இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் நிதி வழங்குவது என்பதுதான் பொருத்தமாக இருக்கும். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழில் துறை அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர் பெருமக்களும் கலந்து பேசி, அந்தக் குடும்பங்களுக்குரிய நிதியை வழங்குவதோடு, அந்தக் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு உரிய வேலை வாய்ப்புக்கான உத்தரவாதத்தினைப் பெற்றுத் தருவதற்கான முயற்சியையும் மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருத்தாகச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

*பிற்பகல் 4–50*

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம், நைட்ரோ–கிளிசரின் வெடிமருந்துகள், கலவை வெடிமருந்து, வெடி ஊக்கி மற்றும் வெடித் திரி ஆகியவைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. 16–8–2001 அன்று காலை 9–15 மணி அளவில் இந்நிறுவனத்தின் காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலையில் வெடிமருந்துத் திரிகள் இணைக்கும் பிரிவில் No. D–302 கட்டடத்தில் இவ்வெடி விபத்து ஏற்பட்டது. அச்சமயம் இப்பிரிவில் 12 தற்காலிக ஊழியர்கள் உட்பட 24 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். இப்பிரிவின் அருகிலுள்ள கட்டடமான No. D–301–ல் 3 பெண் பணியாளர்கள் வேலை பார்த்து வந்தனர். இந்த வெடிவிபத்தின் காரணமாக அங்கும் சேதம் ஏற்பட்டது. வெடிவிபத்துச் செய்தியைக் கேட்டவுடன், நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறைத் துணைத் தலைவர், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர், மாவட்டத் தீயணைப்பு அலுவலர், மாவட்ட மருத்துவ அதிகாரி, வெடிமருந்துக் கட்டுப்பாட்டு துணை அலுவலர் மற்றும் தமிழ்நாடு வெடிமருந்து நிறுவனத்தின் முக்கிய அதிகாரிகள் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து மீட்புப் பணியைக் கண்காணித்தனர்.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கேற்ப, நானும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை





அமைச்சர் அண்ணன் பாண்டுரங்கன் அவர்களும் அன்றையதினமே விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டோம். வெடிவிபத்துக்குள்ளான கட்டடத்தின் இடிபாடுகளுக்கிடையில் சிக்கியிருந்த 22 நபர்கள் இறந்துவிட்டனர். 2 பேர் உயிருடன் இருந்தனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அந்த 2 பணியாளர்களில் ஒருவர் 20–8–2001 அன்று இறந்துவிட்டார். அருகிலுள்ள கட்டடத்தில் பணியாற்றிய 3 பெண்களில் ஒருவர் இறந்துவிட்டார். எஞ்சிய இருவரும் வேலூர் C.M.C. மருத்துவமனையின் அவசரப் பிரிவில் சேர்க்கப்பட்டு, மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதுவரையில் 24 பணியாளர்கள் இறந்துவிட்டனர். இடிபாடுகளுக்கிடையே சிக்கியிருந்த உடல்கள் மீட்கப்பட்டு, வேலூரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு 17–8–2001 அன்று 3–30 மணி அளவில் அனுப்பப்பட்டன. வேலூர் வெடிமருந்து அலுவலக வெடிமருந்து நிபுணர் குழு உதவியுடன், வெடிக்காத வெடி ஊக்கிகள் சேகரிக்கப்பட்டு, செயலிழக்கச் செய்யப்பட்டுவிட்டன. கனரக மண்வாரி இயந்திரச் சாதனங்களின் உதவியால் இடிபாடுகளை அகற்றும் வேலை, மாவட்ட ஆட்சியர், காவல் துறைத் தலைவர், காவல் துறை துணைத் தலைவர், மாவட்டத் தீயணைப்பு அலுவலர், தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர், வெடிமருந்துக் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரி மற்றும் துணை அதிகாரி ஆகியோரால் கண்காணிக்கப்பட்டு, முடிவடைந்துவிட்டது.

இறந்த பணியாளர்களின் ஈமச் சடங்குச் செலவுக்காக, அப்பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குத் தலா ரூ.5,000 வீதமும், வேலூர் C.M.C. மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள பணியாளர்களுக்குத் தலா ரூ.2,000 வீதமும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இறந்த ஊழியர்களின் ஒவ்வொருவர் குடும்பத்திற்கும் ரூபாய் 50,000 வீதமும், காயமுற்றவர்களுக்குத் தலா ரூ.15,000 வீதமும் மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது. நிரந்தர மற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு, காப்பீட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு கிடைக்கவுள்ளது:

நிரந்தர ஊழியர்கள் – தனி நபர் விபத்து குழுக் காப்பீட்டுத் திட்டம் மூலம் ரூ.2–50 இலட்சம், பணியாளர்கள் காப்பீட்டுத் தொகையுடன் இணைந்த வைப்புத் தொகை மூலம் ரூ.1.24 இலட்சம், ஆக மொத்தம் ரூ.3–74 இலட்சம் நிரந்தரப் பணியாளர்களுக்கு – முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் தொகையைத் தவிர – கிடைக்கவிருக்கிறது.

[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2001 ஆகஸ்ட் 23

தற்காலிகப் பணியாளர்கள் – தனி நபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் தற்காலிகப் பணியாளர்களின் குடும்பத்திற்கு 75,000 ரூபாய் அளிக்கப்படும். பணியாளர்கள் காப்பீட்டுத் தொகையுடன் கூடிய வைப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஈட்டுத் தொகையை 18–8–2001 அன்று 'TEL' நிறுவனத்திடம் அளித்துவிட்டது. சட்டபூர்வமான வாரிசுதாரர்களின் விவரங்கள் பெற்று, பிறகு இத்தொகை மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் அளிக்கப்படும். மற்றொரு காப்புறுதித் திட்டத்தின்கீழ் அளிக்க வேண்டிய தொகையும் விரைவில் அளிக்கப்படும்.

சேம நல நிதியிலிருந்து பணிக்கொடை மற்றும் ஊழியர்களுக்குச் சேர வேண்டிய தொகைக்காக, இடைக்கால நிவாரணமாக ரூ.10,000 அளிக்கப்பட்டுள்ளது. சேம நல நிதி மற்றும் இறந்த ஊழியர்களுக்குச் சேர வேண்டிய இதர பணப் பயன்கள் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு விரைவில் அளிக்கப்படும்.

கட்டடங்கள், இயந்திரங்கள் போன்றவைகளுக்குப் போதுமான காப்பீட்டுத் தொகை பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. தீ மற்றும் அது சம்பந்தமான இடர்ப்பாடுகளிலிருந்து நகரும் சொத்துக்களைக் அகற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இணைத் தலைமை வெடிமருந்துக் கட்டுப்பாட்டு அலுவலர், மற்றும் தலைமை வெடிமருந்துக் கட்டுப்பாட்டு அலுவலர், விபத்து நடந்த கட்டடத்தை ஆய்வு செய்து முடித்துவிட்டனர். தலைமைக் கட்டுப்பாட்டு அலுவலரின் இசைவு பெறப்பட்டு, நைட்ரோ–கிளிசரின் வெடிமருந்துகள், வெடி ஊக்கிகள், வெடித் திரிகள் மற்றும் கலவை வெடிமருந்துப் பிரிவுகளில், வெடி விபத்து நடந்த கட்டடத்தைத் தவிர, இதர இடங்களில் தேவையான அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குட்பட்டு 23–8–2001 முதல் உற்பத்தி தொடங்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

*பிற்பகல் 4–55*

காப்பீட்டு மேற்பார்வையாளர் சேதாரத்தை மதிப்பிட்டு, அதற்கான தொகையை விடுவிப்பதற்கு இன்னும் ஒரு வாரத்திற்குள் அவர்களுடைய பரிந்துரையை அளிக்க உள்ளார்கள். வெடிமருந்துக் கட்டுப்பாட்டு அலுவலரின் அறிவுரையின்படி காப்பீட்டு மேற்பார்வையாளரின் ஆய்வுக்குப் பிறகு, முடிக்கப்படாமல் உள்ள வெடிமருந்துப் பொருட்கள் மற்றும் பாதி முடிக்கப்பட்ட பொருட்களை எரித்து செயலிழக்கச் செய்யும் பணி முடிவடைந்துவிட்டது. விபத்து குறித்த காரணங்கள், எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாநில அரசு, 'TEL' நிர்வாகம் மற்றும் வெடிமருந்துக் கட்டுப்பாட்டு அலுவலர் ஆகியோரால் விசாரணை



2001 ஆகஸ்ட் 23] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

நடைபெற்று வருகிறது. விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் எதிர்காலத்தில் இதுபோல் விபத்துகள் நிகழாவண்ணம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல, Check-post–ல் எந்த நபரும் காயத்துடன் பிடிபடவில்லை என்று வேலூர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் வேறு ஏதாவது சொல்ல வேண்டுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெடிமருந்துகள் எல்லாம் தவறுதலாக விற்கப்படுகின்றன என்ற கருத்தை இங்கே உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வெளிச் சந்தையில் மத்திய அரசு உரிமம் வழங்கியுள்ள டீலர்களுக்கு மட்டும்தான் விற்பனை செய்யப்படுகிறது. ஆர்டர் படிவம் 37–ஐப் பெற்றபின் தொழிற்சாலை வாசல் விற்பனை முறையில் விற்கப்படுகிறது. ஒவ்வொரு டீலரிடமிருந்தும் முத்திரைத் தாள்களில் அவர்கள் விற்பனை செய்ய வேண்டிய முறை பற்றியும், விற்கும்போது எல்லாவிதமான விதிமுறைகளையும் கடைப்பிடிக்கவும் அத்தாட்சிகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. தினந்தோறும் வெடிமருந்து வாங்கிய டீலரின் பெயர், அவருடைய உரிம எண், வாங்கிய அளவு, கொண்டு செல்லும் லாரியின் பதிவு எண் போன்ற அனைத்து விவரங்களும் வேலூர் மாவட்ட ஆட்சியர், காவல் துறைக் கண்காணிப்பாளர், கண்காணிப்புத் துறை மற்றும் வெடிமருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோருக்குத் தகவல் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாத முடிவிலும் வெடிமருந்து வாங்கியவர்களின் பட்டியல், அவர்களின் உரிம எண், விநியோகித்த தேதி ஆகிய அனைத்து விவரங்களும் காட்பாடியிலுள்ள வெடிமருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி, சென்னையில் உள்ள இணைத் தலைமை வெடிமருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி, நாக்பூரிலுள்ள தலைமை வெடிமருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இங்கே பேசிய உறுப்பினர்கள் லாரிகள் மாயமாக மறைந்துவிட்டன என்று சொன்னார்கள். இதுவரையில் வெடிமருந்து ஏற்றிச்சென்ற எந்த லாரியும் காணாமல் போனதாக ரிப்போர்ட் எதுவும் கிடையாது என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள்,

[ திரு. ஆர். வைத்திலிங்கம்] [2001 ஆகஸ்ட் 23

ஓர் அடையாளம் தெரியாத சடலம் அங்கே இருக்கிறது என்று சொன்னார்கள். அடையாளம் தெரியாத அளவுக்குத்தான் அங்கே விபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இறந்தது 24 பேர்தான். அதற்கு மேல் யாரும் இறக்கவில்லை என்ற தகவல் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை. (குறுக்கீடு) அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். முடிந்துவிட்டது. அதற்கு மேலும் விவாதம் கிடையாது.

## 6. விதி 110-ன்கீழ் அறிக்கை

### நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் நெல், அரிசி இருப்பு குறித்து 'தினமலர்' நாளிதழ் செய்திகளை மறுத்து, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் கீழ்க்கண்ட அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்:

23-8-2001 ஆம் நாளிட்ட 'தினமலர்' நாளிதழில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சார்ந்த பல்வேறு கிடங்குகளில் இருப்பிலுள்ள நெல், அரிசி சம்பந்தப்பட்ட செய்திகளுக்கு கீழ்க்கண்ட விளக்கங்களை அரசு இவ்வறிக்கையின் வாயிலாகத் தெரிவிக்கிறது:

"தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையில், நெல் மற்றும் அரிசி, அதன் சொந்தக் கிடங்குகளில் (Own Godowns) 6.25 இலட்சம் டன் கொள்ளளவிலும், வாடகைக் கிடங்குகளில் (Hired Godowns) 2.25 இலட்சம் டன் கொள்ளளவிலும் சேமித்து வைக்கப்பட்டு, அதன்பின் மத்திய, மாநில சேமிப்புக் கிடங்கு நிறுவனங்களுக்குச் சொந்தமான கிடங்குகளில் 1.71 இலட்சம் டன் கொள்ளளவுக்குச் சேமிக்கப்படுகின்றன.



2001 ஆகஸ்ட் 23] [திரு. ப. தனபால்]

மேற்கண்ட கிடங்குகளில், நெல், அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு வகைகள், காலி சாக்குகள் முதலானவை சேமித்து வைக்கப்படுகின்றன. இதற்கு மேற்பட்டு நெல் வரத்தைப் பொறுத்து, திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளில் (Cap Storage) நெல் மூட்டைகள் தக்க பாதுகாப்போடும், விஞ்ஞான முறையோடும் கீழ்க்கண்டவாறு சேமித்து வைக்கப்படுகின்றன.

*பிற்பகல் 5-00*

இடம் தேர்வு செய்யும்போது கடினமான தரை அமைப்பு உள்ள இடங்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு, THA 10 சதவீதம் பொடி தூவப்பட்டு கரையான் அரிக்காமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளப்படுகிறது. அடியில் சதுரக் கற்கள் பரப்பி, அதன்மீது கனமான சவுக்குக் கட்டைகளை குறுக்கும், நெடுக்குமாக அமைத்து, 120 டன் நெல் அழுத்தத்தைத் தாங்கும் அளவிற்கு, கட்டாயங்கள் அமைக்கப்படுகின்றன. இதன்மீது சாக்கு படுதாக்கள் விரிக்கப்பட்டு, அதன்மீது நெல் மூட்டைகள் பாதுகாப்பாக அடுக்கப்படுகின்றன. அம்மாதிரி அடுக்கப்பட்ட நெல் மூட்டைகள், 12 மூட்டைகள் உயரத்திற்குமேல், கூம்பு வடிவில் நெல் மூட்டைகள் பரப்பப்பட்டு, மழைத் தண்ணீர் தேங்காமல் இருக்குமாறு உறுதி செய்யப்படுகிறது.

அதன்மீது கறுப்பு பாலிதீன் உறைகளால் மூடப்பட்டு, காற்றில் உறைகள் கிழியாவண்ணம் நைலான் கயிறுகளால் குறுக்கும், நெடுக்குமாகக் கட்டப்படுகிறது. ஈரப்பதத்திற்கு ஏற்ப, கறுப்பு பாலிதீன் உறைகள் நீக்கப்பட்டு, காலை முதல் மாலை வரை நெல் மூட்டைகள் காற்றோட்டம் செய்யப்படுகின்றன. 15 தினங்களுக்கு ஒரு முறை நெல்லின் தரம் சோதிக்கப்பட்டு, பூச்சிகளின் தாக்கத்தினைப் பொறுத்து, மருந்துகள் தெளித்தோ, புகையூட்டம் செய்தோ பாதுகாக்கப்படுகிறது. பூச்சிகளின் தாக்கம் அதிகமாக இருக்கும்போது, புகையூட்டம் செய்யப்பட்டு, பூச்சிகள் இல்லாத நிலைக்குக் கொண்டு வரப்படுகிறது. எலிகளைக் கட்டுப்படுத்த எலி மருந்து பயன்படுத்தப்பட்டு, உடனுக்குடன் சுத்தம் செய்யப்படுகிறது. நெல்லிலும், அரிசியிலும் மருந்து கலப்பதற்கு வாய்ப்பில்லை. கடந்த குறுவை 2000 பருவத்தில், 5.50 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அவையனைத்தும் கொள்முதல் செய்யப்பட்ட தேதியின் அடிப்படையில், அரைக்கும்போது முதலில் கொள்முதல் செய்த நெல் முதலிலும், பின்னால் கொள்முதல் செய்யப்பட்டவை பின்னாலும் முன்னுரிமை அடிப்படையில் அரவை செய்யப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன. டிசம்பர் 16 ஆம் தேதிக்குப்பின் கொள்முதல்

[திரு. ப. தனபால்] [2001 ஆகஸ்ட் 23

செய்யப்பட்ட 19.74 இலட்சம் டன் -- சம்பா 2001 நெல் – நெல்லில், இதுவரை 10.01 இலட்சம் டன் நெல் அளவிற்கு அரவை செய்யப்பட்டுவிட்டது. அதுபோக மீதம் உள்ள 9.73 இலட்சம் டன் இருப்பிலுள்ள நெல்லில், 1.73 இலட்சம் டன் நெல், கிடங்குகளில் விஞ்ஞான முறைப்படி வைக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 8.00 இலட்சம் டன் நெல் திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளின் மூலம் மாநிலம் முழுவதும் 102 இடங்களில் தக்க பாதுகாப்போடும், விஞ்ஞான முறைப்படியும் சேமிப்பில் உள்ளன.

மேற்படி நெல் கொள்முதல் செய்யப்பட்ட தேதியின் அடிப்படையில் அரைக்கும்போது, முதலில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் முதலிலும், பின்னர் கொள்முதல் செய்யப்பட்ட நெல் பின்னாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான அரவை ஆலைகள் மூலமும், தனியார் முகவர்கள் மூலமாகவும் மாதம் ஒன்றிற்கு சுமார் 1.75 இலட்சம் டன் நெல் அளவிற்கு அரவை செய்யப்பட்டு வருகிறது. இதே நிலை நீடித்தால், டிசம்பர் 2001–க்குள், இருப்பிலுள்ள நெல் அனைத்தும் அரவை செய்து முடிக்கப்படும். எனவே, நீண்ட கால சேமிப்பால் நெல் கெட்டுவிடும் என்ற சந்தேகத்திற்கு வாய்ப்பில்லை. அரவை செய்த அரிசி தரமான நிலையில் பெறப்பட்டு, விஞ்ஞான முறைப்படி கிடங்குகளில் பாதுகாப்பாக இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. அரிசியை எக்காரணத்தைக் கொண்டும், திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு வைப்பதில்லை.

இம்மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக்கீழ், வறுமைக்கோட்டிற்கு மேல் என்ற பாகுபாடின்றி, விருப்பத்தின் அடிப்படையில் அரிசி பெறும் குடும்பங்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ வரை, அரிசி கிலோ ரூ.3.50 என்ற விலையில் விநியோகிக்கப்படுகிறது. நமது மாநிலத்திலுள்ள மொத்தக் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை சுமார் 1.61 கோடியாகும். இவற்றில் 1.36 கோடி குடும்பங்கள் மாதந்தோறும் அரிசி பெறுகிறார்கள். மற்றவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் அரிசிக்குப் பதிலாக கூடுதல் சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய் பெறுகிறார்கள். மாதந்தோறும் இந்த அட்டைதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பெறும் அரிசி ஒதுக்கீடு 2.64 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். ஆனால், மாதந்தோறும் குடும்ப அட்டைதாரர்களால் வாங்கப்படும் அரிசியின் மொத்த அளவு 1.80 இலட்சம் டன்களேயாகும்.



2001 ஆகஸ்ட் 23] [திரு. ப. தனபால்]

இந்த அரசு பொறுப்பேற்றபின் மாநிலம் முழுவதும் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் கைவசம் இருக்கும் அரிசியின் தரத்தை ஆழ்ந்து ஆய்வுசெய்து, பொது விநியோகத்திற்கு ஏற்றதல்ல என்று கருதப்பட்ட 1.25 இலட்சம் டன் அரிசியை பொது விநியோகத்திற்குப் பயன்படுத்த வேண்டாம் என்று ஆணையிட்டுள்ளது. எனவே, பொது விநியோகக் கடைகளில் தற்போது மிக உயர்ந்த தரமான அரிசியே வழங்கப்பட்டு வருகிறது.

மாதந்தோறும் நியாய விலைக் கடைகளுக்கு, தேவைக்கேற்ப 100 சதவிகிதம் அரிசி ஒதுக்கீடு செய்தபோதிலும், சுமார் 75 முதல் 80 சதவிகிதம் வரைதான் பொது மக்களால் இந்த அரிசி வாங்கப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பட்டினிச் சாவு எதுவும் இல்லை. மேலும், முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் பயன்பெறுபவர்களுக்கு, மதிய உணவு சாப்பிட்டால் மாதம் ஒன்றுக்கு 2 கிலோ அரிசியும், மதிய உணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 4 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்படுகிறது.

*பிற்பகல் 5–05*

சிவப்பு நிறமுடைய டி.கே.எம்.9 ரக அரிசியை மாநிலத்தில் உள்ள மக்கள் விரும்பாததால், தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இருப்பிலுள்ள சுமார் 55,000 டன் டி.கே.எம். 9 ரக அரிசியை வெளிச்சந்தையில் விற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ரக நெல்லை மீண்டும் மீண்டும் கொள்முதல் செய்வதினால், அரசுக்கு ஏற்படும் இழப்பைக் கருத்தில்கொண்டு இந்த ரக நெல் மற்றும் அரிசியை வெளி மாநிலங்களுக்கு லெவி இல்லாமல் எடுத்துச் செல்ல அரசு அனுமதி அளித்துள்ளது. எனவே, பத்திரிகைச் செய்திகளில் வெளியானதைப் போல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக். கிடங்குகள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களில் இருக்கும் இருப்பில் உள்ள நெல் மற்றும் அரிசி மக்கி, மண்ணாகிப் போகும் என்ற அபாயம் எதுவும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் 35 இலட்சம் நெல் மூட்டைகளும், அதாவது 2.52 இலட்சம் டன் நெல்: திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் சேர்த்து 48 இலட்சம் நெல் மூட்டைகள், அதாவது, 3.36 இலட்சம் டன் நெல் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டுள்ளன என பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. ஆனால், தஞ்சை மாவட்டத்தில் 1.98 இலட்சம் டன் நெல்லும், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம்

மாவட்டங்களில் சேர்த்து 2.72 இலட்சம் டன் நெல்லும், திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே, பத்திரிகையில் வந்த செய்திகள் மிகையானதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் பொறுப்பேற்றுள்ள இந்தப் புதிய அரசு, இருப்பிலுள்ள நெல் மற்றும் அரிசியினைத் தக்க முறையில் பாதுகாத்து சேமித்து வைக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, பத்திரிகையில் வந்த செய்திகள் அனைத்தும் உண்மையல்ல என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். வணக்கம்.

## 3. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம், திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். நடப்பு நிதியாண்டில் எஞ்சியுள்ள ஆறு திங்களுக்கான குறுகிய கால நிதிநிலை அறிக்கையின்மீது உரையாற்றக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வரியதொரு வாய்ப்பை வழங்கிய மக்களுக்கும், விடுதலைச் சிறுத்தைகள் அங்கம் வகிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தமிழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பேரவையில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதோடு, தமிழக அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்தைத் தெரிவிப்பதற்கு முன்பு, நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையின்மீதான என்னுடைய கருத்துகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வெள்ளை அறிக்கை அரசின் நிதிநிலைக்கான நெருக்கடி நிலையை, நொடிப்பு நிலையை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது. அரசினுடைய நிதிநிலைமை நொடிப்பு நிலைக்கு உள்ளானதை குறிப்பிடுகிற காரணத்தினால், அந்த அறிக்கையை வெள்ளை அறிக்கை என்பதைவிட மஞ்சள் அறிக்கை என்று சொல்வதே



பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு தமிழக அரசின் நிதிநிலை, கஜானா நொடிப்பு நிலைக்கு ஆளாகியிருப்பதை அந்த அறிக்கை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. கேரள அரசு இதுபோல வெள்ளை அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதை முன்மாதிரியாகக் கொண்டு, தமிழக அரசும் வெள்ளை அறிக்கையை வெளியிட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த அறிக்கையின் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு தமிழக அரசு சொல்ல...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கையை முன்மாதிரியாகக் கொண்டு தமிழக அரசு இந்த வெள்ளை அறிக்கையை வெளியிடவில்லை. ஆளுநர் உரை இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்டபோதே, அப்போது நடந்த கூட்டத்தொடரின்போதே, வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று அறிவித்திருந்தோம். அதைத்தான் இப்போது செய்திருக்கிறோம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையோடு சேர்த்து வெள்ளை அறிக்கையும் வெளியிட்டிருப்பது வரவேற்கக்கூடியது. ஆகவே, வெள்ளை அறிக்கை என்று சொன்னாலே, இந்த மாமன்றத்திலே அதற்காக நேரம் ஒதுக்கி, விவாதம் செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. ஆகவே, இந்த வெள்ளை அறிக்கையின்மீது விவாதம் நடத்துவதற்கு காலம் ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய நிதிநிலை அறிக்கையோடு சேர்த்து இந்த வெள்ளை அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்திலேகூட, பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு ஒருவார காலத்திற்கு முன்பாக ஒரு Economic Survey Report வைக்கப்படுவதுண்டு.

சில சமயங்களில் பட்ஜெட்டுக்கு முன்னால் வேண்டுமானால் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வார்களே தவிர, நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் ஆரம்பித்ததற்குப் பிறகு, அதற்கென்று ஒரு தனி விவாதம் வராது. நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே இதுவும் வந்துவிடும். காரணம், இரண்டிலும் தனித்தனியாக ஒன்றுமில்லை. It is virtually a charge-sheet against the previous Government. வெள்ளை அறிக்கை என்பது அதுதான். அதிலேயிருந்துதான் நிதிநிலை அறிக்கை ஆரம்பமாகிறது என வைத்துக்கொள்ளலாம். இரண்டும் வேறுபட்டதல்ல. இரண்டு

விவாதங்களையும் ஒன்றாகத்தான் நடத்துவது முறை. அப்படித்தான் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் ஒன்றாகத்தான் பேசுகிறார்கள். இதோடு சேர்த்துத்தான் வைக்கப்பட்டு இருக்கிறது. ஒன்றாகத்தான் பேசுகிறார்கள். திரு. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** வெளியிடப்பட்டு இருக்கிற இந்த வெள்ளை அறிக்கை மூலம், தமிழக அரசு, தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறது என்கிற கேள்விகள் ஏராளமாக எழுகின்றன. மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் குறிப்பிட்டதுபோல, கடந்த கால திமுக. அரசின்மீது சுமத்தப்படுகிற குற்றப் பத்திரிகையாகவே அந்த வெள்ளை அறிக்கை வெளிப்படுகிறது என்று நான் கருதுகிறேன். அது மட்டுமே நோக்கமா அல்லது மேலும், மேலும் புதிய வரிகள், புதிய கட்டணங்கள் போன்றவை பொதுமக்களின்மீது திணிக்கப்படலாம் என்கின்ற மறைமுகமான அறிவிப்பை வெளிப்படுத்துகிறதா என்கிற கேள்வியும் எழுகிறது. ஏனென்றால், அந்த நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையில், பரவலாக எங்கும், 'அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளங்கள், ஓய்வூதியங்கள், பஞ்சப்படிகள், மானியங்கள், உதவித் தொகைகள், இவற்றின் மூலமாகக் கடந்த கால ஆட்சி இரட்டிப்புச் செலவுகளைச் செய்திருக்கிறது. வருவாய் வரவு சரிந்து, வருவாய்ச் செலவு மிகுந்து, வருவாய்ப் பற்றாக்குறை உயர்ந்து, நிதிநிலை நொடித்துப் போனதற்கு திராவிட முன்னேற்ற கழகத்தின் இரட்டிப்புச் செலவுகளே காரணம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது குற்றம் சாட்டுவதை இங்கே நான் குறிப்பிட விரும்பவில்லை. அதற்கு மாறாக, மறைமுகமாக, இனிவருங் காலங்களில் அரசுப் பணியாளர்களுக்கு, அல்லது ஏழையெளிய அடித்தட்டு மக்களுக்கு வழங்கப்படுகிற அந்தச் சலுகைகள், பயன்கள் ஒருவேளை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் நிறுத்தப்படுமோ என்கிற அச்சம் அந்த அறிக்கையிலிருந்து வெளிப்படுகிறது.

இன்னொரு இடத்திலே, அந்த அறிக்கை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. கடந்த திராவிட முன்னேற்ற கழக அரசு மைய அரசின் 5–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை...

*(செல்ஃபோன் மணி பேரவையில் ஒலித்தது.)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் செல்ஃபோனை உள்ளே கொண்டு வரக்கூடாது. கொண்டு வந்தாலும் off செய்து வைக்க வேண்டும்.

**திரு. இரா. திருமாவளவன்:** 5–வது ஊதியக் குழு பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றியதாலும், மைய அரசுப் பணியாளர்களுக்கு இணையான அகவிலைப் படியை மாநில அரசுப் பணியாளர்களுக்கு வழங்கியதனாலும், பொங்கல் பரிசு போன்ற இனாம்களை வழங்கியதனாலும், அரசினுடைய மொத்தச் செலவு அதிகரித்து, அதனுடைய சொந்த வரி வருவாயில் 94 சதவீதம் செலவாகியிருக்கிறது. அதனால் 6 சதவீதம் மட்டுமே திட்டச் செலவுகளுக்குப் பயன்படுத்த முடிகிறது. இந்த நிலையில் கடன் வாங்கி அரசை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லையென்கிற அறிவிப்பும் அந்த அறிக்கையிலே வெளிப்படுகிறது. இங்கே எனக்கு எழுகின்ற கேள்வி, இதன்மூலம் அரசுப் பணியாளர்களுக்கும் சாதாரண ஏழையெளிய அடித்தட்டு மக்களுக்கும் தரப்படுகின்ற சலுகைகள் பாதிக்கப்படுமோ என்கின்ற அச்சம் எழுகிறது என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய திமுக. ஆட்சிமீது குறை சொல்ல வேண்டும், பழி சுமத்த வேண்டும் என்பதற்கான அந்த நோக்கத்துடன் இந்த வெள்ளை அறிக்கையை நாங்கள் வெளியிடவில்லை. இருக்கின்ற உண்மைகளை அப்படியே மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது; இந்த வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இப்போது வெளியிடப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கைமீதுதான் மாண்புமிகு உறுப்பினர் தனது கருத்துகளைச் சொல்ல வேண்டுமே தவிர, எதிர்காலத்தில் இப்படி இருக்குமோ, அப்படி இருக்குமோ, இப்படிச் செய்வார்களோ, அப்படிச் செய்வார்களோ என்று எல்லாம் சந்தேகங்களை எழுப்பினால் அதற்கு இப்போது நாங்கள் பதில் சொல்ல முடியாது. எதையுமே மறைமுகமாகச் செய்யும் பழக்கம் எங்களுக்குக் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) எதுவாக இருந்தாலும் வெளிப்படையாக, நேரிடையாகச் செய்வோம். ஆகவே, அடுத்த பிப்ரவரி மாதத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் என்னென்ன வரும் என்பதைப் பற்றி இப்போதே மாண்புமிகு உறுப்பினர் யூகங்களை வெளியிட்டால் அதற்கெல்லாம் இப்போது பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. திருமாவளவன்:** அந்த மாதிரியான பாதிப்புகள் எதுவும் வந்துவிடக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டவே அதை நான் குறிப்பிடுகிறேன். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையில் பாராட்டுக்குரிய பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதைப் பாராட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று நான் உணர்கிறேன். அந்த அடிப்படையில், குறிப்பாக பான் மசாலா, குட்கா போன்றவற்றைத் தடை செய்திருப்பது, செய்தியாளர்களுக்கான குடும்ப நல நிதியை ரூபாய் 2 இலட்சமாக உயர்த்தி இருப்பது, ஆதிதிராவிட மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்குவது, மேலும் அம்மாணவிகளுக்கான இலவசக் கல்வித் திட்டத்தை, பட்ட மேற்படிப்புவரை நீட்டித்து இருப்பது, ஆதிதிராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தை உயர்த்தியிருப்பது, 5 இலட்சம் மகளிருக்கு தொழிற் பயிற்சி அளிப்பது, மகளிருக்கு எனத் தொழில் பூங்காக்கள் அமைப்பது போன்ற பல்வேறு திட்டங்கள் வரவேற்கக் கூடியவை. இதில் விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதை வரவேற்றாலும், உயர்ந்து வருகிற விலைவாசியோடு ஒப்பிடும்போது, அது போதாது என்பதை இந்த இடத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பாக மகளிருக்கான திட்டங்களில் கூடுதலாகக் கவனம் செலுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் மனமார வரவேற்கிறேன்.

*பிற்பகல் 5-15*

பல்வேறு இடங்களில் மகளிரின் மேம்பாட்டுக்கான திட்டங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தரிசு நில மேம்பாடு சம்பந்தமான அறிவிப்பில், பண்ணைத் தொழிலினை மேம்படுத்துவதற்காக நில உச்சவரம்புச் சட்டங்களைத் தளர்த்துவோம் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அனைவருக்கும் நிலம் வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கை எழுந்த காலத்திலிருந்து, நில உச்சவரம்புச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டு, அது மேலும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப் படாமல் இருக்கிறதே என்கிற ஏக்கம் இருக்கும்போது, நில உச்சவரம்புச் சட்டங்கள் இந்தப் பண்ணைத் தொழிலுக்காகத் தளர்த்தப்படும் என்று அறிவித்து இருப்பது எந்த அடிப்படையில் என்று புரியவில்லை. இதனால் கடந்த காலத்தில் நிகழ்ந்த சாணிப்பால், சவுக்கடி போன்ற வன்கொடுமைகள் தலைதூக்குமோ, பண்ணைச் சுரண்டலுக்கு அது வழிவகுக்குமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.



சிறுதொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற நிலையில், சிறு தொழில்களை முடக்குகிற வகையில் High Tech தொழில் நிறுவனங்கள் நிறுவப்படும் என்ற கருத்து முரண்பாடாக உள்ளது. அதை எப்படிச் சமாளிப்பது என்பதற்கான தெளிவான திட்டம் எதுவும் அறிக்கையில் இல்லை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நகர்ப்புறப் பெண்களுக்குக் கழிப்பிட வசதி செய்து தரப்படும் என்பது மிகமிக வரவேற்கக்கூடிய ஒரு திட்டம். வெளிநாட்டில் இருந்து வந்த நடிகை ஒருவர், இந்தியாவில் பெண்களுக்குக் கழிப்பிட வசதி இல்லை என்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்ததாக ஒரு பத்திரிகையிலே படித்தது எனக்கு நினைவுக்கு வருகிறது. இந்தியாவின் கோடானு கோடி மக்கள் கழிப்பிட வசதி இல்லாமல் பொது இடங்களிலே செல்கிற ஒரு கேவலம், அவலம் நிலவுகிறது. அப்படிப்பட்ட நிலையில், நகர்ப்புறப் பெண்களுக்கு கழிப்பிட வசதி செய்யப்படும் என்று உறுதி அளித்திருக்கிற அரசு, கிராமப்புறப் பெண்களுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நிதிநிலை அறிக்கையைச் சரியாகப் படிக்கவில்லை என்பது (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது புரிகிறது. இந்த மாநிலத்திலுள்ள 12,619 ஊராட்சிகளிலும், கிராமப்புற மகளிருக்காகத் துப்புரவு மையங்கள் அமைக்கப்படும். அதில் குளியல் வசதி, கழிப்பிட வசதி எல்லாம் செய்து தரப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. திருமாவளவன்:** நன்றி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறப் பெண்களுக்கு கழிப்பிட வசதிகள் செய்து தருவதற்காக 92 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்பதும் நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்புக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக அரசு மேற்கொண்டிருக்கிற முயற்சியில், அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியில், 75 சதவீதம் சென்னை மாநகருக்கே ஒதுக்கி இருப்பதாக அந்த அறிவிப்பு சொல்லுகிறது.

அப்படியென்றால் தமிழகத்தின் பிற பகுதிகளில் உள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு மீதம் இருக்கிற 25 சதவீத நிதி போதுமா என்பது தெரியவில்லை. ஆகவே, பிற பகுதிகளில் நிலவுகிற குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கும் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். சென்னைப் பெருநகருக்கே குடிநீர், சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகரங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் போன்ற அறிவிப்புகளெல்லாம் வரவிருக்கின்ற மாநகராட்சித் தேர்தலைக் கவனத்தில் கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 5-20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் பட்டிதொட்டிகளில் எல்லாம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிர திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளார்கள். அதற்கு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட பணத்திற்கு அப்பால் Institutional finance from abroad நிறைய கிடைக்கிறது. அதையும் கொண்டுதான் இதை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

**திரு. இரா. திருமாவளவன்:** சென்னை நகருக்கே குடிநீர், சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகரங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் போன்ற அறிவிப்புகளெல்லாம், நடைபெறவுள்ள மாநகராட்சித் தேர்தலைக் கவனத்தில் கொண்டே அறிவிக்கப்பட்டிருக்கின்றனவோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருமாவளவன், மாநகராட்சித் தேர்தல் மட்டுமல்ல, உள்ளாட்சித் தேர்தல் எல்லாம்தான் வருகிறது.

**திரு. இரா. திருமாவளவன்:** நிதிநிலை அறிக்கையில், இலவச வேட்டி சேலைத் திட்டத்தில், 75 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வேட்டி சேலைகள் 42 இலட்சமாகக் குறைக்கப்பட்டு இருக்கின்றன. இதனால் 33 இலட்சம் குடும்பங்கள் பாதிப்படைந்திருக்கின்றன. அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற காரணம், வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்கள்...

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசுகிறபோது, சென்னை, மதுரை மற்றும் கோவை



மாநகராட்சிகளுக்கு மட்டும் அடுக்குமாடிக் குடியிருப்புகள், தேர்தலையொட்டி அறிவிக்கப்பட்டு இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். குடிசை மாற்று வாரியத்தின் பல்வேறு திட்டங்கள் மூலமாக இந்தப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. ஆகவே, 11-வது நிதிக் கமிஷன் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டவிருக்கிறோம். மற்ற மாநகராட்சிகளுக்கு இந்த நிதியிலிருந்து இந்தத் திட்டங்களெல்லாம் செய்யப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** இலவச வேட்டி சேலைத் திட்டத்தில் 33 இலட்சம் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. அதற்கான காரணத்தை விளக்குகிற அறிக்கையில் வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்கள் இவ்வளவு காலம் அப்படிப் பயனடைந்து வந்திருக்கிறார்கள், அதைக் குறைக்கும்பொருட்டு, இந்த நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 33 இலட்சம் குடும்பங்களும் வறுமைக் கோட்டுக்கு மேல் உள்ளவர்கள்தானா? அதை எப்படி நாம் சரியாகக் கணக்கிடுவது? மத்திய அரசு இந்த வறுமைக் கோட்டைத் தீர்மானிப்பதிலே, வரையறுப்பதிலே ஏராளமான குளறுபடிகள் இருப்பதாகப் பொதுமக்களிடையே கருத்து நிலவிக் கொண்டிருக்கிறது. ஒரு தனி நபர் ஒரு மாதத்திற்கு 140 ரூபாய் வருமானம் உடையவராக இருந்தாலே போதும், அவர் வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவராகிறார் என்று அந்தத் திட்டம் சொல்வதாகக் கூறப்படுகிறது. ஆகவே, அதிலுள்ள குறைபாடுகளை அகற்றி, வறுமைக் கோட்டைத் தீர்மானிப்பதிலே உள்ள சிக்கலை அகற்றி, அனைவருக்கும் பயன் கிடைக்கக் கூடியவகையில் இந்தத் திட்டம் தீட்டப்படுமா என்கிற கேள்வியை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வேட்டி சேலைகளைப் பெறுபவர்கள் உண்மையிலேயே வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக இம்முறை உள்ளாட்சி அமைப்புகளே தகுதியானவர்களின் பட்டியலைத் தயாரித்து அரசுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. திருமாவளவன்:** அதாவது வழங்கப்படுகிற ஒரு வேட்டி ஒரு சேலை 96 ரூபாய் அல்லது 97 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. காயத்திற்குக் கட்டுப் போடுகிற துணிகளைப் போல் அந்தச் சேலையும் வேட்டியும் இருக்கிறது. ஆகவே, அந்த வேட்டி சேலைகளை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட இலவச வேட்டி சேலைகளைப் பற்றிச் சொல்கிறார் போலும். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட சேலைகள், வேட்டிகள் அவை. இந்த ஐந்தாண்டு காலத்தில் அப்படிப்பட்டவை வழங்க்ப்படவில்லை. நம்முடைய கூட்டுறவுத் துறையில் ஆங்காங்கே தயாரிக்கப்படுகிற வேட்டி சேலைகளைத் தவிர, தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டவை தவிர, வெளியில், எந்த மாநிலத்திலிருந்தும் கைத்தறி வேட்டி புடவை வாங்கவில்லை.

**திரு. இரா. திருமாவளவன்:** கடந்த தி.மு.க. ஆட்சியின்போது ஒரு வேட்டி சேலைக்கு 96, 97 ரூபாய் என்று கணக்கு வருகிறபோது, 141 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால், இப்போது 129 கோடியாக அது குறைக்கப்பட்டுள்ளது. அப்படியென்றால், ஒரு வேட்டி சேலை மதிப்பு என்னவாக இருக்கும் என்று கணக்கிட்டால் அதைவிடக் குறைவாகத்தான் வருகிறது. ஆகவே, அதைவிடக் குறைவான மதிப்புள்ள ஒரு வேட்டி சேலையை வாங்கினால் அந்த வேட்டி சேலையைவிட மிகவும் மோசமாக இருக்குமோ என்றுதான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். அப்படி வழங்குகிற அந்த வேட்டி சேலை மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காகவே இந்த இடத்தில் அதை நான் குறிப்பிடுகிறேன்.

*பிற்பகல் 5–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனுக்கான வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்ததில் 310.50 கோடி என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் பயன்பெறக்கூடிய விவசாயிகளுக்கு ஆலைகள் வழங்கவேண்டிய கடன் மட்டுமே 349 கோடி. அந்த விவசாயிகளுக்கு ஆலைகள் வழங்க முடியாத நிலை நிலவுகிறது. ஏனென்றால், ஆலைகள் 815 கோடி நட்டத்தில் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், நட்டத்தில் இருக்கிற அந்த ஆலைகள் வழங்கினால்தானே, விவசாயிகள் அந்தப் பணத்தைப் பெற்றால்தானே இந்த 310.50 கோடி தள்ளுபடிக்கான பயனைப் பெறுகிற



வகையில் அசலை அடைக்க முடியும். ஆகவே, அவர்கள் அசலை அடைப்பதற்கு ஏற்ற வகையில் ஆலைகள் அவர்களுக்கு வழங்க வேண்டிய கடனை, பாக்கியைத் தா வேண்டும். அப்படித் தருவதற்கு இந்த ஆலைகளின் நட்டத்தைச் சமாளிக்க அரசு நிதி ஒதுக்க வேண்டும் என்பதை இந்த இடத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். மின் வாரியத்திற்கு 4 ஆயிரம் கோடி நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்கிறபோது 500 கோடி அதற்காக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆட்சிக்கு வந்து 3 மாத காலம்தான் ஆகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் இத்தனை கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பாக்கி இருக்கிறது என்று சொன்னால், கடந்த 5 ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட பாக்கிதானே இது. முந்தைய அரசு இதை ஏன் வழங்கவில்லை? வழங்குமாறு அவர்களை ஏன் மாண்புமிகு உறுப்பினர் வற்புறுத்தவில்லை என்பதைத் தெரிவிப்பாரா?

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய வேண்டுகோள். ஆலைகளை மீட்டால்தான் விவசாயிகளை மீட்க முடியும். ஆலைகள் நட்டத்திலே இருக்கின்றன. அந்த ஆலைகளை மீட்டால் அவர்கள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கடனை வழங்குவார்கள். அப்படி விவசாயிகள் அதை வாங்கிக் கொண்டால், உங்களுடைய அறிவிப்பால் பயன்பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டவே இதை நான் குறிப்பிடுகிறேன்.

அடுத்து, தஞ்சையில் தமிழுக்கு மாநாடு நடத்திய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நிலையில் தமிழை ஆட்சிமொழி ஆக்குவது, பயிற்று மொழி ஆக்குவது குறித்து எதுவுமே நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடவில்லை. அதற்கு மாறாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழக அரசு இதுகுறித்து வெளியிட்ட ஆணை உயர் நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டுவிட்டது. அதன்பிறகு தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு வருகிற 27–ஆம் தேதி வருகிறது. ஆகவே, வழக்கு நிலுவையில் இருப்பதால் இதைப்பற்றி நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, கடந்த கூட்டத் தொடரில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசு ஆணை எண் 44-ஐ நடைமுறைப்படுத்துவோம் என்று ஒன்றுக்கு இரண்டு முறை உறுதி அளித்து இருந்தார், ஆனால், அதுபற்றி நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அதற்கு அடுத்து, தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கான சிறப்புக் கூறு திட்டம்; பழங்குடியினருக்கான துணைத் திட்டப்படி நிதி ஒதுக்கப்படுகிறதா, செலவிடப்படுகிறதா, சம்பந்தப்பட்டோருக்கு முறையாகச் சென்று அடைகிறதா என்பது பற்றி ஒரு வெள்ளை அறிக்கையை தனியே அரசு வெளியிட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு கொண்டுவந்த அந்தத் திட்டம் 1980 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. ஒவ்வொரு துறையிலும் மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் தாழ்த்தப்பட்டோருக்கான நிதியை ஒதுக்கி அதை முறைப்படி செய்ய வேண்டுமென்று அந்தத் திட்டம் கூறுகிறது. ஆனால் அதன்படி எல்லாத் துறைகளிலும் நடைமுறையில் இருக்கிறதா என்பதை அறிவதற்கு அதை மக்களுக்கு வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும்; அதை நடைமுறைப்படுத்த நான் ஆணையிடுவேன் என்று இஸ்லாமியர்கள் மாநாட்டில் முதல்வர் பேசியது எனக்கு நினைவு இருக்கிறது. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையில் இஸ்லாமியர்களுக்கு, கடற்கரையில் நடந்த மாநாட்டில்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எந்த முதல்வரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்?

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரையிலே நடந்த இஸ்லாமியர்கள் மாநாட்டில் பேசும்போது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தரவாதத்தைத் தந்தவர் முன்னாள் முதல்வர், நான் அல்ல.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கினால் நன்றாக



இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டி, நீண்ட நாட்களாக தலித் கிருத்தவர்கள், யாதவர்கள், நாடார்கள் போன்றோர் தங்களையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்கிற கோரிக்கையை எழுப்பி வருகிறார்கள். அந்தக் கோரிக்கையைத் தமிழக அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அடுத்தது, மங்களூர் தொகுதியில் ஒரு கலைக் கல்லூரியும், பொறியியல் கல்லூரியும் அமைக்க அரசு முன்வர வேண்டும். நவீன வசதிகளைக் கொண்ட மருத்துவமனை ஒன்று அமைக்கவும், வெலிங்டன் ஏரியைத் தூர் வாரவும், அந்த அணையை வலுப்படுத்தவும் அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்கிற குறிப்புகளும் இந்த அறிக்கையில் இல்லாததால், நான் வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்டோருக்கு வீட்டுமனைப் பட்டா...

*பிற்பகல் 5-30*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரைப் போலவே, இங்கே பேசுகின்ற இன்னும் பல மாண்புமிகு உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கையில் இதைப் பற்றிக் குறிப்பிடவில்லையே, அதைப் பற்றிக் குறிப்பிடவில்லையே என்று பல பொருட்களைக் குறிப்பிடுகிறார்கள். நிதிநிலை அறிக்கை இப்பொழுதே மிகவும் நீண்டதொரு document ஆக இருக்கிறது. அரசாங்கத்தில் மொத்தம் 36 துறைகள் இருக்கின்றன. இந்த 36 துறைகள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு புள்ளிவிவரத்தையும் நாம் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடுவதாக இருந்தால், 1,000 பக்கங்களுக்கு மேல், 5,000 பக்கங்களுக்கு மேல் நிதிநிலை அறிக்கை நீண்டுவிடும். ஆகவே, முக்கியமான சிலவற்றை மட்டும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுவிட்டு, மற்றவை அந்தந்த மானியக் கோரிக்கைகள் வரும்போது, அந்தந்த துறை சம்பந்தமான Policy Note – கொள்கை விளக்க அறிக்கை வெளியிடும்போது அவற்றில் குறிப்பிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** பழங்குடியினருக்கான தனித் துறையைப் பிரித்து, அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற அந்த வேண்டுகோளையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக பயிர்த் தொழிலை ஊக்கப்படுத்துவோம் என்றும், அதற்காக கம்பு, சோளம்,

கேழ்வரகு போன்ற பயிர்த் தொழிலை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதை வரவேற்கிறோம். ஆனால் நிலமே இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு உழவுத் தொழில் செய்ய நிலம் வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும், அதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மொழிவழிச் சிறுபான்மை, மதவழிச் சிறுபான்மை சமூகத்தினர் கல்வி நிறுவனங்கள் தொடங்குவதற்கு அளிக்கப்படும் சிறப்புரிமைகள், தாழ்த்தப்பட்டோருக்கும் விரிவுபடுத்த வேண்டும்; தாழ்த்தப்பட்டோர் நடத்தும் கல்வி நிறுவனங்களையும் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களாக அறிவிக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை வைக்கிறேன்.

அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும்பொருட்டு செயல்படும் ரெப்கோ வங்கியைப் போல, தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்கென ஒரு தனி வங்கியைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்புக் கூறு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் எழுமேயானால், தாழ்த்தப்பட்டோருக்கு தனி பட்ஜெட்டை – நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டுமெனவும் கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. நீலகண்டன்.

***திரு. ப. நீலகண்டன்:** கண்ணியமிக்க இந்தப் பேரவையின் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். தாயை வணங்குகின்றேன். இந்தச் சாதாரண தொண்டனை ஆற்காடு சட்டமன்ற உறுப்பினராக்கி, 2001–2002 நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பு அளித்த தமிழக மக்களின் குலவிளக்காய், என் குடும்ப விளக்காய் விளங்கும், நான் அன்றாடம் வழிபடும் தெய்வமாகிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, எனக்கு ஆற்காடு தொகுதியிலே வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைச் சொல்லிக்கொள்கின்றேன்.

தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் மாணவ மாணவிகளுக்கெல்லாம் தினந்தோறும் பல்வேறு உதவிகளை நேரடியாகச் செய்து வருகின்றார்கள். இதை மக்கள் பாராட்டுகின்றனர். தற்போது வேலூர் பொறியியல் கல்லூரி Deemed University என அந்தஸ்து பெற்று,



Single Window System மூலமாக அரசினால் இடம்பெற்ற மாணவர்கள் அந்தக் கல்லூரியில் இடம்பெற முடியாமல் பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டு உள்ளனர். உயர் நீதிமன்றத்தில் ஆதாரவான தீர்ப்பு இருந்தாலும், உச்ச நீதிமன்றம் stay கொடுத்திருக்கிறது. இந்நிலையில் நன்கு படிக்கின்ற மாணவர்களின் துயர நிலையைப் போக்க, தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள், அந்த மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களுக்கு ஏற்ப, நேர்காணல் நடந்த நேரத்திலே, எந்தக் கல்லூரியில் இடம் இருக்குமோ, அந்த இடத்தினை ஒதுக்கித் தருமாறு...

*பிற்பகல் 5-35*

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலகண்டன் அவர்கள் குறிப்பிட்ட வேலூர் Deemed University போன்ற நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் இப்போது மாணவர்களைச் சேர்க்கும் முறையில் செய்யப்பட்ட மாறுதல் காரணமாக அவற்றிற்கான சில முறைகளின் காரணமாக, அவர்கள் மேல்முறையீடு செய்தார்கள்; உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளார்கள். புரட்சித் தலைவி அவர்கள், மாணவ, மாணவியர்களுடைய நலனைப் பாதுகாப்பவர்கள். ஆகவே, அவர்களுடைய எண்ணப்படி, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக வருகின்ற 25, 26 ஆம் தேதியன்று நேர்முக கவுன்சிலிங் நடக்க இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அவர்கள் விரும்புகின்ற இடங்களைத் தேடி அலையாமல், அவர்கள் கவுன்சிலிங்கிலே வந்து எந்தப் பொறியியல் கல்லூரியிலே அவர்கள் சேர வேண்டுமோ, இந்தப் பிரச்சினை வருவதற்கு முன்பு எந்தக் கல்லூரியிலே கிடைப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்குமோ, அந்தக் கல்லூரியிலே அந்த மார்க்கின் அடிப்படையில் தருவதற்காக இந்த அரசானது அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது. ஆகவே, அந்த மாணவர்களுக்கு எந்த இன்னலும் இந்த ஆட்சியிலே வராது. புரட்சித் தலைவி அவர்கள், நம்முடைய நீலகண்டன் அவர்கள் சொன்னது போலத் தாயுள்ளம் கொண்டவர்கள்; அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்காக ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். மாணவர்கள் அதே கல்லூரியில் Deemed University-யில் சேர வேண்டுமென்றால் காத்திருக்கலாம். அதில் தடை கிடையாது. ஏனென்றால் அதற்கு அவர்கள் மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டும். இதற்கிடையிலே அவர்கள் படிப்பு கெடக்கூடாது என்பதால் வேறு ஒரு கல்லூரியில் சேர வேண்டுமென்றால் அதற்கும் இந்த அரசானது உறுதுணையாக இருக்கும், உதவி செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்த நூறு நாட்களுக்குள்ளே பணப்புழக்கம் வரவில்லை என்று பேசினார்கள். ஆனால், எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் 1995-96ஆம் ஆண்டு, அரசினிடத்திலே இருப்பிலே 641 கோடி ரூபாயை வைத்துவிட்டுச் சென்றிருக்கிறோம். ஆனால் இந்த ஐந்தாண்டு காலத்திலே அது முற்றிலும் கரைக்கப்பட்டு, இப்போது கஜானாவைக் காலி செய்து இருக்கிறார்கள்.

அதேபோல் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பொருள் வழங்குவோர் மற்றும் அரசு திட்டங்களைச் செயல்படுத்துவோருக்கெல்லாம் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் 700 கோடி ரூபாய் நிலுவை உள்ளது. ஆனால் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியிலே எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், பெரும் வியாபாரிகளை எடுத்துக்கொண்டாலும், சிறு வியாபாரிகளை எடுத்துக்கொண்டாலும், நடுத்தர ஏழை மக்களை எடுத்துக்கொண்டாலும், அந்த ஐந்தாண்டு காலத்திலே நல்ல முறையிலே வாழ்க்கை நடத்தினார்கள். ஆனால், கடந்த ஐந்தாண்டுகாலத்தை எடுத்துக்கொண்டால் எவ்வளவோ பெரிய வியாபாரிகள் எல்லாம் தங்களுடைய குடும்பத்துடன் விஷம் சாப்பிட்டு மடிந்ததை நாம் பத்திரிகை வாயிலாக அறிந்து இருக்கிறோம். இப்பொழுது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே, கடந்த ஆட்சியிலே போடப்பட்ட சட்டங்களை நீக்கியுள்ளதால் மக்களுக்கு வருகின்ற காலங்களிலே பணப்புழக்கம் ஏற்படுவதோடு, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்கின்ற வகையிலே திட்டங்களை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதேபோல், இந்த அரசினுடைய நில மேம்பாட்டுத் திட்டத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 20 இலட்சம் ஏக்கருக்கு தரிசு நிலங்களைச் சாகுபடி நிலங்களாக மாற்றுவதற்குரிய அருமையான ஒரு திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் கடந்த கால ஆட்சியிலே 25 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களைத்தான் பயிரிடுவதற்கான...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 இலட்சம் ஏக்கர் அல்ல. 20 இலட்சம் எக்டேர். அப்படியானால் கிட்டத்தட்ட 50 இலட்சம் ஏக்கர்.

**திரு. ப. நீலகண்டன்:** 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களைச் சாகுபடி நிலங்களாக்க இன்று மிகப் பெரிய தொலைநோக்குத் திட்டம் என்ற அளவிலே அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எங்களுடைய ஆற்காடு தொகுதி முழுக்க விவசாயிகள் நிறைந்த தொகுதி. அப்படிப்பட்ட



அந்தத் தொகுதியிலே மக்கள் எல்லாம் விவசாய மக்கள்; இந்தத் திட்டத்தினை மிகவும் வரவேற்று அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல விவசாயிகளுடைய நலன் கருதி தொழில் துறைகளுக்கு ஈடாக வேளாண் வணிகத் துறையினை ஏற்படுத்தி விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்வினை வளம்பெறச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன்.

அடுத்து இங்கே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தினந்தோறும் மக்களிடத்திலே மனுக்களைப் பெற்றதுபோல், 234 தொகுதிகளிலே சென்று எங்களுக்காக வாக்குகளைச் சேகரிக்கின்றபோது, கிராமத்திலே வாழ்கின்ற தாய்மார்கள் எல்லாம் கொடுத்த மனுக்களைப் பரிசீலித்துப் பார்த்ததன் காரணத்தால் – அங்கே சுகாதார வசதி இல்லாமல், கழிப்பிடம் இல்லாமல் இருந்த மக்களுடைய மனுக்களைப் பெற்று – கிராம மகளிர் ஆரோக்கிய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 12,619 கிராம ஊராட்சிகள் அனைத்திலும் 2 இலட்சம் ரூபாய் மதிப்பிலே மின் வசதி, தண்ணீர் வசதியோடு கழிப்பிடம் மற்றும் குளியல் வசதி போன்ற வசதிகளை ஏற்படுத்த 92 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, கிராம மகளிருடைய ஆரோக்கியத்திலே அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிற நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

*பிற்பகல் 5-40*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ மாணவியர்க்கெல்லாம் கல்லூரிகளில் பட்டப் மேற்படிப்பு வரை இலவசமான கல்வி என்கின்ற இந்த உன்னதமான திட்டத்தைத் தந்தமைக்காகத் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கிராமங்களிலே இருக்கின்ற ஏழை விவசாயிகள் எல்லாம் ஒரு கிராம நல அதிகாரியைப் பார்ப்பது என்றால் அரிதாக இருக்கின்ற காரணத்தால், கிராம நல அதிகாரிகள் எல்லாம் அந்த ஊராட்சி மன்ற அலுவலகத்திலே இருக்க வேண்டும் என்பதற்காக 4,000 அலுவலகக் கட்டடங்களைக் கட்டுவதற்காக அம்மா அவர்கள் அந்த நிர்வாக அதிகாரிகளுக்கு இட ஒதுக்கீடு செய்திருப்பதைப் பாராட்டி, என்னுடைய மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக அளவிலே பாராட்டத்தக்க தொட்டில் குழந்தைத் திட்டம்; அன்னை தெரசா அவர்கள் பாராட்டும் வகையில் நடைபெற்ற அந்தத் தொட்டில் குழந்தைகள் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு தமிழக மக்களால் பாராட்டப்பெற்றது. நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திற்கு மேலும் மெருகூட்ட வேண்டும் என்கிற வகையில் பிறக்கும் தனி ஒரு பெண் குழந்தைக்காக நிதியினை ஒதுக்கி அவர்களுடைய வாழ்க்கைக்கு வளம் செய்திருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தை இந்தியாவிலேயே எந்த மாநிலமும் அறிமுகப்படுத்தவில்லை. ஆகவே இந்தத் திட்டம் மிகவும் வரவேற்கத்தக்க திட்டம். இதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை அம்மா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குழந்தைகள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்கிற திட்டத்தை அறிமுகப்படுத்தியதன்மூலம் இனி வருங்காலத்தில் குழந்தைத் தொழிலாளர் என்கின்ற முறையினை அகற்றிட வழிவகை செய்து கொடுத்திருக்கின்ற தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, மீனவர்களுடைய ஆட்சி என்பதற்கு எடுத்துக்காட்டாக தமிழக மீனவக் குடும்பங்களுக்கெல்லாம் 37,000 ரூபாய் மதிப்பீட்டிலே 4,000 வீடுகளைக் கட்டித் தந்திடும் திட்டம், மீனவ மக்களிடத்திலே பெரும் வரவேற்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

வெளிநாட்டில் வாழ்கின்ற இந்தியத் தமிழர்களுடைய முதலீட்டினை ஊக்குவிக்கும்வகையில், அவர்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள 'வெளிநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களின் தொழில் முனைவோர் கூட்டமைப்பு' என்கின்ற அமைப்பை ஏற்படுத்துவதன்மூலம் தமிழ்நாட்டின் தொழில் வளத்தை மேம்படுத்தச் செய்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

அடுத்து, பிளாஸ்டிக் பொருட்களினால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டினைத் தவிர்க்கும்பொருட்டு, காகிதப் பொருட்களை ஊக்குவிக்கும் வகையில் உற்பத்தி வரி விகிதத்தைக் குறைத்ததால், இது பெரும் வரவேற்பினைப் பெறும்.

ஏழைச் சிறுவர், சிறுமியர் மற்றும் ஏழைத் தாய்மார்கள் ஆகியோர் பயன்படுத்தும்வகையில் ரூ.100 வரை மதிப்பிலான காலணிகளுக்கு வரிவிலக்கு அளித்துள்ளது மிகவும் பயன்பெறும் திட்டமாகும்.



கைப்பம்பு, மண்ணெண்ணெய் அடுப்புகளுக்கு வரிவிலக்கு அளித்திருப்பது ஏழை மக்களுக்கு, அன்றாட வாழ்க்கையில் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

ஆசியாவிலேயே சென்னையை ஒரு தலைசிறந்த விளையாட்டு மையமாக மாற்றியது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில்தான் என்பதை மக்கள் மறந்துவிடவில்லை. இந்த ஆண்டும் உலகளவில் போட்டியிடும் திறனைக் கண்டறியும் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருப்பது விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டு மக்களுக்கு நிதிநிலை அறிக்கையின் மூலமாக பல அரும்பெரும் திட்டங்களை, நலப் பணிகளை அறிவித்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியைக் கூறி, என்னுடைய ஆற்காடு தொகுதி, விவசாயிகள் நிறைந்த தொகுதியாகவும், ஆதிதிராவிட மக்கள் நிறைந்த தொகுதியாகவும் இருப்பதால் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற சில கோரிக்கைகளைப் பணிவுடன் அம்மா அவர்களின் பார்வைக்குச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆற்காடு தொகுதியில் இதுவரை அரசு கல்லூரிகள் தொடங்கப்படவில்லை. அதுபோல I.T.I., Polytechnic போன்ற அரசு சார்ந்த கல்வி நிறுவனங்கள் எதுவும் இல்லை. அதை அமைத்திட வேண்டுமென்று அம்மா அவர்களைக் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு தொகுதி மற்றும் அதைச் சார்ந்துள்ள அனைத்து ஊர்களும் விவசாயத்தையே பெரிதும் நம்பியிருக்கின்ற தொகுதியாக இருக்கின்றன. அங்கேயிருக்கின்ற வண்டிக்கல் கிராமம் மற்றும் குப்பம் கிராமம் மலைப்பகுதி சூழ்ந்த கிராமங்களாகும். அங்கே அரசு சார்ந்த விவசாயக் கல்லூரி ஒன்றை அமைத்து, அதன்மூலம் அந்தத் தொகுதி மக்கள் பெரும் பயனடைவதற்கு ஏற்பாடு செய்யும்படி அம்மா அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-45*

ஆற்காடு தொகுதியில் தீயணைப்பு நிலையம் ஆற்காடு நகரத்திலே இருக்கிறது; இராணிப்பேட்டை நகரத்திலே இருக்கிறது. ஆனால் அங்கே கலவை என்ற நகரத்திலே தீயணைப்பு நிலையம் இல்லை. தீயணைப்பு நிலையம் ஒன்றை அங்கே ஏற்படுத்திக் கொடுத்தால், தீப்பிடிக்கின்ற

நேரங்களில் அதைத் தடுப்பதற்கு அந்த மக்களுக்கு உதவியாக இருக்கும். கலவை பேரூராட்சியைச் சுற்றி 58 ஊராட்சிகள் இருக்கின்றன. எனவே, இந்தப் பணியை அம்மா அவர்கள் எங்கள் தொகுதிக்குச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஆற்காடு நகரத்தில் இருந்து விழுப்புரம், திருச்சி வழியாக தென் மாவட்டங்களுக்குச் செல்வதற்கான சாலை பழுதடைந்துள்ள நிலையில் உள்ள சாலையாக, Single Road - ஆக இருக்கிறது. மிகப் பெரிய கனரக வாகனங்கள் எல்லாம் இந்தச் சாலை வழியாகச் செல்கின்றன. அந்தச் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துக் கொடுக்குமாறு அம்மா அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு நகரத்திலே சுகாதாரம் மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. அந்த நகரத்திலே பாதாளச் சாக்கடை ஒன்றை அமைத்துக் கொடுக்குமாறு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டையில் உள்ள தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் பாலாற்றில் கலப்பதால் ஆற்காடு நகரிலே வழங்கப்படுகின்ற குடிநீர் மாசுபட்டுள்ளது. அங்கு வழங்கப்படுகிற குடிநீர் குடிப்பதற்குத் தகுதியற்ற நிலையில் இருப்பதால், பொன்னையாற்றிலிருந்து குடிநீர் வழங்க ஆவன செய்யுமாறு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடந்த ஆட்சியிலே பேரூராட்சிகளில் எல்லாம் தொகுப்பு வீடுகள் கட்டுவதை நிறுத்திவிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பேரூராட்சிகளில் ஆதிதிராவிட மக்களுக்கு என்று தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ஆணையிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடந்த ஆட்சியின்போது வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கான-below poverty line-பட்டியல் தயாரிக்கும்போது ஆட்சியில் உள்ளவர்கள் அதில் பெரும் பகுதி இடம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதனால் பொதுமக்கள் பலர் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பல ஆயிரம் குடும்பத்தினர் உரிய சலுகையைப் பெறமுடியாமல் தவிக்கின்றனர். இதைப் பரிசீலனை செய்து, உரியவர்கள் பயன்பெறும் வகையிலே இந்தப் பட்டியலைத் தயார் செய்வதற்கு அம்மா அவர்கள் உத்தரவு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நீக்குதல், சமூக நலத் திட்டங்களின் பயன்கள் மக்களுக்குக் கிடைக்காமல் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் கிடப்பில் போடப்பட்டுள்ள சலுகைகளை விரைந்து அளித்தல், முறைசாரா தொழிலில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் தொழில் ரீதியான தனியான வாரியங்களை அமைத்து, அவற்றை முறையாகச் செயல்பட வைத்தல் போன்ற முக்கிய பிரச்சினைகளின்மீதான அரசின் அறிவிப்பை, அதன் செயலாக்கத்தை எதிர்காலத்திலாவது உறுதியுடன் இந்த அரசிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

*பிற்பகல் .5-.50*

பொருளாதாரம், தொழில், விவசாயம் ஆகிய நாட்டு முன்னேற்றத்தின் அடித்தளங்கள் சமீப ஆண்டுகளாய் தகர்க்கப்பட்டு வருகின்றன. உலகமயம், தனியார்மயம், தாராளமயம் போன்ற மக்களை மயானத்துக்கு அனுப்பும் இந்தத் திட்டங்களால் ஏற்பட்டு வரும் அபாயகரமான விளைவுகளை நாடு எல்லா முனைகளிலும் சந்தித்து வருகின்றது. தமிழ்நாட்டின் பாரம்பரியத் தொழில், ஆதாரத் தொழில்களான கைத்தறி, விசைத்தறி, பனியன், பஞ்சாலை, எஞ்சினியரிங் உள்ளிட்டவைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கை, ஜவுளிக் கொள்கை, நிதி மூலதனக் கோட்பாடு, பருத்தி நூல் விலை நிர்ணயக் கொள்கை, வங்கிக் கடன்கள். மின் விநியோகம் போன்றவற்றோடு இணைந்துள்ள பஞ்சாலைத் தொழில் நெருக்கடிக்குத் தீர்வு காண சீரிய முயற்சிகளை நம்முடைய மாநில அரசு எடுக்க வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நலிவுற்ற தொழில்களை முடமாக்குவது அல்லது மூடுவது நாட்டுக்குப் பயன் தராது. மனிதர்களுக்குச் சீக்கு வந்தால் மருத்துவம் பார்த்துக் குணப்படுத்துகிறோம். தொழில்களுக்குச் சீக்கு வந்தால் மரணப் படுகுழிக்குள் தள்ளுவது என்ன நியாயம்? மாறாக, அவற்றைச் சீர்படுத்திச் செயல்படுத்தத் திட்டமிட வேண்டும். தொழில் துறையை முன்னேற்றாமல் புதிய வேலைவாய்ப்பை எந்த வகையிலே உருவாக்க முடியும்?

அடுத்து பொது விநியோகம் குறித்து கவலையளிக்கும் புள்ளி விவரங்கள் வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. குடும்பங்களின் எண்ணிக்கை 1.44 கோடி என்றும், புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 1.60 கோடியாக உள்ளது என்றும், ஒரு குறைந்தளவு மதிப்பீட்டின்படி, மாநிலத்தில் சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட



போலி குடும்ப அட்டைகள் புழக்கத்திலே உள்ளதாக எடுத்துக்கொள்ளலாம் என்றும், அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இவை வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களிடம் என்றால், அரசுக்கு ஏற்படும் இழப்பு ரூபாய் 55.80 கோடி என்றும், வறுமைக் கோட்டுக்கு மேலேயுள்ளவர்களிடம் என்றால், ரூபாய் 205.80 கோடி இழப்பு ஏற்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் இந்த 10 இலட்சம் கார்டுகள் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களிடத்திலா அல்லது மேலே உள்ளவர்களிடத்திலா அல்லது மொத்தமாய் கள்ள மார்க்கெட் பேர்வழிகளிடம் உள்ளதா எனக் கண்டறியப்பட வேண்டும்.

பொது விநியோக முறை 27,650 நியாய விலைக் கடைகளின்மூலம் நிர்வகிக்கப்படுகிறது எனவும், இம்மாநிலத்தில் நடைமுறையிலுள்ள வறியோருக்கு இலக்கிடப்படாத பொது விநியோகத் திட்டம், பொருளாதாரம் சாரா ஏனைய பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவும், மாநிலத்தின் நிதி நிலைமைக்கு பெரும் சுமையாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, உணவுப்பொருள் பாதுகாப்பு முறையின் எதிர்பார்த்த பயன்கள் சேரவேண்டிய ஏழை எளியவர்களுக்குச் சென்றடைவதில்லை என்றும் சரியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

அரிசி சம்பந்தமாக, godown சம்பந்தமாக, இன்று பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய செய்தியைத் தொடர்ந்து, நம்முடைய உணவுத் துறை அமைச்சர் ஓர் அறிக்கையை இங்கே வைத்தார். சுப்ரீம் கோர்ட்கூட, ஏராளமான, இலட்சக்கணக்கான டன்கள் உணவு தானியங்கள் கிடப்பிலே இருக்கிறபோது, பஞ்சத்தாலும், பசியாலும், பட்டினியாலும் மக்கள் வாடுகிறார்கள் என்றும், எலிக்கும், பிராணிகளுக்கும் உணவாகும் இவற்றை ஏன் மக்களுக்குக் கொடுக்கக்கூடாது என்றும் கேள்வியைக் கேட்டிருக்கிறது. இலட்சக்கணக்கான டன் அரிசி, கோதுமை, போன்ற உணவுப் பொருட்கள் godown-ல் இப்போது மட்டுமல்ல, தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளாகப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்திருக்க, மறுபுறம் வறுமையும், பட்டினிச் சாவுகளும் வளர்ந்து வருவதுதான் நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த நாட்டின் நிலைப்பாடாக இருக்கிறது. கிராமப்புற வறுமை மற்றும் வேலையின்மையைப் போக்கும் வகையிலும், இந்த உணவு தானிய சேமிப்பு அதிகரித்து வருவதைத் தவிர்க்கும் பொருட்டும், வேலைக்கு உணவுத் திட்டம் என்பதை நடைமுறைப்படுத்த அரசு முயல வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். தேங்கிய உணவுப் பொருட்களை இலவசமாக வறியவர்களுக்கு விநியோகிக்க உள்ள வாய்ப்புகளை அரசு பரிசீலிக்க

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்வகட்சி மற்றும் பொது ஜன அமைப்பு அதிகாரிகளைக் கொண்ட உணவுப்பொருள் விற்பனை விநியோகக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

*பிற்பகல் 5–55*

அடுத்து நாட்டின் நிதி ஆதாரத்தினுடைய நிலை படுமோசமாக இருப்பது குறித்து குறிப்பிடப்பட்டிருப்பதும், கவர்னர் அறிக்கையிலேயே 7–வது பக்கத்தில், 8–வது விஷயமாக ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கு மத்திய அரசு தருகிற உதவி சம்பந்தமான விஷயத்தில் ஒரு பாரபட்சமான, சர்க்காரியா கமிஷன் அறிக்கைக்கு முரணான, மத்திய மாநில உறவுகளைப் பாதிக்கக்கூடிய நடைமுறையை மத்திய அரசு கடைப்பிடித்து வந்திருக்கிறது. இப்போதும் கடைப்பிடித்து வருகிறது என்பதை நாங்கள் அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகிறோம். இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது போல மத்திய வரிகளின் பங்கு, 1992–93–ல் 20 சதவிகிதமாக இருந்த நிதி ஒதுக்கீடு 1999–2000–ல் 16 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. நிதிக் குழுக்கள் மத்திய–மாநில வரிப் பகிர்வில் இம்மாநிலத்திற்கு உரிய பங்கினை அளிக்க தொடர்ந்து மறுத்து வந்துள்ளன. பத்தாம் நிதிக் குழுவுடன் ஒப்பிடுகையில் பதினோறாம் நிதிக் குழு தமிழ்நாட்டிற்கான மத்திய வரிகளின் பங்கினை 6.637 சதவிகிதத்திலிருந்து 5.385 சதவிகிதமாகக் குறைக்கப் பரிந்துரைத்துள்ளது. இதன் விளைவாக மாநில அரசு 2001–2005 ஆம் ஆண்டுகளில் 2,946 கோடி ரூபாயை இழக்க வேண்டி வரும் என்றும் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வெறும் தகவலாக மாத்திரம் இருக்கக்கூடாது. இந்த விவரங்களைப் புரிந்துகொண்டால் மட்டும் போதாது. நமக்கு உரிய பங்கினைப் பெறுவதற்கு மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய நிலைகளை உறுதியாகத் தெரிவிக்கவேண்டும். மாநில அரசாங்கம் இதுபோன்ற நிதிப் பகிர்வினை மத்திய அரசிடம் வலியுறுத்துவது, கேட்பது என்பது யாசகமாக இருக்கக்கூடாது. மாநிலத்தின் உரிமை என்பதை நாம் அழுத்தமாக வலியுறுத்த வேண்டும். அந்த வகையில் இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய தமிழக மக்களின் நலன்களில் அக்கறை உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் இதில் பொறுப்பு உண்டு என்ற வகையில், இந்த மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கும் மத்திய அரசின் கூட்டணி பங்காளியாக நீடித்துக்கொண்டிருக்கக்கூடிய நிலையில், தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருதி இந்த நிதியைப்



பெறுவதற்கு தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கும், தமிழக மக்களுக்கும் ஒத்துழைக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்து தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பொதுவாக நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் 20 இலட்சம் எக்டேர் நிலத்தை மேம்படுத்துவது குறித்து குறிப்பிடும் அதே நேரத்தில், அவை பண்ணைகளாக மாற்றப்படும் ஒரு அபாயகரமான நிலையை அது உருவாக்கும் என்ற எங்களுடைய அச்சத்தை நாங்கள் வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இங்கே சிலர் குறிப்பிட்டதுபோல தமிழ்நாடு மீண்டும் ஒரு பண்ணை அடிமை நிலையை நோக்கிச் சென்றுவிடக்கூடாது. நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தை எதிர்த்தும், பண்ணை ஆதிக்கத்தை எதிர்த்தும் பகுத்தறிவு இயக்கங்களும், இடதுசாரி இயக்கங்களும் பன்னெடுங்காலமாகப் போராடி வெற்றி கண்டு ஓரளவிற்கு முன்னேறி இருக்கிறோம். முழுமையாக சமுதாய நீதியும், சமூக நீதியும், பொருளாதாரச் சுதந்திரமும், கிராமப்புற மக்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களைப் பாதுகாக்கிற வகையில், அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துகிற வகையில், வறுமையை ஒழிக்கும் திட்டத்தோடு இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் இணைக்கப்பட வேண்டுமென்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து நில உச்சவரம்புச் சட்டத்தைத் தளர்த்துவது என்ற முயற்சியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கவில்லை, கடுமையாக எதிர்க்கிறது. அதிலே இருக்கிற குறைகளை நிவர்த்தி செய்து, நீக்கி, முழுமையாக அமல்நடத்த வேண்டுமென்று சொல்கிறோம். ஒரு நாட்டின் கிராமப்புறப் பொருளாதாரம் முன்னேறாமல் வாங்கும் சக்தி உயருவது என்பதோ, வறுமை ஒழியும் என்பதோ சரியல்ல. வாங்கும் சக்தி உயராமல் புதிய தொழில்கள் தொடங்கப்பட முடியாது என்பதும் நாம் அனைவரும் அறிந்த ஒன்று. மேற்கு வங்கத்தில் 12 இலட்சம் ஏக்கர் நிலங்களை சாதாரணப்பட்ட நிலமற்றவர்களுக்கு விநியோகித்ததன் மூலம் அந்த மாநிலத்தின் கிராமப்புறப் பொருளாதாரம் உயர்ந்து, வளர்ந்து நிலச்சீர்திருத்தச் சட்டத்தை இந்தியாவிலேயே சற்றேறக்குறைய சரியாக அமல்நடத்தி இருக்கிற மாநிலம் அது என்பதை, மாறுபட்ட கொள்கை உடையதாக இருந்தாலும், மத்திய அரசும், திட்டக் கமிஷனும், அங்கீகரித்திருப்பதை நான் இந்த மன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். அந்த வகையில், தீவிரமான நிலச்சீர்திருத்தச் சட்டம் அமல்நடத்தப்படுவதற்கான வகையில் அது திருத்தப்பட வேண்டுமே தவிர, தளர்த்தப்படக் கூடாது என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-00*

கோவை மாநகராட்சி சம்பந்தப்பட்ட சில விஷயங்களை நான் உங்கள் கவனத்திற்கு இங்கே கொண்டுவர வேண்டும். மாநகராட்சிக்குச் சொந்தமான மொத்த கழிவுநீரும் நொய்யல் ஆற்றில் கலக்கிறது. சுற்றுப்புறச் சூழலை அது பாதிக்கிறது. நிலத்தடி நீரைப் பாதிக்கிறது. ஏராளமான பிரச்சினைகள், எதிர்ப்புகள் மக்களிடையே கிளம்பியிருக்கின்றன. ஆகையினால், மாநகராட்சியினுடைய மொத்த கழிவுநீரும் நொய்யல் ஆற்றில் கலப்பதைத் தடுக்கின்ற வகையில் அந்த இடத்தில் ஒரு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

ஒண்டிப்புதூர், வாலாங்குளம் ஆகிய இரண்டு இடங்களில் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட, மத்திய அரசும், இரயில்வே இலாகாவும் நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய நெடுஞ்சாலைத் துறையும் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய இரயில்வே மேம்பாலத் திட்டங்கள் இருக்கின்றன. 12 மேம்பாலங்கள் கட்டுவதற்கு இரயில்வே நிர்வாகத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதிலே ஒண்டிப்புதூர், வாலாங்குளம் ஆகியவற்றிற்கு 29 கோடி ரூபாய் திட்டத்தில் திட்ட ஒதுக்கீடும் செய்யப்பட்டு எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கும் நிலையில் அந்தப் பணிகள் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்றன. உடனடியாக அதைத் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அடுத்து கூட்டுறவுத் துறை சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையில், அந்த ஒட்டுமொத்த முழு துறைக்குள்ளும் நான் இப்போது வரவில்லை. ஆனால், சில வங்கிகளில் நடைபெற்றிருக்கின்ற முறைகேடுகள், ஊழல்கள் இருக்கின்றன. இவை சம்பந்தமான புகார்கள் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. வையம்பாளையம் வேளாண்மைக் கூட்டுறவு நிலவள வங்கியில் சாதாரணப்பட்ட ஜனங்கள் போட்டிருக்கிற வைப்பு நிதி முதிர்வடைந்ததற்குப் பிறகும் 72 இலட்சம் ரூபாயை அவர்களுக்குத் திரும்பக் கொடுக்காமல், கடந்த கால ஆட்சியின்போது அதனுடைய நிர்வாகிகளாக இருந்தவர்களால் ஊழல் செய்யப்பட்டு, கையாடல் நடத்தப்பட்டு, வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு வெளியே வந்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆனால், எங்களைப் பொறுத்தவரை, பாதிக்கப்பட்ட அந்த மக்கள் ஒருபோதும் குற்றவாளிகள்



அல்ல. ஒரு பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக, தங்கள் பணத்தை அங்கே வைப்பு நிதியாக போட்டவர்கள் அவர்கள். அந்த 72 இலட்சம் ரூபாய் நிதியை அவர்களுக்குத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புற மக்களுக்கு நிபந்தனையற்ற பட்டாக்களை வழங்க வேண்டும். இப்போது இருக்கும் நிபந்தனைகள் முழுவதும் தளர்த்தப்பட வேண்டும்.

வெள்ளை அறிக்கையிலே சொல்லியிருக்கக்கூடிய இன்னொரு முக்கியமானதும், கவலை அளிக்கக்கூடியதுமான விஷயம் என்ன என்று சொன்னால், மின்சாரத் துறை சம்பந்தமானது. மின்சாரத் துறை இப்போது சந்திக்கின்ற பிரச்சினைகள், எதிர்காலத்திலே அதன் கதி என்ன ஆகுமோ என்று அச்சப்படுகின்ற நிலையை உருவாக்கியிருக்கிறது. மூன்று கோட்பாடுகள் அதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த மூன்றும், அந்தத் துறையைப் பாதுகாப்பதற்கோ, எதிர்காலத்தில் விரிவான திட்டங்களை உருவாக்கி, தமிழக மக்களைப் பாதுகாப்பதற்கோ உதவியிருப்பதாகத் தோன்றவில்லை. மத்திய அரசாங்கத்தினுடைய நிர்பந்தத்திற்கு (மணியடிக்கப்பெற்றது) அந்த வகையிலே நாம் கட்டுப்படக் கூடாது என்பதையும் நான் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எம். சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீரத்தின் விளைநிலமாம் திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் ஆலையில் பணிபுரிந்து வந்த ஒரு சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்த என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, சான்றோர்கள் இருந்த இந்தச் சபையில் இன்று பேசுவதற்கு வாய்ப்பு அளித்த எங்கள் அன்னை இருக்கின்ற திசை நோக்கி வணங்கி என் கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன். எங்கள் இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆசியோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நீதியோடு தந்துள்ள நிதிநிலை அறிக்கை, அதனோடு இருக்கின்ற வெள்ளை அறிக்கை மூலம் தமிழகம் எந்த அளவிற்கு எல்லாத் துறைகளிலும் நிதி நெருக்கடிகளில் உள்ளது என்பதை ஒப்பிட்டு மனசாட்சியோடு ஆராய்ந்து பார்த்தால், மக்களுக்குப் பயன் அளிப்பதாக ஒரு சிறப்பான பட்ஜெட்டை இதற்கு மேல் யாராலும் அளிக்க முடியாது என்பதைப் பணிவுடன் தெரிவித்து, பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளவைகளை மனதார வரவேற்கிறேன்.

மகளிருக்காக பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சி வர வேண்டும், அம்மா மீண்டும் முதல்வராக வேண்டும் என்பதற்காகத் தைரியம் கூறி, அள்ளி வாக்களித்தவர்கள் தமிழகத்துத் தாய்மார்கள். அதை நன்றியோடு நினைத்து இன்று 12,619 ஊராட்சிகளிலும் ரூபாய் 2 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த மகளிர் துப்புரவு வளாகங்களை ரூபாய் 92 கோடியில் அமைத்துள்ளதை மனதார வரவேற்கிறேன். இந்த நேரத்தில், அம்மா அவர்களுக்குப் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துப்புரவு மகளிர் மையங்கள் சிறப்பாக, வெற்றியுடன் செயல்படும் வண்ணம் இந்தத் திட்டத்துடனேயே ஒரு சுகாதார சிப்பந்தியை நியமிக்கும் அனுமதியும் சேர்த்தே வழங்கினீர்கள் என்று சொன்னால், இந்தத் திட்டம் சிறப்பாக வெற்றியுற அமையும் என்ற கருத்தைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகளிருக்கு, தொலைநோக்குச் சிந்தனையுடன் எல்லோரும் ஒரு வைஜயந்தி, I.P.S., ஆக வர வேண்டுமென்ற நல்லெண்ணத்திலே, I..A.S., I.P.S., Training Centres சென்னை, மதுரை, நகரங்களிலே அமைத்திருப்பதை வரவேற்கிறேன்.

*பிற்பகல் 6–05*

அதோடு மட்டுமல்லாமல், ஆதிதிராவிட பெண்களும் உயர்கல்வி பெற வேண்டும் என்பதற்காக, ப்ளஸ் 1, ப்ளஸ் 2 படிக்கும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கியது, ஆதிதிராவிட மாணவிகளுக்கு மேல்நிலைப் பட்டப்படிப்புவரை இலவசக் கல்வி வழங்கியது, இன்னும் இத்தோடு நிற்காமல், பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரில் ஒரு குழந்தை மட்டும் பெற்ற குடும்பங்களுக்கும், இரண்டு பெண் குழந்தைகளை மட்டும் பெற்ற குடும்பங்களுக்கும் அழகாக ஒரு தொகையை வைப்புத் தொகையாக வழங்கி அவர்களுடைய படிப்பிற்கும், திருமணத்திற்கும், ஒரு பாதுகாப்புத் திட்டத்தை அறிவித்துள்ளதை வரவேற்கிறேன்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப, 7 பிறவியிலும் பயனளிக்கக்கூடிய கல்வித் துறைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள் அம்மா அவர்கள். அதை நன்றியுடன் வரவேற்கிறேன்.



இந்த நேரத்திலே, இந்த மாமன்றத்திலே ஒரு கருத்தைக் கூற நான் ஆசைப்படுகிறேன். எங்களுடைய தொகுதியில் ஒரு சகோதரர், அவர் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர். அவருடைய மகனுக்கு எஞ்ஜினியரிங் கல்லூரியில் இடம் கிடைத்தது. அதில் சேருவதற்குரிய, அந்த கட்டணப் பணமான ரூபாய் 8,000—ஐக் கட்ட முடியாத ஒரு சூழ்நிலையிருந்தும் அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர் எங்களை வந்து அணுகி, என்னால் 8,000—ஐக் கட்ட முடியவில்லை, ஒன்று ரூ.8,000 தாருங்கள், அல்லது கல்லூரியிலே சொல்லி தள்ளுபடி செய்து தாருங்கள் என்று சொன்னார்கள். நீங்கள் கோட்டைக்குச் சென்று அம்மாவைப் பாருங்கள் என்று நாங்கள் சொன்னோம். அம்மா உதவி செய்வார்கள் என்றோம். இவ்வளவுக்கும் எங்களைச் சந்தித்த அந்தச் சகோதரர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர். தேர்தல் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளருக்கு ஆரத்தி எடுத்தவர். இருந்தும் கோட்டைக்குச் சென்று அம்மாவைச் சந்தியுங்கள் என்று சொன்னோம். ஆனால், அம்மா அவர்களோ, அந்தக் குடும்பத்தினர் ஊருக்குச் செல்வதற்கு முன்னதாகவே, அந்தக் குடும்பத்தைச் சார்ந்த அந்த மாணவனுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கி அவர் பொறியியல் கல்லூரியில் படிப்பதற்கு உதவியிருக்கிறார். வலது கை கொடுப்பதை இடது கை அறியாத வண்ணம் வாரி வழங்கியிருக்கும் எங்கள் தாய், தர்மத் தாய்க்கு, தர்மம் தலைகாக்கும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாணவனின் ஏழ்மை நிலையைத்தான் கண்டாரே தவிர, அவர் எந்தக் கட்சியைச் சாாந்தவர், எந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர், எந்த இயக்கத்திற்கு ஆதரவாக இருந்தவர் என்பதை எங்களிடமோ, எங்களுடைய கட்சியிடமோ கலந்து ஆலோசிக்காமல், அவருடைய ஏழ்மை நிலையை நினைத்து அவருக்கு உதவி செய்ததை இந்த நேரத்திலே நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, விளையாட்டுத் துறை. ஒரு நாட்டிலே விளையாட்டு வளர வளரத்தான் சாதி, சண்டைகள் ஒழியும். இந்த மிகப் பெரிய தத்துவத்தை உள்ளடக்கித்தான் அம்மா அவர்கள் விளையாட்டுத் துறைக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு, தமிழகமும் இன்னொரு மாநிலத்தைச் சார்ந்த அணியும் விளையாடியது என்று சொன்னால், நாம் தமிழகம் வெற்றி பெறவேண்டும் என்றுதான் நினைப்போமே தவிர, அதில் விளையாடுபவர்கள் எந்த சாதியைச் சார்ந்தவர்கள், எந்த மதத்தைச் சாாந்தவர்கள் என்று பார்ப்பது கிடையாது. அதைப்போல, இந்தியாவும் வேறு நாடும் விளையாடுகிறபோது, அதில்

இந்தியா வெற்றி பெறவேண்டுமென்றுதான் நினைப்போமேதவிர, இந்தியாவிற்காக விளையாடுபவர்கள் எந்த மாநிலத்தைச் சார்ந்தவர்கள், எந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என்று பார்ப்பது கிடையாது. அப்படிப்பட்ட சாதி, மத வேறுபாடற்ற, ஒருமைப்பாட்டை வளர்க்கக்கூடிய விளையாட்டுத் துறைக்கு அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தந்து விளையாட்டுத் துறையை ஊக்கப்படுத்தியுள்ளார்கள்.

அத்தோடு மட்டும் நிற்காமல், இன்று உங்கள்முன் நிற்கின்ற இந்தச் சாதாரண தொண்டன் சட்டமன்ற உறுப்பினராக ஆவதற்கு முன்பாகவே, கல்லூரியில் நடந்த போட்டிகளிலும் சரி, அதற்கு முன்பு விளையாட்டுத் துறையில் நடந்த போட்டிகளிலும் சரி, ஈட்டிய வெற்றிக்கு ஊக்கப்படுத்தும் வண்ணம் அம்மா அவர்கள் என்னை சென்னை மருத்துவக் கல்லூரியின் செனட் உறுப்பினராக நியமித்திருக்கிறார்கள். அந்தத் தாய் இருக்கிற திசையை நோக்கி வணங்கி என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் தொகுதிக்கு வாருங்கள். இன்னும் 20 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

*பிற்பகல் 6–10*

**திரு. எம். சக்திவேல் முருகன்:** அடுத்து ஒரேயொரு செய்தியைச் சொல்லிவிட்டு என் தொகுதிக்கு வந்துவிடுகிறேன். நீங்கள்தான் எங்களை உற்சாகப்படுத்த வேண்டும். அடுத்து, இங்கே பேசிய எங்கள் கொறடா அவர்கள் காலையிலே ஒன்றைச் சொன்னபோது, எதிர்க்கட்சியைச் சாாந்த அன்புச் சகோதரர்கள் ஆத்திரப்பட்டார்கள். அதற்காக பெரியவர் சோ.பா. அவர்கள் 1971–லே நடந்த சம்பவத்தை இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். நவசக்தி ஆசிரியர் தியாகி 75 வயதானவர், 1971 ஆம் ஆண்டு தேர்தலில் கிடைத்த வெற்றியை எழுதியதற்காக அவர் கைது செய்யப்பட்டதைச் சொன்னார்கள். அத்தோடு மட்டுமல்லாமல், அதன்பின்னர் 25 வருடங்களுக்குப் பிறகு, எங்கள் அம்மா அவர்கள் செய்யாத குற்றத்திற்காக 28 நாட்கள் அவர்களை உள்ளே அடைத்து பழி வாங்கினார்கள். அத்தோடு மட்டும் நிற்கவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலராக நான் இருந்துகொண்டிருக்கின்றேன். ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலர் என்ற காரணத்திற்காக, எங்கள் தொகுதியிலேயுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினை பற்றி நான் கேட்டதற்காக – குடிநீர்ப் பிரச்சினையைக் கேட்ட வகைக்காக மட்டும் – ஜாமீனிலே வெளியே வாமுடியாதபடி மூன்று வழக்குகளைப் பதிவு செய்து என்னை போலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றார்கள். அங்கே இதுகுறித்துக்



கேட்பதற்காக வந்த எனது மனைவி, என்னுடைய சகோதரிகள், என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த 27 பெண்கள் உட்பட, 42 பேர் மேல் – station–க்கு வந்து கேட்டதற்காக அவர்களையும் சேர்த்து – இரண்டே – முக்கால் வருடம் கடந்த ஆட்சியிலே எங்களைக் குடும்பத்தோடு சேர்த்து, குடிநீர்ப் பிரச்சினையில் நியாயம் கேட்டேன் என்ற ஒரே காரணத்திற்காகப் பழிவாங்கினார்கள். எங்களை மட்டுமல்லாமல், எங்கள் தொகுதியைச் சேர்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஊராட்சித் தலைவரையும் கணக்கு என்ற பெயரில் மிரட்டி, பல்வேறு தலைவர்களைப் பதவி நீக்கம் செய்தார்கள். இப்படி பலவேறு நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்கள்.

"பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்."

என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, எங்களுடைய அம்மா அவர்களிடம் அன்போடு நான் வேண்டுகோள் விடுப்பது என்னவென்றால், எங்கள் தொகுதியிலே பொட்டல்புதூர் என்ற முஸ்லீம்கள் வாழும் புனிதத்தலம் ஒன்று இருக்கிறது. அங்கே ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியான அம்பாசமுத்திரம் சுற்றுலாத் தலமாக இருக்கின்றபடியால் போக்குவாத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு போக்குவரத்துக் காவல் நிலையம் ஒன்றும் அமைத்துத் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

அடுத்து எங்கள் பாபநாசம் தொகுதி ஏழு அணைகள் உள்ள தொகுதி. இன்று எங்கள் தொகுதியிலேயிருந்துதான் எல்லாத் தொகுதிகளுக்கும் தண்ணீர் சப்ளை செய்துகொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட வளமான ஏழு அணைகள் கொண்ட தொகுதியில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக அந்த விரைவுப் பேருந்து பணிமனை கடந்த ஆட்சியில் மூடப்பட்டுவிட்டது. மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த விரைவுப் பேருந்து பணிமனையை பாபநாசத்திலே திறந்து வைக்குமாறு இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி அதற்கு வாய்ப்பு இல்லாவிட்டால்கூட, அந்த பஸ்களையாவது பாபநாசத்திலேயிருந்து புறப்பட ஏற்பாடு செய்யுமாறு எங்கள் அம்மா அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தாய் புரட்சித் தலைவி அவர்கள் நீலகிரி தேயிலைத் தோட்ட விவசாயிகளுக்குப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள். அதேபோல அன்று 17 உயிர்களைப் பலிகொண்ட தாமிரபரணி ஆற்றில் நடந்த அந்தச் சம்பவத்திற்குக்

காரணமான மாஞ்சோலை எங்கள் தொகுதியில் அமைந்துள்ளது. மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் நல்லவர்கள். அங்கே இருக்கின்ற நிர்வாகத்தினர் மிகவும் நல்லவர்கள். அப்படிப்பட்ட இருவரையும் இன்று சிலபேர் சுயநலத்திற்காக, சுயவிளம்பரத்திற்காக அங்கே பகடைக்காயாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் தேர்தல் முடிந்த நேரத்திலே நன்றி சொல்லச் சென்றபோது எங்களை அவர்கள் வரவேற்றார்கள். புதிய தமிழகம் கட்சிக்காரர்கள்கூட அம்மா ஆட்சியில் எங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றச் சொல்லுங்கள் என்று உங்களிடம் சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். அம்மா அவர்கள் தயவுகூர்ந்து அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களையும், அந்த முதலாளிகளையும் அரை மணி நேரம் அழைத்துப் பேசினாலே ஒரு மிகப்பெரிய பிரச்சினையான அந்த மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினை நீங்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சிவந்திபுரம் என்ற ஒரு பெரிய ஊராட்சி எங்கள் தொகுதியிலே இருக்கிறது. இந்த ஒரே ஊராட்சிதான் தமிழ்நாட்டிலே உள்ள பெரிய ஊராட்சி. 15 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஊராட்சி, இரண்டு ஒன்றியக் கவுன்சிலர்களைக் கொண்ட ஊராட்சி. அந்த ஊராட்சியிலே 1965 ஆம் ஆண்டு 26/63 என்ற இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் விடுதலையான கிராமம். அந்தக் கிராமத்தில் இன்றுவரை Settlement Officer நியமிக்கப்பட்டும்கூட அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. 592 விவசாயிகளுக்கு பட்டாக்களை வழங்குவதற்கு 1991 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் பட்டா வழங்கப்பட வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்றுவரை பட்டாக்கள் வழங்கப்படவில்லை. அந்த விவசாயிகளுக்கும் நீங்கள் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

365 நாளும் குற்றாலத்தில் தண்ணீர் விழாது. ஆனால், எனது தொகுதியிலே உள்ள அகஸ்தியர் அருவி 365 நாளும் தண்ணீர் வளம் கொழிக்கக்கூடிய இயற்கையான அருவி. தினசரி அங்கே வந்து செல்கின்ற வாகனங்களுக்கு சுற்றுலா ஏற்பாடு சரியான முறையில் இல்லை. அம்மா அவர்கள் கடந்த முறை அதைச் சுற்றுலா மையமாக அறிவித்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம். எனவே, அம்மா அவர்கள் அதைச் சுற்றுலா மையமாக அமல்படுத்துகின்ற வகையில் பயணிகளுக்கு குளிக்க வசதி, வாகனங்கள் நிறுத்த வசதி, இப்படிப் பல்வேறு வசதிகளுக்கு ஏற்பாடு செய்தால், குற்றாலத்தைவிட 365 நாட்களும் மக்கள் அங்கு வர



வசதிப்படக்கூடிய ஒரு செழிப்பான இயற்கை எழில் மிகுந்த பகுதி. அந்தப் பகுதியை அழகுபடுத்தித் தரவேண்டுமென்று அம்மா அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. மருத்துவத் துறையைப் பொறுத்தமட்டில், இன்று வடக்குபாத்தான்குளம் என்ற ஊராட்சியில் உள்ள 30 படுக்கைகள் கொண்ட அந்த மருத்துவமனை துணை G.H.–ஆக இருக்கிறது. அங்கு 15 கிலோ மீட்டர் சுற்றளவில் இலவச மருத்துவமனை வேறு இல்லை. எனவே, அம்மா அவர்கள் அந்தப் பகுதியிலே துணை G.H.–ஐ, G.H.–ஆக upgrade செய்து ஒரு M.B.B.S. மருத்துவரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனை பழமை வாய்ந்த மருத்துவமனை.

*பிற்பகல் 6-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** ஐயா, ஒரேயொரு நிமிடம் கொடுங்கள். இதோ உரையை முடித்துவிடுகிறேன். ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** துணைத் தலைவர் அவர்களே, அது பழமையான மருத்துவமனை. எனவே, அந்தப் பழமையான மருத்துவமனையை விரிவுபடுத்துமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஒரு முக்கியமான பிரச்சினை எனது தொகுதியில் இருக்கிறது. அதை இந்த நேரத்திலே சொல்வதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாபநாசம், சேர்வலாறு, காரையாறு போன்ற பகுதிகளில் ஹைட்ரோ பிரிவின்கீழ் வேலை பார்க்கின்ற E.B. தொழிலாளர்கள் தகுதியிருந்தும், seniority இருந்தும், கடந்த ஆட்சியிலே அவர்கள் பதிவு செய்யப்படாமல் பழி வாங்கப்பட்டார்கள். அந்த 349 பேர்களில் 59 பேர்கள் எனது தொகுதியில் இருக்கின்றார்கள். அந்த 59 பேர்களுக்கும் 1999 ஆம் ஆண்டு ஒரு seniority -யும் 2001 ஆம் ஆண்டு தனது தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்காக ஒரு seniority-யும் என்று இரண்டு seniority-ஐ வைத்து அவர்கள் பழி

வாங்கப்பட்டார்கள். அதற்குள்ள ஆதாரங்களை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே கொடுத்திருக்கின்றேன். எனவே, அம்மா அவர்கள் கருணையோடு அந்த 59 பேர்களுடைய வாழ்விலும் ஒளியேற்றுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாபநாசம் மலைப் பகுதி இப்போது புலிகள் காப்பகமாக இருக்கிறது. இந்தியாவிலுள்ள 6 புலிகள் காப்பகங்களில் முதல் தரமான புலிகள் காப்பகம் எங்கள் தொகுதியைச் சேர்ந்தது. இந்தியாவிலேயே Number one Tiger Project என்ற அந்த அளவுக்கு நாங்கள் பெருமையோடு இந்த புலிகள் காப்பகத்தைக் காத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் புலிகள் காப்பகத்தில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. கே.ஆர். இராமசாமி அவர்கள். (குறுக்கிடு) உட்காருங்கள். இன்னும் எழுதிக் கொடுத்தவர்கள் பேசவேண்டும். திரு. இராமசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** துணைத் தலைவர் அவர்களே, E.B. Licence பற்றி மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீது பேசுவதற்கு...

**திரு. எம். சக்திவேல் முருகன்:** ஐயா, நன்றி மட்டும் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, இராமசாமி அவர்கள், கொஞ்சம் இருங்கள். அவர் நன்றி மட்டும் சொல்லி முடித்துவிடுகிறார்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** இந்த அளவுக்கு எனக்கு கன்னிப் பேச்சை பேசுவதற்கு இந்த மாமன்றத்திலே வாய்ப்பு கொடுத்த எங்கள் அன்னை இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், எனக்கு எல்லோரையும்விட இரண்டு நிமிடங்கள் அதிகம் பேச வாய்ப்பு கொடுத்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த



பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு விவசாயிகளுக்குச் சில சலுகைகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. விவசாயிகளுக்கு வட்டி, தண்ட வட்டி போன்றவை இப்போது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. விவசாயிகள்தான் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று நாம் சொல்வோம். ஆனால், விவசாயிகளுக்கு இப்போது விவசாயம் எவ்வாறு செய்வது, விவசாயம் செய்வதால் என்ன இலாபம் இருக்கிறது என்று எண்ணுகிற நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. நமது தமிழகத்தைப் பொறுத்தமட்டில், விவசாயிகள் நல்ல முறையிலே விவசாயம் செய்ய வேண்டுமென்றால் விவசாயிகள் விளைவித்த பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். குறிப்பாக, நெல்லுக்கு அதிக விலை வழங்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அறுவடை நேரத்திலே விவசாயிகளின் நெல்லைக் கொள்முதல் செய்யவேண்டும். தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் பல பிரச்சினைகளுக்கிடையிலே விவசாயம் செய்கிறார்கள். அவர்களுக்குச் சென்ற ஆண்டிலே ஒதுக்கிக் கொடுத்த விலையைவிட நிச்சயமாக அதிகமான நிதியை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வானம் பார்த்த பூமியாக இருக்கக்கூடிய இராமநாதபுரம், சிவகங்கை போன்ற மாவட்டங்கள் ஏரிகள் அதிகம் நிறைந்த மாவட்டங்கள். அந்தப் பகுதிகளிலே விவசாயம் செய்ய வேண்டுமென்றால் மழைக் காலத்திலே தண்ணீரைத் தேக்கி, பிறகுதான் அதனை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும். அங்கே இருக்கக்கூடிய அத்தனை ஏரிகளையும் குளங்களையும் தூர் வாரி ஆழப்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது உள்ளாட்சித் துறை. உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில் இப்போது மூன்றடுக்கு முறை இருக்கிறது. அதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஊராட்சி மன்றத்திற்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் தொடர்பில்லாத நிலை, அதேபோல ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் தொடர்பில்லாத நிலை. இந்த நிலையை மாற்றியமைக்க நீங்கள் மத்திய அரசிடம் வாதாடிப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு அடுக்கு

முறைதான் தமிழகத்திற்குச் சிறந்ததாக இருக்கும். மூன்றடுக்கு முறையிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதைச் சரிசெய்வதற்கு நமது அரசாங்கம் மத்திய அரசிடம் கேட்டு அதைப் பெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-20*

அடுத்தபடியாக, இப்போது உள்ளாட்சித் தேர்தல்கள் நடப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இன்னும் வாக்காளர் பட்டியல் சரிசெய்யப்படவில்லை. அதை உடனடியாகச் சரிசெய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, இப்போது சுழற்சி முறை இல்லை என்று கூறுகிறார்கள். தேர்தல் நேரத்திலே இப்போது நீங்கள் இருக்கின்ற விகிதாச்சாரத்தை வைத்து இருக்கின்றபடியே தேர்தல் நடத்தினால், பல பகுதிகளிலே, பல இடங்களிலே பாதிப்பு இருக்கிறது. சுழற்சி முறை நிச்சயமாக வேண்டும். இந்தச் சட்டம் கொண்டு வரும்போது, பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டு வரும்போது சுழற்சி முறைக்கு அந்தந்த மாநிலங்கள் ஏற்பாடு செய்துகொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். எனவே, சுழற்சி முறையை இந்த அரசாங்கம் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் சரிசெய்த பிறகுதான் நீங்கள் தேர்தலை நடத்த வேண்டும். அதற்கிடையிலே அவசரப்பட்டு தேர்தலை நடத்தினால் பல பிரச்சினைகள் இதிலே வருவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிதண்ணீர்ப் பிரச்சினை இப்போது சென்னையிலே மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதற்கு இந்த அரசு பல தீவிரமான முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறது. இது ஒருபுறம் இருந்தாலும், கிராமப் பகுதிகளிலே பல குடிதண்ணீர்த் திட்டங்கள் நிதியில்லாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றன. எங்களது மாவட்டங்களிலே, கடலோரப் பகுதிகளிலே கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே பல பிரச்சினைகளுக்கிடையிலே சிறிய சிறிய திட்டங்களை இப்போது பண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால், நிதி இல்லை என்று கூறி இப்போது அந்த வேலைகள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. முதலிலே ஏற்பட்டிருந்த கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்கூட இப்போது செயல்படாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளைச் சேர்ந்த அதிகாரிகளை அணுகி கேட்கும்போது, அவர்கள் எங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று காரணம் கூறுகிறார்கள். இதை நமது அரசு உடனடியாகக் கவனித்து



அந்த நிதிகளையெல்லாம் ஒதுக்கி அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்கள் எல்லாம் அந்தப் பகுதிக்கு வந்து, உண்மை நிலை என்ன என்பதை அறிந்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மக்கள் நல்வாழ்வுத் துறை. இப்போது கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மருத்துவமனைகளிலே போதிய மருத்துவர்கள் இல்லாத நிலை அந்தப் பகுதியிலே இருக்கிறது. குறிப்பாக, திருவாடானை என்பது ஒரு தாலுகா தலைநகரம். அந்த மருத்துவமனையிலே ஒரே ஒரு மருத்துவர் இருக்கிறார். அவர் எங்காவது சென்றுவிட்டால், ஒரு விபத்திலே ஒருவர் இறந்தால், அந்த உடலைப் பரிசோதனை செய்வதற்குக்கூட மருத்துவர் இல்லாத நிலை இருக்கிறது. நான் அந்த மருத்துவமனைக்குச் சென்று விசாரித்தபோது, அங்கே ஏறத்தாழ 6 மருத்துவர்கள் அந்த மருத்துவமனைக்குத் தேவை என்றும், ஆனால், இப்போது இருப்பது ஒரு மருத்துவர்தான் என்றும் கூறினார்கள். அந்த மருத்துவக் கட்டடங்களைச் சுற்றிப் பார்க்கும்போது, காடு மண்டி இருக்கிறது, அங்கே பாம்புகள் அதிகமாக இருக்கின்றன என்றுகூடக் கூறுகிறார்கள். இந்த நிலையை எல்லாம் போக்குவதற்கு இந்த அரசு துரிதமாகச் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்று, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பல மருத்துவமனைகளிலே பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்கு அருகிலே இருக்கக்கூடிய தொண்டி என்ற ஒரு பேரூராட்சியிலே ஒரு மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனை 10 ஆண்டுகளுக்கு முன்பு அரசு மருத்துவமனையாக இருந்தது. அதை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றியிருக்கிறார்கள். அது மிகப் பெரிய நகரம். அங்கே நோயாளிகள் அதிகமாக வருகிறார்கள். அதை மீண்டும் அரசு மருத்துவமனையாக ஆக்கவேண்டும். அந்த மருத்துவமனைக்கும் போதுமான மருத்துவர்களை நீங்கள் நியமனம் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்திலே இந்துக்களும், முஸ்லீம் மக்களும் இப்போது ஒற்றுமையாக வாழ்கிறோம். முஸ்லீம் மக்கள் சில சலுகைகள் வேண்டும் என்று கோருகிறார்கள். குறிப்பாக, அவர்கள் இடஒதுக்கீடு வேண்டும் என்று கோருகிறார்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த முஸ்லீம் இனத்து மக்கள் அவர்கள் தங்களுக்குரிய சதவிகித ஒதுக்கீடுகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். அது நியாயமான கோரிக்கைதான். இன்றைக்கு கேரளாவிலே அது போன்ற ஒரு நிலை இருக்கிறது.

கேரளாவிலே இடஒதுக்கீடுகள் கொடுத்திருக்கிறார்கள். நாம், நமது சட்டமன்றத்திலே ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தால், அதைச் செய்ய முடியும். அரசியல் சாசனம் 16 உட்பிரிவு (4)-ன்படி சட்டத்திருத்தங்கள் கொண்டு வருவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. முஸ்லீம் மக்களும், இந்து மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும், எந்தவிதமான பிரச்சினைகளுமின்றி இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். தீவிரவாதச் செயல்களிலே தலையிடக்கூடியவர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவதிலே மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால், அவர்களுக்குச் சேரவேண்டிய சலுகைகளை இந்த அரசு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-25*

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியிலே ஓரியூர் என்ற இடத்திலே ஒரு கிறித்துவ ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயம் தமிழகத்திலே மிகமிக முக்கியமான ஓர் ஆலயம். அங்கே இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கிறார்கள். அதைச் சுற்றுலாத் துறை ஏற்று, அந்தப் பகுதியைச் சுற்றுலா ஸ்தலமாக அறிவித்து, அதற்குரிய சலுகைகளை எல்லாம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே சாலை வசதி மிகமிக மோசமாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே மிகமிக மோசமான பாதைகள் இருக்கின்றன. கிழக்குக் கடற்கரைச் சாலை அந்தப் பகுதியிலே வருகிறது. அதைக் கேட்டால், நாங்கள் ஒப்பந்தக்காரரிடம் கொடுத்திருக்கிறோம், இன்னும் வேலை செய்யவில்லை என்று 5 ஆண்டுகளாகச் சொல்கிறார்கள். அந்தப் பகுதியிலே எந்தவிதமான வாகனமும் செல்ல முடியாத நிலையிருக்கிறது. அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் உரிய ஏற்பாடு செய்து உடனடியாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சாலைகளைச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டம் மாநிலத்திலேயே மிகமிகப் பின்தங்கிய மாவட்டம். சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் வளர வேண்டிய மாவட்டங்கள். வளர்ந்த மாவட்டங்களுடன் ஒப்பிட்டு, இந்த மாவட்டங்களுக்கும் நீங்கள் நிதியொதுக்கீடு செய்தால், அந்தப் பகுதி இன்னும் பல ஆண்டுகளுக்கு முன்னேறுவதற்கு வாய்ப்பில்லாத ஒரு நிலை ஏற்படும். எனவே, அந்தப் பகுதிகளுக்கு நீங்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியிலே தேவகோட்டை என்ற ஒரு நகரம் இருக்கிறது. அந்தத் தேவகோட்டையிலே 18-11-1999 அன்று ஒரு கோயிலினுடைய தலைமைக் குருக்கள் கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை வழக்கு C.B.C.I.D.-யிடம் ஒப்படைக்கப்பட்டு, ஏறத்தாழ 2 ஆண்டுகள் விசாரணைக்குப் பிறகு ஒரு வீட்டிலே வேலை செய்து கொண்டிருந்த ஒருவரை, இவர்தான் குற்றவாளி என்று இப்போது சொல்லியிருக்கிறார்கள். இந்த 2 ஆண்டுகளுக்கிடையில் நாங்கள் பல போராட்டங்களைச் செய்தோம். பலமுறை Bandh நடத்தி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அப்போதிருந்த முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, விவரம் எல்லாம் சொல்லி, இந்த வழக்கை ஆய்வு செய்து, இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய வேண்டுமென்று நாங்கள் கூறினோம். தொடர்ந்து 2 ஆண்டுகளுக்குப் பிறகு, தேர்தலுக்கு முன்பாக, அந்த C.B.C.I.D. போலீசும், அங்கேயிருக்கக்கூடிய ஒரு D.S.P.-யும் சேர்ந்து அப்பாவி ஒருவனைப் பிடித்து, இவன்தான் குற்றவாளி என்று காட்டியிருக்கிறார்கள். நிச்சயமாக அந்தக் கொலையை அந்த அப்பாவி மனிதன் மாணிக்கம் என்பவர் செய்யவில்லை. ஆனால், செய்த குற்றவாளிகள் இப்போது தப்புவதற்கான திட்டத்திலே காவல் துறையும் சேர்ந்திருக்கிறது. இதற்கு முன்பாக நாங்கள் பல போராட்டங்கள் நடத்தியபோது, குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள்மீது ஏறத்தாழ 6, 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) அத்தனையும் உண்மைக்குப் புறம்பான வழக்குகள். அந்த வழக்குகளின் விவரத்தை நான் அமைச்சரிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இன்றைக்குக்கூட எனக்குத் தொலைபேசி மூலம் தகவல் வந்தது. அங்கேயிருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நகரச் செயலாளரை ரவுடி லிஸ்ட்டிலே சேர்த்துவிடலாம் என்று காவல் துறை முயற்சிப்பதாக எனக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது. இதுபோன்ற ஒரு மோசமான நிலை அந்தப் பகுதியிலே இருக்கிறது. இதைச் சரிசெய்ய இந்த அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, வெள்ளிக்கிழமை (24-8-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 6-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*22. 25–9–1996 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிவிக்கை எண் SROB 186/96–ல் வெளியிடப்பட்ட விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 24–8–1999 ஆம் நாளிட்ட 198–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348* (d) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*23. 1999–2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*24. 1999–2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள். [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)*

*25. 1999–2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

V 21:31(01)
P02.5.2
223439.
சென்னை-600 008

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.